க. 218

தினமணி வெளியீடு : 25 பதிப்பாசிரியர் : பி. ஸ்ரீ.

# உத்தம வாழ்க்கை

(காந்திஜியின் கட்டுரைகள்)

திருவள்ளுவர் நூல் நிலையம்
3591

சங்கு கணேசன்
தொகுத்தவை

PRESENTED BY
V. PR. PL. V. KASIVISVANATHAN
CHETTIAR TO
THIRUVALLUVAR LIBRARY, PAGANERI.



Y. M. C.
ASSOCIATION
PAGANERI.
பாகனேரி

" இருள் அகற்றும்
கைவிளக்கே கற்ற அறிவுடைமை "

PRESENTED BY:
V. PR. PL. M.
KASIVISWANATHAN CHETTIAR
PAGANERI.

தினமணி காரியாலயம்
100, மவுண்டு ரோடு
சென்னை
1945

காபிரைட்] [விலை அணா 8.

## படும் பாடு — பாடும் பாட்டு

“கண்ணான கண்மணியே!
கண்ணிரண்டும் உள் குழிந்து
பொன்னான மேனியெல்லாம்
பொலிவிழந்து போனாயோ?”

“பொல்லாத பூமியிலே
எல்லோரும் வந்தோமே!
சொல்லாமல் கொல்லுதடா
குவலயத்தில் பட்டினிதான்!
உழுதுண்டு வாழ்வதற்கும்
பழுதொன்று வந்ததடா!
முழத் துண்டு மில்லாமல்
முட்டு குளிர் வாட்டுதடா!”

“பட்டணத்தை மோக்ஷமென்று
பாவி வந்துவிட்டேனே!
பட்டணமா? நரகம் இதே!
பரமனுக்கும் கண்ணிலையோ?”

## நல்லகாலம் வருகுது

குடுகுடு குடுகுடு குடுகுடு குடுகுடு ;
நல்லகாலம் வருகுது, நல்லகாலம் வருகுது ;
சாதிகள் சேருது, சண்டைகள் தொலையுது ;
சொல்லடி, சொல்லடி, சக்திமா காளீ !
வேதபுரத் தாருக்கு நல்லகுறி சொல்லு.
தரித்திரம் போகுது, செல்வம் வருகுது ;
படிப்பு வளருது, பாவம் தொலையுது ;
படிச்சவன் சூதும் பாவமும் பண்ணினால்,
போவான், போவான், ஐயோவென்று போவான்!

—பாரதி

---

3591

## வா, வா, வா

1\. ஒளி படைத்த கண்ணினாய் வா வா வா
உறுதி கொண்ட நெஞ்சினாய் வா வா வா

களி படைத்த மொழியினாய் வா வா வா
கடுமை கொண்ட தோளினாய் வா வா வா

தெளிவு பெற்ற மதியினாய் வா வா வா
சிறுமை கண்டு பொங்குவாய் வா வா வா

எளிமை கண் டிரங்குவாய் வா வா வா
ஏறு போல் நடையினாய் வா வா வா

2\. மெய்ம்மை கொண்ட நூலையே—அன்பொடு
வேதமென்று போற்றுவாய் வா வா வா

பொய்ம்மை கூற அஞ்சுவாய் வா வா வா
பொய்ம்மை நூல்கள் எற்றுவாய் வா வா வா

நோய்மை யற்ற சிந்தையாய் வா வா வா
நோய்க ளற்ற உடலினாய் வா வா வா

தெய்வ சாபம் நீங்கவே—நங்கள் சீர்த்
தேச மீது தோன்றுவாய் வா வா வா

—பாரதி

Handloom weavers
plight is bad
They + their dependents
must spin if
they will avoid
ultimate star-
vation or slavery.
You should be
knowing + fear
less. Learn the
method of doubling
done here - If the
handloom weavers
will double the
handspun yarn
they would weave
with ~~less~~ more ease than
the machine yarn.

# காந்தியடிகள் தமிழ்நாட்டுத் தூதுகோஷ்டியினருக்குச் சமீபத்தில் செய்த உபதேசம்

---

## நெசவுத் தொழிலாளர்களைக் குறித்து

கைத்தறி நெசவுத் தொழிலாளர்களின் நிலை மோசமாகவே யிருக்கிறது. அவர்களும் அவர்களைச் சார்ந்தவர்களும் பட்டினிச் சாவையோ அடிமைத் தனத்தையோ முடிவாகத் தவிர்க்க வேண்டுமென்றால், நூல் நூற்றுத்தான் ஆக வேண்டும். நீங்கள் நிலைமையை நன்கு அறிந்து கொள்ள வேண்டும்; அச்சத்தை ஒழிக்க வேண்டும். இங்கே (வர்தாவில்) ரட்டை நூலை இரட்டையாகத் திரிக்கும் முறையைக் கற்றுக் கொள்ளுங்கள். இப்படியே கைத்தறி நெசவாளர்களும் ரட்டை நூலை இரட்டையாகத் திரித்து உபயோகித்துக் கொண்டால், யந்திர நூலைக் காட்டிலும் சுலபமாக நெசவு செய்ய முடியும்.

## வாழ்வா, சாவா?

நம் மக்களுக்கு இயன்ற வரையில் எல்லா வகைகளிலும் உதவி புரிய வேண்டியது அவசியமே. அரசாங்க ஆதிக்கமோ ராக்ஷஸப் பிடியா யிருக்கிறது. ஆம், பரிபூர்ணமான ராக்ஷஸப் பிடிப்பு. இதற்கு ஒருவழி காணவேண்டும், அல்லது அழிய வேண்டியதுதான். ஆனால், அடிமையாக அழியக் கூடாது.

Of course you should help the people in all manner available. The government evil is monstrous. It has been perfected. We have to make the way or perish but not to succumb

# பொருள் அடக்கம்


உத்தம வாழ்க்கை— பக்கம்

1. ஸத்தியம் ... 9
2. அஹிம்ஸை அல்லது அன்பு ... 11
3. பிரம்மசரியம் அல்லது கற்பு ... 16
4. நாவடக்கம் ... 19
5. திருடாமை ... 22
6. உடைமை யின்மை அல்லது வறுமை ... 25
7. அச்சமின்மை ... 27
8. சுதேசியம் ... 30

கீதாபோதனை— ... 35

1. அர்ஜுனன் துயர் ... 36
2. கடமையைச் செய் ... 39
3. பற்றற்ற சேவையே கர்ம யோகம் ... 44
4. சிரத்தையே மனச்சாந்திக்கு வழி ... 51
5. உண்மை யறியும் வழி ... 54
6. முயற்சியுடையோர் இகழ்ச்சி அடையார் ... 58

நீதி தர்மம்—

1. பூர்வ பீடிகை ... 62
2. ஸன்மார்க்கியாக இருக்கவேண்டிய கடமை. 63
3. அதி உத்தம ஸன்மார்க்கம் ... 65
4. ஸன்மார்க்கச் செய்கை என்பது என்ன? ... 66
5. சட்டங்களுக்கெல்லாம் மேலான சட்டம் ... 70
6. மதமும் ஸன்மார்க்கமும் ... 73
7. டார்வினும் ஸன்மார்க்கமும் ... 76
8. ஸன்மார்க்கமும் ஸர்வ ஜகத் க்ஷேமமும் ... 78
9. முடிவுரை ... 81

நடமாடும் கோயில்— அனுபந்தம் ... 83

## ஏழைமை போகாவிடில்?

"இந்தியாவில் கிராமங்கள்தோறும் போய் இந்திய கிராமவாசிகள் அனுபவிக்கும் ஏழைமையைப் பார்த்தால் நெஞ்சம் பதறுகிறது. நமது விவசாயிகளின் ஏழைமைத் தனத்தை எப்படிப் போக்கப் போகிறோம்? அதுவும் சீக்கிரத்தில் போக்குவது எப்படி? இதுதான் நாம் தீர்க்க வேண்டிய முதல் பிரச்னை. மற்றவைகளெல்லாம் அதற்குப் பின்னால் ஆலோசிக்கப்பட வேண்டியவைகளே. இந்த ஏழைமைத்தனத்தை நமது சுதந்திரம் ஒழிக்காதுபோகுமானால், அத்தகைய சுதந்திரம் நாசமாய்ப் போகட்டும்!"

—பண்டித ஜவாஹர்லால் நேரு

"இதுவரையில் காங்கிரஸ்காரர்கள் கதர் விஷயத்தில் விளையாட்டுத்தனமாக நடந்துகொண்டு வந்திருக்கின்றனர். அதன் மகத்துவத்தை அவர்கள் நம்பவில்லை. வெளி வேஷத்திற்காக மாத்திரம் அவர்கள் வேண்டா வெறுப்புடன் கதரை அணிந்து வந்திருக்கின்றனர். நம்மிடையே உண்மையான அஹிம்ஸை பரிமளிக்க வேண்டுமானால் கதரணிவதும் உண்மையானதாக வேண்டும்."

—மகாத்மா காந்தி

"வலுத்துக் கொழுத்த சரீரமுடையவன். இளைத்த ஏழையின் தோள்மீது அவன் ஏறி உட்கார்ந்து கொண்டு விட்டான். படித்தவர்களும் பணக்காரர்களுமாகிய நாம் சமூகத்தில் பெற்றிருக்கும் நிலைமை இதுதான். ஏழைகளுக்கு இரங்குகிறோம். அதிக வருத்தங்கூடத் தெரிவிக்கிறோம். கால்கள் துவண்டு அவன் விழுந்துவிடாதபடி பார்த்துக் கொள்வதற்குப் போதுமான அளவிற்கு அவனுக்குச் சோறும் போடுகிறோம். இயற்கையின் அழகையும் அவனுக்கு வர்ணிக்கிறோம். சங்கீதத்தின் இனிமையையும் எடுத்துச் சொல்லுகிறோம். அது மாத்திரமல்ல, அவனுக்கு வண்டி வண்டியாகப் புத்திமதிகளையுங்கூடத் தாராளமாகச் சொல்லுகிறோம்.

"ஆம், ஏழைக்காக எதை வேண்டுமானாலும் செய்வோம். ஆனால் அவன் தோளைவிட்டு மாத்திரம் இறங்கமாட்டோம்."

—டால்ஸ்டாய்.

3591

# முன்னுரை

இன்று நம் நாட்டில் — ஏன், உலகம் முழுவதுமேதான் — பகட்டு மலிந்திருக்கிறது; குழப்பம் பெருகி யிருக்கிறது. இந்த அவந்தரையில், சத்தியத்தையும் நீதியையும் தேடுவோர் கதி, இருட்டிலே வழி தடவுவோரைப்போல்தான் இருக்கிறது. அப்பேர்ப்பட்டவர்களுக்கு ஒரு கைவிளக்கைப் போன்றது இந்தப் புத்தகம். சாபர்மதி ஆசிரமவாசிகளுக்கு, எரவாடாச் சிறையிலிருந்து, காந்திஜி எழுதிய கடிதங்கள் பெரும்பாலானவை. மற்றும் அவர் எழுதிய சில கட்டுரைகளும் இதில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. காந்திஜியின் முக்கியமான — அடிப்படையான — தத்துவங்கள் அனைத்தும் ஏறக்குறைய இவைகளுக்குள்ளே அடங்கி யிருக்கின்றன என்று சொல்லலாம். அவருடைய ஜீவாதாரமான தத்துவங்களை அடிப்படையாகக் கொண்ட வேலைத் திட்டங்களையும் இவற்றிலே காணலாம்.

சில வருஷங்களுக்கு முன்பு, காந்திஜியின் தத்துவங்களையும் வேலைத் திட்டங்களையும் தமிழ் நாடெங்கும் பரப்பும் கைங்கரியத்தில் ஈடுபட்டு என் பொறுப்பில் வெளியான 'சுதந்திரச் சங்கு'ப் பிரசுரங்களை நண்பர்கள் அறிந்திருப்பார்கள். அந்த மாதிரிப் பிரசுரங்களின் தேவை, முன் எப்பொழுதையும் விட இன்று மிக அதிகமா யிருப்பதாகத் தோன்றுகிறது. அன்று தொடங்கிய காரியத்தைத் தொடர்ந்து புரியவேண்டுமென்ற எனது அவாவின் விளைவு இந்தப் புத்தகம்.

இப்போது உலகெங்குமே ஒரு கொந்தளிப்பு ஏற்பட்டிருக்கிறது; சஞ்சலமும், அநீதியும், குரூரமும், துன்பமும் நிறைந்திருக்கின்றன. இந்த அழகான உலகத்தைப் படைத்த தெய்வம் இப்படி யெல்லாம் இதைக் குரூபம் செய்யுமா? இதெல்லாம் தெய்வ சித்தமா யிருக்க முடியுமா? ஒருநாளுமில்லை. மனிதனுடைய அறியாமைதான் இதற்கெல்லாம் காரணமாகும் என்றே சத்தியத்தை நாடுவோன் நினைப்பான். உலகத்தின் உண்மையான தன்மையைப் புரிந்து கொண்டால், அதை மிகவும் அழகு கொண்டதாகச் செய்துவிடலாம் என்றே அவனுக்குத் தோன்றும். உலகத்

தின் உண்மையான தன்மையைப் புரிந்து கொள்வது மிகவும் சுலபம். ஆனால் மகா கடினமான உழைப்பினால் தான் அது சித்தியாகும். உலகத்தைப் புரிந்து கொள்ளுவதென்றால், அதனிடம் அளவற்ற அனுதாபம் இருந்தால் தான் முடியும். சுயநலத்தை விட்டவர்களுக்குத்தான் அனுதாபம் உண்டாகும். பிறர் நலத்தில் நாட்டங்கொண்டு பொதுஜன சேவை செய்பவனே, சுயநலத்தை விட்டொழிக்க முடியும். மனித குலத்தைத் தொல்லைப்படுத்திவரும் சகல பிரச்னைகளையும் தீர்க்கும் சர்வ சஞ்சீவி பொதுஜன சேவை தான். சேவையே பொய்யர்களை விரட்டியடிக்கத் தைரிய மூட்டும், மிருகத் தன்மையை ஒழிக்கச் சக்தி கொடுக்கும். சேவை செய்வோன், அன்பின் வடிவமான அவனே, பலவான். அவன் சேவை பலவீனரைச் சுரண்டுவதாயிராது; அவர்களுக்கும் பலமுண்டாக்குவதாகவே யிருக்கும். பலவீனர்களை அடிமைகளாக்கி விலங்குகளாய் வாழச் செய்யாமல், அவர்களையும் மனிதர்களாக்கிவிடத் தக்க சந்தர்ப்பங்களை அவர்களுக்குச் சிருஷ்டித்துக் கொடுப்பதுதான், பலவான் பலவீனர்களுக்குச் செய்யத்தக்க – செய்யவேண்டிய – சேவையாகும்.

உலகை அழகு படுத்த இதுவே சுலபமான பரிகாரம். எந்த மனிதனும், எந்த ஸ்திரீயும் ஒரு தீய சிந்தனையோ, தீய செயலோ செய்யவும் தேவையில்லை; செய்தால், உலகின் சௌந்தர்யத்துக்கு ஊனமே ஏற்படும். சகல ஸ்திரீ புருஷர்களும் பெருந்தன்மையிலே வேட்கை கொண்டு, பெருந்தன்மையான செயல்களைப் புரிந்தால்தான், உலகம் அழகுடன் பொலியும். சேவைதான் இப்போது உலகத்துக்குத் தேவை. எவன் ஒருவன் மக்களுக்குத் தன்னலமற்ற சேவை புரிகிறானோ, அவன்தான் தனக்குத்தானே நன்மை புரிந்து கொண்டவனாவான். இந்த அடிப்படையான உண்மையை மனத்தில் கொண்டு, காந்திஜியின் இந்தக் கடிதங்களையும் கட்டுரைகளையும் நாம் படிக்கவேண்டும்.

சகல இயற்கைச் செல்வமும் நிறைந்த இந்த நாட்டிலே, இன்று சோற்றுக்கும் துணிக்கும் பஞ்சம் வந்திருக்கிறது. நம் மக்களின் நன்மைக்காக, அதிக உணவுப் பொருளை விளைவிக்க நாம் பாடுபடவேண்டும். கதரிலே இப்போதாவது நாம் தீவிரமாய் உண்மையான சிரத்தை எடுத்துக்கொள்ளலாம். இன்னும் காலத்தை வீணே கழித்துவிட்டு, மேலும்

கஷ்டமான நிலைமை வந்து விட இடங் கொடுக்காதிருப்போமாக. மில் நூல் கிடைப்பது அரிதா யிருக்கும் இந்தக் காலத்தில், ராட்டினமே கைத்தறி நெசவாளர்களுக்குக் காமதேனுவாய் விளங்கக்கூடியது. ராட்டின நூல், எந்த நெருக்கடியிலும் வற்ருத பொக்கிஷம். ஆனுல், இந்த நெருக்கடியில்கூட அதை நாம் சரியாய்க் கவனிக்கவில்லை. கதர் - இயக்கம் ஒழுங்காயும் உண்மையாயும் நடந்து வந்திருக்குமானுல், இன்று நாட்டிலே துளிகூடத் துணிப் பஞ்சம் ஏற்பட்டிராது. கதர்-இயக்கம் ஏன் பூர்ண வெற்றி யடையவில்லை? அதற்கு நம் அரசியல் வாதிகளே காரணம் ஆவார்கள். கதரியக்கத்தை அரசியல் வாதிகள் தங்கள் அரசியல் விளம்பரச் சாக்காகப் பயன்படுத்திக் கொண்டார்களே யல்லாமல், பலவீனர்களைப் பலவான்களாக்கும் தொண்டாகச் செய்துகொள்ள வில்லை. பாமர மக்களைச் சுரண்டுவதற்கு, கதரையும் அவர்கள் ஒரு சாதனமாகச் செய்துகொண்டு விட்டார்கள். இனியாவது நாம் இம்மாதிரிச் சுரண்டல்களுக்கு இடங்கொடாமல், ஒழுங்கான முறையில் கதர் - இயக்கத்தை வளர்க்கவேண்டும். கதரின் உட்கருத்து சேவையேயாகும். கீதை உபதேசிக்கும் தர்மத்தின் கருத்தும் இதுதான். கதர் தன்னம்பிக்கையை ஊட்டுவது; தன் மதிப்பைப் போதிப்பது. அந்த இயக்கத்தின் உட்கருத்தை உணர்ந்து, அதை நாம் வளர்க்கவேண்டும். அந்த இயக்கத்திலே நமக்கு உண்மையான ஆர்வம் இருக்குமானுல், இயக்கத்தில் சேர்ந்துள்ள புல்லுருவிகளை அலட்சியம் செய்துவிட்டு, இயக்கத்தின் மேன்மையை எண்ணி நமது சேவையைச் செய்து வருவோம். மனிதர்களை மறந்துவிட்டுக் கொள்கையையே பெரிதாக மதித்து நாம் சேவை செய்தால்தான், எந்த நிர்மாண இயக்கமும் வெற்றி பெறும். இதுவே வறுமையை ஒழித்து, உலகத்தை அழகுபெறச் செய்யும் மார்க்கம்.

கிராமப் புனருத்தாரணம் சம்பந்தமான இன்னும் பற்பல திட்டங்களையும் இதே முறையில்தான் நாம் நிறைவேற்றவேண்டும். அந்தந்த இடத்தின் தேவைகளையும் வசதிகளையும் ஆராய்ந்து, அது அதற்கேற்ற வேலைகளை வகுத்துக் கொண்டு அவைகளை நாம் புரியவேண்டும். இந்த நவீன நாகரிக காலமான 1945-ம் வருஷத்திலேகூட, சில கிராமங்களில் நடுத்தர வகுப்புக் குடும்பப் பெண்கள், இலைகளைத்

தைத்துத் தினந்தோறும் இரண்டணுச் சம்பாதித்து வருவதை நாம் காண்கிறோம். மாடு மேய்ப்பவர்களும் வண்ணார்களும் தங்களுக்குக் கூலியாகத் தினந்தோறும் ஒரு பிடி சோறு வாங்கிக் கொள்வதையும் நாம் பார்க்கிறோம். இவ்வளவு தரித்திரத்தைப் போக்குவதற்கு என்ன வழி? ஒவ்வொரு கிராமத்தையும் வளம் மிகுந்ததாக, தன் தேவைகளை யெல்லாம் தானே பூர்த்திசெய்து கொள்ளக்கூடியதாக, புனர் நிர்மாணம் செய்வதுதான் வழியாகும். இதற்கெல்லாம், உத்தமமான சேவை-உணர்ச்சி வேண்டும். அந்த உணர்ச்சியின் அவசியத்தைத்தான் காந்திஜியின் இந்தக் கடிதங்களிலும் கட்டுரைகளிலும் நாம் உணர்கிறோம்.

எந்த ஆசிரம வாசிகளுக்கு இந்த உபதேசங்களை காந்திஜி செய்தாரோ, அந்த ஆசிரமம் இன்று இல்லை. அதை அவர் கலைத்துவிட்டார். அந்த ஆசிரமம் வெற்றி பெருது போயிருக்குமானுல், அதற்குக் காரணம் கொள்கைகளின் குறைபாடல்ல. இந்த வேலைகளை மற்றவர்கள் கைக்கொண்டு நடத்தக் கூடாதென்பதுமில்லை. வியாபாரமாகவோ, அரசியல் - போர்வையாகவோ, இந்த வேலைகளில் ஈடுபடாமல் சேவை - உணர்ச்சியோடு ஈடுபடுவோருக்கு வெற்றி நிச்சயம். ஓர் ஆசிரமம் தோற்ருல், எந்தப் படுகுழிகள் அதற்குக் காரணம் என்ற பாடத்தை அதனின்றும் நாம் கற்றுக்கொண்டு, ஜாக்கிரதையாக அவைகளை விலக்கி உண்மையான சேவை புரிந்து, வெற்றியும் மனச்சாந்தியும் மகிழ்ச்சியும் பெறுவோமாக!

— சங்கு கணேசன்

★

# உத்தம வாழ்க்கை

## 1. ஸத்தியம்

ஸத்தியாக்கிரக ஆச்ரமம் ஸத்தியத்தை நாடுவதற்கும், அதை அப்பியசிப்பதற்குமே ஸ்தாபிக்கப்பட்டதால், அந்த ஸத்தியத்தை முதன்முதலாக எடுத்துக் கொள்ளுகிறேன்.

'ஸத்' என்னும் சொல்லுக்கு 'இருத்தல்' என்பது பொருள்; அதிலிருந்து ஸத்யம் (உண்மை) என்பது பிறந்தது. ஆகையால்தான் கடவுளின் திரு நாமங்களுள் 'ஸத்' அல்லது உண்மை என்பது முக்கியமானதாக இருக்கிறது. கடவுளே ஸத்தியம் என்று சொல்வதைவிட, ஸத்தியமே கடவுள் என்பதே சரியானது. ஒரு ராஜன் அல்லது தலைவன் இல்லாமல் நாம் வாழ்வது முடியாதாகையால், ஈச்வரனுக்கு 'மன்னர் மன்னன்' என்றும் 'ஸர்வ சக்தி' என்றும் நாம் பெயரிட்டிருக்கிறோம்; அப்பெயர்களே அதிகமாக உபயோகிக்கப்படுகின்றன. ஆனால், நன்றாய் யோசித்துப் பார்ப்போமானால், 'ஸத்' அல்லது ஸத்தியம் என்னும் பெயரே அவருக்கு நன்றாகப் பொருந்தின பெயரென்பதும், அவருடைய முழுத் தன்மையையும் நன்றாக அறிவிப்பது அதுவே என்பதும் விளங்கும்.

எங்கே ஸத்தியம் உண்டோ அங்கே ஞானம் உண்டு; அந்த ஞானமும் பரிசுத்த ஞானமாயிருக்கும். எங்கே ஸத்திய மில்லையோ அங்கே உண்மையான ஞானமும் இராது. ஆதலால்தான் ஈச்வரனைக் குறிக்கும்போது 'சித்' என்று கூறுகிறார்கள். எங்கே உண்மையான ஞான முண்டோ அங்கே ஆநந்தமும் இருக்கும். துக்கத்திற்கு அங்கே இடமில்லை. ஸத்தியம் சாச்வதப் பொருளாயிருப்பது போல, அதிலிருந்து பிறக்கும் ஆநந்தமும் அழியாத வஸ்துவே. ஆகையால் நாம் கடவுளை 'ஸச்சிதாநந்தம்' என்கிறோம். அதாவது ஈச்வரன் ஸத்தியம், ஞானம், ஆநந்தம் இவற்றின் தொகுதியே என்றாகிறது.

நாம் ஜீவித்திருப்பதற்கு முக்கிய ஆதாரம் இந்த ஸத்தியமே. நம் காரியங்களனைத்தும் ஸத்தியத்தைச் சூழ்ந்தே இருத்தல் வேண்டும். ஸத்தியமே நம் வாழ்க்

கையின் மூச்சுக் காற்ருய் இருத்தல் வேண்டும். பிரயாணியின் யாத்ரா மார்க்கத்தில் இந்த நிலை அடையப்படுமாளுல், நல் வாழ்க்கைக்கு உரிய எல்லா நன்னடத்தைகளும் தாமே படிந்துவிடும். அவற்றைப் பின்பற்றுவதும் மிக இலகுவாகும். ஆனுல் ஸத்தியமில்லாமல், வாழ்க்கையின் எந்த வசதியையும் அல்லது முறையையும் கையாளுதல் இயலாத காரியம்.

சாதாரணமாகப் பேசும்போது ஸத்திய தர்ம அநுஷ்டானம் என்பது உண்மையைப் பேசுவதே என்ற அர்த்தத்தைத் தருகிறது. ஆனுல் நமது ஆச்ரமத்தில் ஸத்தியம் என்ற சொல்லுக்கு மிக விரிந்த அர்த்தத்தை நாம் கொடுக்கிருேம். மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்றிலும் ஸத்தியத்தின் அவசியத்தை நாம் வற்புறுத்துகிருேம். இந்தமாதிரி ஸத்தியத்தின் முழுப் பொருளையும் ஒருவர் தெரிந்துகொள்வாராளுல், அவர் இன்னும் அதிகமாகத் தெரிந்துகொள்ள வேண்டுவது ஒன்றுமிராது; ஏனெனில் ஸத்தியத்திற்குள் அகப்படாத ஞானம் வேறென்றும் இல்லை. ஸத்தியத்திற்குள் அகப்படாத அறிவு உண்மையறிவு ஆகாது. உண்மையறிவு இல்லாவிட்டால், மனத்திற்குச் சாந்தி ஏற்படாது. ஸத்திய சோதனைக்கு இதுவே வழி. இதை ஒருவர் தெரிந்துகொண்டால், செய்யத்தக்கது எது, பார்க்கத் தக்கது எது, படிக்கத் தக்கது எது என்று அவருக்கு நிச்சயமாய்த் தெரிந்துவிடும்.

ஆனுல், கற்பக விருக்ஷம் போலவும், காமதேனுப் போலவுமிருக்கும் இந்த ஸத்தியத்தை இன்னதென்று ஒருவர் அறிவது எப்படி? 'அப்பியாசத்தாலும், வைராக்கியத்தாலும் இதனை அடையலாம்' என்று பகவத்கீதை கூறுகிறது. சலிப்பில்லாத சிரத்தையே அப்பியாசத்துக்குக் காரணம்; வேறென்றையும் நோக்காத நிலையே வைராக்கியமாகும். அவ்வித அப்பியாசம் ஒருவருக்கு இருந்தாலும், ஸத்தியம் நன்ருக அவருக்குப் புலப்படும் என்று சொல்லுவதற்கில்லை; ஒருவருக்கு உண்மையாகத் தோன்றுவது இன்னொருவருக்கு உண்மையென்று படவேண்டும் என்ற அவசியம் இல்லை. ஆனுல் உண்மையை நாடுகிறவர் இதைப்பற்றி விசாரப்பட வேண்டுவதில்லை. யோக்கியமான முயற்சி மாத்திரம் இருக்குமாளுல், பல உண்மைகளாக விளங்குவன எல்லாம் ஒரே மரத்தின் பல இலைகளைப் போன்றனவே என்பது நன்ருய் விளங்கும். ஈச்வரன் ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு விதமாகத் தோன்றவில்லையா? இருந்தாலும்,

அவர் ஒருவரே என்பதை நாம் எல்லோரும் அறிகிறோமல்லவா? ஸத்தியம் என்பது ஈசுவரனின் பெயரே; ஆகையால் ஒவ்வொருவரும் அவரவர் புத்திக்கு ஒத்தபடி சத்தியத்தை உணர்ந்து அனுஷ்டிப்பதில் பிழை யில்லை. அப்படிச் செய்வதே நமது கடமையும் ஆகும். அப்படி அனுஷ்டிப்பதில் ஏதாவது பிசகு இருக்குமானால் அந்தப் பிசகு, தானே சரியாய்ப் போய்விடும். ஸத்திய ஆராய்ச்சி என்பது ஒருவிதத் தவமே—அத்தவத்தில் நிரம்பின துன்பமும் கஷ்டமும் உண்டு; சில சமயங்களில் சாவும் நேரக்கூடும். இப்படிப்பட்ட முயற்சியில் தன்னலம் என்பதற்கு அணுவளவும் இடமில்லை. தன்னலமற்ற ஸத்திய சோதனையை ஒருவர் செய்து வருவாரானால், அவருக்கு இடர்ப்பாடு நீடித்திராது. அப்படி ஏதாவது ஓர் இடர்ப்பாடு நேருமானால், அதனை அவர் உடனே அறிந்துகொள்ளக்கூடும். அதனால் அவர் உடனே தம் வழியை மாற்றிக்கொள்ளலாம். ஆதலால் ஸத்தியத்தை நாடுவதென்பது உண்மையான வழி; ஆகையால் இவ் வழியே செல்வதில் பயங்காளித் தனம், தோல்வி என்பவைகளுக்கு இடமே யில்லை. ஸத்தியம் ஒரு ரக்ஷை யாகிறது; இந்த ரக்ஷையால், சாவை ஒருவர் தாம் சாச்வத வாழ்க்கையில் நுழையும் வாசற்படியாக ஆக்கிக்கொள்ளலாம்.

இவற்றை நினைக்கும்போது நாம் ஹரிச்சந்திரன், பிரகலாதன், ராமசந்திரன், ஹாஸன் இமாம், ஹுஸேன் இமாம், கிறிஸ்தவ மஹான்கள் முதலியோரை ஞாபகப்படுத்திக் கொள்ளவேண்டும். வேலை செய்தும், உண்டும், குடித்தும், விளையாடியும் திரியும் ஜாக்கிரத்திலும், கனவற்ற சுத்த உறக்கநிலை வராத தூக்கத்திலும், நாம் அனைவரும், ஸ்திரீ புருஷர்களாகிய யாவரும், இளைஞர் விருத்தர் ஆகிய எல்லோரும், ஸத்தியசீலர்களாக ஆவோமானால், எவ்வளவு அழகாய் இருக்கும்? ஸத்திய ரூபியான ஈச்வரனே என்னுடைய விலையற்ற பொக்கிஷமாவார்; நம்முள் ஒவ்வொருவருக்கும் அவர் அங்ஙனமே அமைக.

## 2. அஹிம்ஸை அல்லது அன்பு

நான் அஹிம்ஸையைப் பற்றி எழுத நினைக்கும்போது என் மனத்தில் ஒரு வேடிக்கையான—ஆனால் துன்பகரமான—சந்தர்ப்பம் நினைவுக்கு வருகிறது. உள்ளே துணி

கொடுத்த காகித உறைகளைத் தபால் அனுப்ப உபயோகிக்கலாமாவென்று நாங்கள் ஆலோசித்துக்கொண்டிருந்தோம். ஒரு முறை உபயோகித்ததையே மறு முறையும் உபயோகிக்க அவை உதவும் என்பது எங்கள் எண்ணம். அவற்றின் மேலே முழுமையும் புதிய விலாசம் எழுதக் காகிதம் ஒட்டுவதா, அல்லது எழுத்துள்ள இடத்தில் மாத்திரம் ஒட்டுவதா என்று எங்களுக்குள் வாதம் நடந்து வந்தது. காலை ஜப நேரத்துக்குப் பின், எங்கள் மிகவும் அருமையான காலை நேரத்தில் கால் மணி இந்தப் பிரயோஜன மற்ற தர்க்கத்தில் செலவழித்தோம். பேச்சில் ஸத்திய மிழத்தல், அஹிம்ஸை, நல்ல அறிவு ஆகிய இவை பாதிக்கப்பட்டன. இந்த வாதத்தில் ஸத்திய நோக்கம் ஒன்றும் இல்லாததால் ஸத்தியம் புண்பட்டது. ஒவ்வொரு மனிதரும் தம் நேரத்தின் ஒவ்வொரு நிமிஷத்தையும் பிறர் துன்பங்களைக் கண்டறிதலிலும், அவற்றைப் போக்கடித்தலிலும் செலவிட வேண்டுமே யன்றி, பயனில்லாத விவாதத்தில் பதினைந்து நிமிஷங்களைக் கழிப்பதால், 'அஹிம்ஸா' தர்மத்திற்குக் கெடுதி யுண்டாக்குவதாகும். மேலும் பேச்சில் அளவு என்பது சிறிதும் கவனிக்கப்படவில்லை. சிறிது புத்தியை உபயோகித்திருந்தால், வாதம் முழுவதையும் ஒரு விநாடியில் முடித்திருக்கக் கூடும். பொதுஜனங்களுக்கு உரியதான அரிய பதினைந்து நிமிஷங்களை நாங்கள் போக்கடித்துக் குற்றத்தைப் பிறகு உணர்ந்தோம். பிறகாவது எங்களுக்குப் புத்தி வந்ததை நினைத்து ஈச்வரனுக்கு நன்றிகூறினோம்.

இந்த வரலாற்றை இங்கே நான் கூறவேண்டியது ஏனெனில், ஸத்தியத்தின் பாதையைப் போலவே அஹிம்ஸையின் பாதையும் மிகக் குறுகலாகவும் மிகவும் நேராகவும் இருக்கிறதாகையால் அதனைக் காட்ட இவ்வாறு முகவுரை கூறுவது அவசியம் என்று தோன்றிற்று. ஒரு கத்தி முனையில் நடப்பதற்கு இதை ஒப்பிடலாம். மிக ஜாக்கிரதையுடனிருப்பதால் ஒரு வித்தையாடிக்குக் கயிற்றின்மேல் நடப்பது சாத்தியமாகலாம். ஆனால் ஸத்தியம், அஹிம்ஸை ஆகிய இவற்றின் பாதையில் நடப்பதற்கு வேண்டிய உன்னிப்பு மிகப் பெரியதாக வேண்டியிருக்கிறது. அணுவளவு கவனக் குறைவு இருக்குமானல் ஒருவர் ஒரே அடியாய்க் கீழே விழவேண்டியதுதான். இன்னும் இடைவிடாத முயற்சியாலேதான் ஸத்தியம் இன்னதென்றும், அஹிம்ஸை இன்னதென்றும் ஒருவருக்குத் தெரியவரும்.

இந்த மானிட சரீரத்தில் இருக்கும்வரையில் பூரண ஸத்தியத்தை ஒருவர் நன்ருக அறிவதென்பது அசாத்தியம். நாம் மனக் கண்ணுல் அதனை ஒருவாறு நினைத்துப் பார்க்கலாம். ஸத்தியம் சாச்வதமானது; அதனை நேருக்கு நேராகக் காண்பதென்பது அழியும் உடலாகிய இதனிலிருந்து ஆகக்கூடியது அன்று. ஆதலால் 'நம்பிக்கை' கொண்டுதான் நாம் மேலே செல்லவேண்டும்.

பண்டைக் காலத்து ஸத்தியசீலர்கள் இந்த முறையில் தான் முயன்று ஸத்தியத்தைக் கண்டுகொண்டார்கள். "எனக்குத் துன்பங்களை ஆக்கிக் கொடுக்கிறவர்களோடு நான் சேர்ந்து வாழவேண்டுமா? அவர்களை ஒழித்துவிட வேண்டுமா?" என்ற கேள்வி அவர்கள் மனத்தில் தோன்றியது. அழித்துக்கொண்டே செல்பவருக்கு முன்னேற்றம் கிடையாதென்பதையும், அவர் இருந்த இடத்திலேதான் இருக்கவேண்டுமென்பதையும், கஷ்டங்களை உண்டாக்குகிறவர்களோடு இருந்துகொண்டு வாழ்கிறவர் மேல் நோக்கிச் சென்றுகொண்டிருக்கிருர்களென்பதையும், சிற்சில சமயங்களில் அவர் தம்முடன் இருப்பவரையும் சிறிது தூரமாவது அழைத்துச் செல்லுதலும் கூடும் என்பதையும், அவர்கள் கண்டு கொண்டார்கள். நாம் தேடுகிற ஸத்தியம் என்பது நமக்குள்ளேயே இருக்கும் ஒன்றேயன்றி வெளியிலே காணப்படும் ஒன்றன்று. ஆகையால் ஒருவர் எவ்வளவுக் கெவ்வளவு வெளியில் உள்ளவற்றை அழிக்க முயலுகிருரோ, அவ்வளவுக் கவ்வளவு ஸத்தியத்தினின்று அகன்று செல்லுகிருர். இல்லாத ஒரு விரோதியை வெளியில் தேட முயல்வதில், உள்ளே இருக்கிற விரோதிக்கு வளர அதிக இடம் உண்டாகி விடுகிறது.

நாம் திருடர்களைப் பிடித்து நசுக்குகிருேம்: ஏன்? அவர்கள் நமக்குத் துன்பத்தைக் கொடுத்தலால்தானே? நம்மை அவர்கள் விட்டுவிட்டால் அவர்கள் கவனம் வேறு மனிதர்களிடம் பாய்கிறது. அந்த வேறு மனிதர் யார்? வேறு உருவத்திலிருக்கும் நாமே அவ்வேறு மனிதர்: ஆகையால் நமக்கு விடுதலை இல்லை; திருடர்களால் உண்டாகும் துன்பம் அதிகரிக்கிறதே யன்றிக் குறைகிறதில்லை. அவர்கள் தங்கள் தொழில் திருடுதலே என்றெண்ணுகிருர்கள். அனுபவம் முதிர முதிரத் திருடர்களை அழிக்க முயல்வதைக் காட்டிலும் அவர்களின் துன்பத்தைச் சகித்துக்கொண்டிருப்பது மிகவும் மேல் என்று தோன்றி விடுகிறது. நம் பொறுமை ஒருகால் அவர்களுக்கு நல்ல

புத்தியைப் புகட்டக் கூடும்: அவர்கள் ஹிம்ஸையைப் பொறுப்பதால் நமக்கு ஒரு புதிய எண்ணம் தோன்று கிறது. திருடர்கள் நம்மினும் வேறுபட்டவர்கள் அல்ல ரென்றும், நம்மோடு ரத்தக் கலப்புள்ள சகோதரர்களும் தோழர்களுமே அவர்களென்றும், அவர்களைத் தண்டிப் பது சரியன்றென்றும், கொஞ்சம் கொஞ்சமாக நாம் எண்ணத் தொடங்குகிறோம். ஆனால் திருடர்களை நாம் சகித்துக்கொண்டாலும், அவர்கள் செய்யும் துன்பங் களைப் பொறுத்துக் கொள்ளுதல் என்பது ஒருவரைப் பயங்காளியாக ஆக்கும். ஆதலால் நம் கடமை இன்னும் பெருகுகிறதை நாம் அறிகிறோம். திருடர்கள் நமக்கு உறவினர்கள் என்று நாம் உணர்வதோடு நில்லாமல், அவ்வுணர்ச்சியை அவர்களும் பெறுமாறு செய்யவேண்டிய கடமையும் நமக்கு உண்டாகிறது. ஆதலால் அவர்களை நம் பக்கத்துக்குக் கொண்டுவந்து சேர்க்க வழிகளையும் துறைகளையும் நாம் ஆராயவேண்டும். இதுதான் அஹிம்ஸா மார்க்கம். இது தொடர்ந்த துன்பத்தில் நம்மை ஆழ்த்தும்; முடிவில்லாத பொறுமையில் நம்மைக் கொண்டு செலுத்தும். இந்த இரண்டும் நமக்கு ஏற்படு மானால் திருடன் என்றைக்காவது ஒருநாள் நம் வழிக்கு வராமல் போகமாட்டான். இம்மாதிரி நாம் படிப்படியாக உலகம் முழுவதுடனும் நட்புச் செய்ய முயலுகிறோம். ஈசுவரனுடைய - ஸத்தியத்தினுடைய - மகத்வத்தை நாம் அறிகிறோம். நாம் பெரிதும் துன்பப்பட்டபோதிலும் நம் மனம் அதிக சாந்தியை யடைகிறது. நாம் அதிக தைரியமும் தீரமும் பெறுகிறோம். சாச்வதமானது எது, அல்லாதது எது? — என்பது நமக்கு நன்ருகத் தெரிந்து விடுகிறது. நம் கடமை எது, அல்லாதது எது?—என்பதை யும் நாம் அறிகிறோம். நம் கர்வம் கரைந்தோடி விடு கிறது; தாழ்ந்த அடக்கம் நமக்குச் சொந்தமாகிறது. உலகப் பற்றுதல் குறைகின்றது; நம் முன்னிருக்கும் தீமைகளும் நாளுக்கு நாள் தேய்கின்றன.

* * *

ஒரு ஜீவனையும் துன்புறுத்தாமை என்பது அஹிம்ஸை யின் ஓர் அம்சம் என்பதற்குச் சந்தேகமில்லை. ஆனால் அதுவேதான் முழுமையும் என்பது தவறு. அவசரத் தாலோ, பொய், பொருமை, பிறர்க்குத் துன்பம் நினைத் தல் போன்றவற்ருலோ உண்டாகும் ஒவ்வொரு தீய எண்ணமும் அஹிம்ஸா தர்ம விருக்ஷத்தை வெட்டும்

கோடரி வெட்டாகும். இன்னும் உலகத்துக்கு ஏதொன்று தேவையோ அதனை நாம் செய்யாமலிருப்பதும் அஹிம்ஸா தர்மத்திற்குப் பங்கம் விளைவிப்பதாகும். நாம் தினந்தோறும் உண்ணும் வஸ்துக்களுங்கூட உலகத்துக்கு வேண்டியனவே. நாம் நிற்கும் சிறிய அடிப் பரப்பில் கோடிக்கணக்கான கிருமிகள் வாழ்கின்றன; அந்த நிலம் அவற்றிற்குச் சொந்தமானவை. நாம் அவற்றை மிதித்துக் கொல்லுகிறோம். இதற்காக நாம் செய்வதென்ன? தற்கொலை செய்துகொள்வதா? அதுவும் ஒரு பிராயச்சித்தமாகாது. ஏனெனில் உடல் மீது ஆத்மா பற்று வைத்திருக்கும்வரையில் உடல் அழிந்தவுடன் ஆத்மா மற்றோர் உடலோடு சேர்ந்துகொள்ளுவதால், பிராயச்சித்தம் எவ்வாறு ஏற்படும்? உடலில் அபிமானத்தை விட்டால்தான், உடல் என்பது அழிந்ததாகும். இவ்வித 'அபிமான விடுதலை' தான் ஈச்வரனை ஸத்திய ரூபியாக அறிதலாகும். இப்படிப்பட்ட அறிவு அவசரத்தில் ஏற்படாது. உடல் நமக்குச் சொந்தமானதன்று. அது உள்ளவரையில் நம்மிடம் வைக்கப்பட்டுள்ள ஓர் அடைக்கலப் பொருள் என்று அதை நாம் கருதவேண்டும். உடல் சம்பந்தமான வஸ்துக்களை இவ்வாறு எண்ணுவதால், உடல்-பாரத்தினின்று விடுதலை பெறும் காலத்தை ஒருநாள் நாம் எதிர்பார்க்கலாம். அதுவரை உடலுக்கும் நமக்குமுள்ள பந்தத்தை அறிந்துகொள்ளுவதிலிருக்கும் கஷ்டத்தை அறிந்துகொண்டு, நம் சக்திக்குத் தக்கவாறு நம் லக்ஷ்யத்தை நோக்கி உழைக்கவேண்டும்.

மேலே சொன்னவற்றிலிருந்து 'அஹிம்ஸை' இல்லாமல் ஸத்தியத்தை அறிவது முடியாது என்பது ஒருவாறு தெரியவரலாம். அஹிம்ஸையும் ஸத்தியமும் நன்றாகப் பிணைந்திருக்கின்றன. அவற்றைப் பிரித்தெடுப்பது என்பது முற்றிலும் ஆகாத காரியம். ஒரு நாணயம் அல்லது உலோகத்தால் அடிக்கப்பட்ட ஒரு சில்லின் இரண்டு புறங்களுக்கு அதனை ஒப்பிடலாம். எது தலை, எது மறு-தலை என்று யாரால் கூறமுடியும்? இருந்தாலும் அஹிம்ஸை வழி, ஸத்தியம் லக்ஷ்யம் என்று வைத்துக் கொள்வது ஏற்றதாகும். வழி என்பது நம்மால் பின்பற்றத் தக்கதாய் இருத்தல் வேண்டும்; வழியை நாம் நேராகப் பின்பற்றினால், சீக்கிரமாகவோ தாமதமாகவோ நம் எல்லையை அடைவது நிச்சயம். இந்த நுட்பத்தை நாம் கெட்டியாகப் பிடித்துக் கொள்வோமானால் வெற்றி பெறுவதில் சந்தேகமேயில்லை. நமக்குத் துன்பங்கள் எவ்

வளவு வருவனபோலத் தோன்றினாலும், நாம் ஸத்தியத்தி னின்று வழுவாமல் இருக்கவேண்டும். ஸத்தியம் ஒன்றே இருப்பது; ஸத்தியம் ஒன்றே கடவுள்.

## 3. பிரம்மசரியம் அல்லது கற்பு

நம் அனுஷ்டானங்களுள் மூன்றாவது பிரம்மசரியம் ஆகும். ஆலோசிக்கப் போனால் எல்லா அனுஷ்டானங் களும் ஸத்தியத்திலிருந்தே பிறந்து, ஸத்தியத்திலேயே முடிவது என்பது காணப்படும். ஸத்தியத்திலேயே ஈடு பட்டு, ஸத்தியத்திலேயே வணங்கிவரும் ஒருவன் தன் சக்திகளை யெல்லாம் வேறொன்றின் பொருட்டுச் செலவிடு வானானால், அந்த ஸத்திய தேவதைக்குத் துரோகஞ் செய் தவனாகிறான். அப்படியிருக்க, பொறிகள் போனவழியே அவன் செல்வது எப்படி? ஸத்தியத்தை அறிவது என்பது தன்னலத்தை மறப்பதாலேயே ஆகும். அவ்வாறு அதை அறிவதே தன் கடன் என்றிருக்கும் ஒருவன், குழந்தை களைப் பெறுதலும் குடும்பத்தை ரக்ஷித்தலுமாகிய தன் னலமான காரியங்களை எவ்வாறு செய்வான்? தன் திருப்தியையும் கவனித்துக்கொண்டு ஸத்தியத்தையும் கண்டுகொள்வதென்பது முரணான செயல்களாகும்.

அஹிம்ஸா தர்ம நோக்கில் இந்த விஷயத்தை ஆலோசிப்போமே யானாலும், சுத்தமில்லாமல் அந்தத் தர்மத்தின் பூர்த்தியை அடைவது ஆகாத காரிய மென்பது தெரியவரும். அஹிம்ஸை யென்பது பரி பூரண அன்பு. ஒரு மனிதன் ஒரு ஸ்திரீயையும், ஒரு ஸ்திரீ ஒரு புருஷனையுமே நேசிப்பது என்றால், பிற உலகத்துக்கு மிச்சமாகக் கிடைப்பது எது? 'நாம் இருவரும் வாழ் வோம்; மற்றவர்கள் எக்கேடு கெட்டால் என்ன?" என்று சொல்வதாகவே அது முடியும். நன்றியுள்ள ஒரு ஸ்திரீ தன்னிடமுள்ள எல்லாவற்றையும் தன் கணவ னுக்கே கொடுத்தல் வேண்டும் என்றும், அப்படியே ஒரு கணவன் தன்னை முழுமையும் தன் மனைவிக்கே தியாகஞ் செய்யவேண்டுமென்றும் அனுஷ்டானம் இருக்கும்போது, அவ்விருவரும் உலகத்துக்கு எதைக் கொடுக்கப்போகி றார்கள்? உலகத்தை யெல்லாம் தமக்கு உறவினர் என்று அவர்கள் எப்படிப் பார்க்கப் போகிறார்கள்? குடும்பம் பெரியதாக ஆக, லோகாபிமானத்திலிருந்து அவர்கள் தூரத்தில் சென்றவர்களாகிறார்கள், ஆகையால்

அஹிம்ஸா தர்மத்தை அனுஷ்டிக்கும் ஒருவன் கல்யாணம் செய்துகொள்ளுதல் என்பது கூடாது; விபசாரம் என்பது நினைக்கவே கூடாத காரியம்.

ஆனால், கல்யாணம் ஏற்கெனவே ஆனவர்கள் என்ன செய்வது என்று கேட்கலாம்? அவர்களுக்கு ஸத்திய சோதனை ஒருகாலும் கிடையாதா? அவர்கள் ஜன சமூகத்திற்காகத் தங்கள் எல்லாவற்றையும் கொடுப்பது ஒருநாளும் ஆகாதா? அவர்களுக்கும் மார்க்கமுண்டு. அவர்கள் தாங்கள் கல்யாணமே ஆகாததுபோல் நினைத்துக்கொள்ள வேண்டும். இம்மாதிரி பாவிப்பது அசாத்தியமில்லை; இதனில் இன்பமுண்டு; இந்த நிலைமையை அனுபவித்திருப்பவர்கள் நான் சொல்வது உண்மையென்பதை அறிவார்கள். மணஞ் செய்துகொண்ட தம்பதிகள் தங்களைச் சகோதரர்களாகப் பார்த்துக்கொண்டு மாத்திரம் இருந்து விடுவார்களானால் அவர்கள் ஜகத் முழுமையும் நேசிக்கக் கூடியவர்களாக ஆகிவிடுவார்கள். உலகத்திலுள்ள எல்லா ஸ்திரீகளும், தன் தாய்மார்களும் சகோதரிகளும் புத்திரிகளும் என்ற பாவனை மட்டும் ஒருவனுக்கு வருமானால், அவன் எல்லா பந்தங்களினின்றும் உடனே விடுபட்டவனாவான். இப்படிச் செய்வதால் கணவனும் மனைவியும் அடையும் நஷ்டமொன்றுமில்லை. அவர்களுடைய சக்திக்குக் குறைவு ஏற்படுவதில்லை. அவர்களிடமுள்ள சிற்றின்ப குணத்தாலுண்டாகும் அழுக்கு நசித்துப் போகும்; உண்மையான அன்பு வளருகிறது. இந்த அழுக்கு நீங்க, அவர்களுக்குள் சாதாரணமாகக் காணப்படும் கலகங்களும் சண்டைகளும் ஒருவாறு நீங்கும். அன்பு தன்னலம் பற்றிய தாயும், குறுகினதாகவும் இருக்கும் இடங்களிலேதான் சண்டைகளுக்கு அதிக இடம் உண்டு.

அடிப்படையான இந்தத் தத்துவங்களை நாம் அறிந்துகொண்டு விடுவோமானால், பதிவிரதா தர்மத்தாலுண்டாகும் சரீர சுகம் என்பது இரண்டாம் பக்ஷமாகி விடுகிறது. சிற்றின்ப விஷயங்களில் உடல் - சக்தியைச் சிதறவடிப்பது எவ்வளவு பேதைமையானது! புருஷர்க்கும் ஸ்திரீகளுக்கும் தங்கள் உடலினுடையவும் மூளையினுடையவும் பூரண வளர்ச்சிக்கு என்று அருளப்பட்ட சக்தியையெல்லாம் அற்பமான பொறிகளின் சாபல்ய சாந்தியின் பொருட்டு வீணாக்குவது மிகக் கொடிய பிழையேயாகும். இவ்வாறு செய்யும் துர்ப் பிரயோஜனங்கள் பல நோய்களுக்குக் காரணமாகின்றன.

மனம், வாக்கு, காயம் எல்லாவற்ருலும் பிரம்மசரியம் அனுஷ்டிக்கப்படவேண்டும். எந்த அனுஷ்டானத்துக்கும் இது முறையாகும். 'ஒருவன் தன் உடலை மாத்திரம் அடக்கிவிட்டு, மனத்தைக் கட்டுப் படுத்தாமற் போவானுல் அவன் முயற்சி வீணுகும்' என்று கீதை சொல்லுகிறது; அனுபவமும் அதையே வற்புறுத்துகிறது. மனத்தைத் தன் இஷ்டப்படி அலைய விட்டுவிட்டு உடலை மாத்திரம் அடக்குவதென்பது பயனற்ற காரியம். எவனது மனம் அலைகிறதோ அவனுடைய உடலும் கூடவே தொடர ஆரம்பிக்கும். ஆனுல், நாம் ஒன்றைக் கவனிக்க வேண்டும்: மனத்தில் கெட்ட எண்ணங்கள் தங்க இடங் கொடுப்பது ஒரு விஷயம்; நாம் என்ன அடக்கியும் அடங்காமல் அது தன் இஷ்டப்படி செல்வது மற்ருெரு விஷயம். இந்த மாதிரி அது செய்யும் கெட்ட முயற்சியில் நாம் ஸத்யாக்ரகம் செய்வோமானுல் முடிவில் நாம் வெற்றி பெற்றுவிடலாம். நம் கட்டுப்பாட்டுக்கு உடல் இலகுவில் அடங்கிவிடுகிறது; ஆனுல் மனம் அவ்வளவு எளிதில் அடங்குவதில்லை. ஆதலால் முதலில் உடலைத் தன்வசப் படுத்த முயன்று, பிறகே மனத்தை எடுத்துக்கொள்ள வேண்டும். இவ்வளவுதான் நாம் செய்யக்கூடும். நாம் மனத்தைத் தன் இஷ்டம்போல் போக விட்டுவிடுவோமானுல், உடல் ஒரு புறமும் மனம் மற்ருெரு புறமும் செல்லும். அந்த நிலைகளில் நாம் நமக்கே உண்மை யற்றவர்களாவோம், நாம் நமக்குத் தோன்றும் ஒவ்வொரு கெட்ட எண்ணத்தையும் எவ்வளவு தூரம் நசுக்கி வருகிருேமோ, அவ்வளவு தூரம் நாம் மனத்தையும் உடலையும் ஒருமிக்க அடக்கி ஆண்டவர்களாவோம்.

பிரம்மசரிய விரத அனுஷ்டானம் மிக அரியதென்றும், பலர்க்கு அசாத்தியமென்றும் நினைக்கப்படுகிறது. இதன் காரணத்தை ஊன்றிப் பார்ப்போமானுல், பிரம்மசரியம் என்ற சொல்லின் பொருளை நாம் மிகக் குறுகிய அளவில் கொண்டிருப்பதே என்பது தெளிவாகும். பிரம்மசரியம் என்ருல் உடல் - ஆசைகளை அடக்கிக்கொள்ளுவது என்று சிலர் வியாக்யானஞ் செய்கிருர்கள். இப்படி எண்ணுவது குறைவுள்ளது என்பது மாத்திரமன்று; தப்புமாகும். ஐம்பொறிகளையும் முற்றிலும் அடக்குவதென்பதே பிரம்மசரியத்தின் பொருள். ஒரு பொறியை மாத்திரம் அடக்கி, பிறவற்றை யெல்லாம் தம் இச்சைப்படி அலைய விடுபவரின் முயற்சிகள் யாவும் வீணுகவே முடியும். காம உணர்ச்சிகளை யெழுப்பும் கதைகளைக் கேட்டும்,

காட்சிகளைக் கண்டும், நாவால் உணர்ச்சிகளையெழுப்பும் உணவுகளை உண்டும், மன எழுச்சிகளைச் செய்யும் பொருள்களைத் தொட்டும், மீதியிருக்கும் ஓர் உறுப்பை மாத்திரம் அடக்குவதென்பது, ஒருவன் தன் கைகளை நெருப்பில் வைத்துவிட்டுப் புண்படாமல் இருக்க முடியும் என்பது போலவே முடியும். ஒன்றைக் கட்டுப்படுத்த விரும்பும் ஒருவன் எல்லாவற்றையும் கட்டுப்படுத்த வேண்டும். பிரம்மசரியம் என்பதைக் குறுகிய நோக்கத்துடன் பார்த்தால் பெரிய அநர்த்தம் விளைகிறதென்பதை நான் பல தடவைகளிலும் உணர்ந்திருக்கிறேன். எல்லாப் பொறிகளையும் ஒரே மாதிரியாக அடக்க முயலுவோமானால் அதுவே சாஸ்திரீயமான முறை; வெற்றியும் அதனால் இலகுவில் கிடைக்கும். நாக்கே மிகக் கொடிய பாவி என்று எனக்குத் தோன்றுகிறது; ஆகவே அதை அடக்குவதில் நாம் தனிமையான கவனம் செலுத்தவேண்டும்.

பிரம்மசரியத்தின் மூலப் பொருளை அறிய முயலுவோம். பிரம்மன் அல்லது ஸத்தியத்தை நாட நாம் கையாளும் சரியை அல்லது முறை என்பதே இதன் பொருள். இந்த மொழிப் பொருளினின்று, 'எல்லாப் பொறிகளையும் அடக்குதல்' என்ற தனிப்பொருள் உண்டாகிறது. ஸ்திரீ-புருஷ சம்பந்தம் பற்றியதெனப்படும் குறுகிய பொருளை நாம் முற்றிலும் மறந்துவிட வேண்டும்.

## 4. நாவடக்கம்

பிரம்மசரியத்தோடு நெருங்கிய சம்பந்தமுடையது நாவடக்கம். எவனொருவன் தன் உணவாசையை மட்டுப்படுத்துகிறானோ, அவனுக்குத் தன் காமத்தை அடக்குவது இலகுவாகிறது என்பதை நான் அனுபவத்தால் கண்டிருக்கிறேன். ஆனால் இந்த விரதம் பழைய நாள் முதல் கையாளப்பட்டு வரவில்லை. பெரிய ரிஷிகளுக்குக் கூட உணவுச் சுருக்க விரதம் என்பது முடியாத காரியமாய் இருத்தல் இதற்குக் காரணமாகுமோ, என்னவோ? ஆனால் ஸத்யாக்ரக ஆச்ரமத்தவர்களாகிய நாம் ஒரு தனிப் பெருமையைக் கொடுத்து இதை ஒரு விரதமாக அனுஷ்டித்து வருகிறோம். ஆகையால் இதனை நாம் தனித்து ஆராயவேண்டியது அவசியமாகிறது.

ஆகாரத்தை நாம் மருந்துபோல் சாப்பிடவேண்டும்; அது ருசியுள்ளதா இல்லையா என்று ஆராயாமலும், உடல் தேவைக்கு வேண்டிய அளவை மீறுமலும் நாம் அதனை எடுத்துக்கொள்ள வேண்டும். மருந்து எப்படி அளவுக்குக் குறைந்தால் பலன் கொடுக்கிறதில்லையோ, அல்லது முழுப்பலனையும் கொடுக்கிறதில்லையோ, எப்படி அளவுக்கு மிஞ்சின மருந்து உடலுக்குக் கேடு தருமோ, அதைப்போலவே உணவும் செய்யும். ஆகையால் இந்த விரதத்தை அனுஷ்டிப்பவர் ஏதோ ஒன்று வாய்க்கு இனிமையாயிருக்கிறது என்று உண்பாராளுல், அவர் விரத பங்கம் செய்தவராவார். உணவின் ருசியை அதிகப்படுத்தவோ, அல்லது அதன் அருசியை மாற்றவோ, ஒருவர் சிறிதளவு உப்பை எடுத்து வாயில் போட்டுக் கொண்டாலும், அதுவும் விரத பங்கமாகும். ஆனுல் உணவோடு ஓரளவு உப்பு இருக்க வேண்டியது அவசியம் என்று எண்ணி அவ்வுப்பு சேர்த்துக் கொள்ளப் படுமானுல், அப்பொழுது விரதபங்கம் ஏற்படுவதில்லை. இன்னும், உண்மையில் உப்பு அல்லது வேறெந்த வஸ்துவும் நம் உணவுக்கு அவசியமில்லாமல் இருக்கும் பொழுது அது அவசியமென்று வீணுக எண்ணி அதைச் சாப்பிடுவதும் தவறேயாகும்.

மேலே சொல்லியவற்ருல், நம் உடலுக்கு அத்யா வசிய மில்லாதனவும், இப்பொழுது நாம் உண்டு கொண் டிருக்கின்றனவுமான பல ஆகாரங்களை நாம் விட்டுவிட வேண்டுமென்று தெரியவரும். இவ்வாறு பல ஆகாரங்களை விட்டுத்தள்ள முயலும் ஒருவன் 'தன்னடக்கம்' என்னும் அரிய குணத்தைக் கைக்கொள்ள வேண்டியவளுகிருன். இவ்விஷயத்தைப் பற்றிப் பலர் தீர்க்காலோசனை செய் யாததால், அந்த விரதத்தைப் புதிதாக அனுஷ்டிக்கத் தொடங்குகிறவர்களுக்கு எந்த எந்த ஆகாரத்தை விடுவது, எவற்றை எடுத்துக்கொள்வது, என்று முதலில் தேர்ந்தெடுத்தல் சிறிது சிரமமாகவே யிருக்கும்.

அல்லாமலும், பெற்ருேர்கள் பிள்ளைகளிடம் வைத்த மூடத்தனமான பிரியம் காரணமாக, கண்ட கண்ட உணவுகளை யெல்லாம் அவர்களுக்குக் கொடுத்து அவர் களின் உடலைக் கெடுத்தும் பலவகை உணவுகளில் ஆசையை ஊட்டியும் விடுகிருர்கள். அவர்கள் வளர்ந்து பெரியவர்களாகும்போது அவர்களின் உடல் வியாதி களால் நிறைந்துவிடுகிறது; ருசிகள் தாறுமாருகக் கெட்டுவிடுகின்றன. இம்மாதிரி இளவயதில் செய்த துர்ப்

பழக்கம் நம்மைப் பின்னால் வெகுவாய்ப் பாதிக்கிறது! நாம் பணத்தை விரயமாக்கி, வைத்தியனின் ஆட்சியில் ஆழ்கிறோம்.

நம்மில் பெரும்பாலோர் உடலையும் உடலுறுப்புக்களையும் அடக்கி ஆளாமல் அவற்றிற்கு அடிமையாக ஆகிறார்கள். அனுபவம் வாய்ந்த ஒரு வைத்தியர் தாம் சுகமுள்ள சரீரம் ஒன்றையுமே கண்டதில்லை என்று சொன்னார். எந்த எந்தத் தடவைகளில் ஒருவர் அமித போஜனம் செய்கிறாரோ, அந்த அந்தத் தடவைகளில் அவருடல் கேடு அடைகிறது. அந்தக் கேட்டை ஒரு வாறு பரிகாரம் செய்வது பட்டினியே.

நான் சொல்வதைக் கண்டு ஒருவரும் பயமடைந்து முயற்சி செய்யாமல் கைவிட்டுவிட வேண்டாம். ஒரு விரதத்தைஎடுத்துக்கொள்வதென்பது, ஆரம்பத்திலேயே அதைப் பூரணமாக அனுஷ்டிப்பது என்றாகாது. மனம் வாக்குக் காயங்களால் அடிக்கடி உண்மையான முயற்சி செய்து, விரதத்தைப் பூர்த்தியாய் அனுஷ்டிக்க வேண்டுமென்ற எண்ணத்தை நம் முன்னால் வைத்துக்கொள்வதே அவசியமானது. நம்மை நாமே ஏமாற்றிக் கொள்ளும் போலிக் கொள்கையை நாம் கையாளலாகாது. நம் சௌகரியத்தை உத்தேசித்து நம் மனோ லக்ஷயத்தைக் குறைத்துக் கோள்வதோ, அல்லது சிறிதளவு மாற்றிக் கொள்வதோ, அஸத்தியத்தைக் கையாள்வதாகும்; அன்றியும் நம்மை நாம் தாழ்த்திக் கொள்வதுமாகும். மனோ லக்ஷயத்தைத் தெரிந்துகொண்டு, அது எவ்வளவு கஷ்டமாயிருந்தாலும் இருக்கட்டுமென்று அதனை அடைய அசாத்தியப் பிரயத்தனம் செய்வதே புருஷார்த்தம் என்பதும் மனிதப் பிரயத்தனம் என்பதும். எவனொருவன் சிறந்த விரதங்களை அரைகுறை யில்லாமல் முடிக்கிறானோ, அவனுக்கு இந்த உலகத்தில் இனிச் செய்யவேண்டிய தொன்றுமில்லை. அவனே பகவான், அவனே பரிபூரணன்; அவனே யோகி! எளிய முயற்சியாளர்களாகிய நாம் மெதுவாய்—ஆனால் திடமாய்—முயலக் கூடும். ஈச்வரனுடைய கிருபை காலக்கிரமத்தில் வரட்டும் என்று அதற்கு நம்மைத் தயாரித்துக் கொள்ளக்கூடும். உன்னத வஸ்துவான ஒன்று நம்மால் உணரப்பட்ட பின், உலகத்திலுள்ள ஆசா பாசங்களெல்லாம் உடனே நம்மை விட்டு விலகும்.

ஒரு நாளின் இருபத்து நாலு மணியும் நாம் உணவையே பற்றி நினைத்துக் கொண்டிருத்தலாகாது. நாம் எச்சரிக்கையோடு இருப்போமானால் நம் உடலைக் காக்க

மாத்திரம் உண்பது எப்பொழுது என்றும், அதிகப்படியாக உண்பது எப்பொழுது என்றும், இலகுவில் கண்டு கொள்வோம். இதைக் கண்டுபிடித்த பிறகு வீண் சோறு சாப்பிட ஆரம்பிக்கும்போதெல்லாம் அதைத் தடுக்க நாம் நன்ருய் முயலலாம். சமையலறை பல பேருக்குப் பொதுவாக இருக்குமானுல் அது நமக்குப் பெரிதும் பயன்படும்; தினந்தோறும் என்ன சாப்பிடுவதென்பதை நாம் யோசிக்கவேண்டி வராது. கிடைக்கும் ஆகாரத்தைத் திருப்தியாகவும் அளவுடனும் நன்றியறிவுடனும் நாம் உண்ணலாம். நம் சுமையைப் அந்தப் பொதுப் பாகசாலைக்காரர்கள் பெரும்பாலும் குறைத்துவிடுவர்; நம்மை அவர்கள் காவலும் காப்பர்; அவர்கள் வீணுக நம் வயிற்றை நிரப்பமாட்டார்கள்; நம் உடல்கள் தொழில் செய்ய வேண்டிய அளவுக்குத் தகுந்த உணவையே அவர்கள் படைப்பார்கள். நியாயமான நிலைமையில் சூரியனே நம் சமையற்காரனுக இருத்தல் வேண்டும். ஆனுல் அந்த இன்பகரமான நிலையிலிருந்து நாம் வெகு தூரம் அப்பாலிருக்கிருேமென்பதை நானறிவேன். ஆகையால் நாவடக்கத்திலிருக்கும் தொல்லைகளை மட்டும் சொல்வது போதும் என்று எண்ணினேன்.

## 5. திருடாமை

இப்பொழுது திருடாமை என்பதை அனுஷ்டிப்பதைப் பற்றி விசாரிப்போம். மேலே கடைசியாகச் சொல்லப்பட்ட இரண்டையும் போல இதுவும் ஸத்தியத்திற்கு உட்பட்டதே. அன்பு என்பது ஸத்தியத்தினின்று பிறந்தது என்ருவது, ஸத்தியத்தோடு ஒத்தது என்ருவது கூறலாம். ஸத்தியமும் அன்பும் ஒன்றே; ஆனுலும் எனக்கு ஸத்தியத்தினிடம் மதிப்பு அதிகம். ஒவ்வொன்ருக ஆராய்ந்து கொண்டே போவோமானுல் கடைசியில் ஒன்றே மிஞ்சி நிற்கும்: ஸத்தியமே அந்த முடிவு; அன்பு அதற்கு ஒரு வழியேயாகும். அன்பு அல்லது அஹிம்ஸை என்பது இன்னது என்பதை நாம் அறிவோம்; எனினும் அன்பின் வழிச் செல்வது அரிய தொழில். ஆனுல் ஸத்தியத்தைப்பற்றி நாம் ஏகதேசமே அறிவோம்; ஸத்தியத்தை முற்றிலும் அறிவது என்பது அசாத்தியம்; அஹிம்ஸா தர்மத்தை முற்றிலும் அறிவது அப்படிப்பட்டதே.

ஒருவன் திருட்டுத் தொழிலையும் செய்துகொண்டு ஸத்தியத்தை அறிவதும், அன்பைச் செலுத்துவதும்

இயலாத காரியம். ஆனால் தெரிந்தோ தெரியாமலோ நம்மில் ஒவ்வொருவரும் திருட்டுக் குற்றம் செய்து கொண்டே வருகிறோம். பிறருடைய பொருள்களைத் திருடுவது மாத்திரமில்லாமல், ஒருவர் தம் சொத்தையே திருடிக்கொள்வதும் உண்டு. ஒரு தகப்பன் தன் குழந்தைக்குத் தெரியாமல் ஏதேனுமொன்றைச் சாப்பிடுவது இதற்கு ஓர் உதாரணம். ஆச்ரம பாகசாலை எல்லோருக்கும் பொதுவான உடைமை; அதிலிருந்து ஒருவர் ஒரு சிறிது சர்க்கரையை ஒருவருக்கும் தெரியாமல் எடுத்துத் தின்பது திருட்டுத் தொழிலே யாகும். இன்னொருவருடைய சொத்தை, அவருக்குத் தெரிந்திருந்தாலும் அவர் உத்தரவைப் பெறாமல் எடுத்துக் கொள்வதும் திருட்டுத்தொழிலே. ஒன்று ஒருவருக்கும் சொந்தமானதில்லை யென்று எடுத்துக் கொள்வதும் கள்ளமே. சாலைகளில் கிடக்கும் பொருள்கள் அரசாங்கத்திற்கு உரியன. ஆச்ரமத்திற்கு அருகில் கிடக்கும் எதுவும் காரிய தரிசியிடம் கொடுக்கப்படவேண்டும்; அது ஆச்ரமச் சொத்தாக இல்லாவிடில் அதை அவர் போலீஸ்காரரிடம் கொடுக்கவேண்டும்.

இதுவரையில் நான் சொல்வது இலகுவாயிருக்கும். ஆனால் திருடாமை என்பதன் தத்துவம் இன்னும் வெகுதூரம் செல்லுகிறது. நமக்கு ஒரு வஸ்து உண்மையில் தேவை யில்லாமல் இருக்கும்போது, அதை உடையவரின் உத்தரவைப் பெற்று எடுத்துக் கொள்வதும் கள்ளமே யாகும். ஒருவர் தமக்குத் தேவையில்லாத ஒன்றைப் பெற்றுக்கொள்ளவே கூடாது. பெரும்பாலும் ஆகாரப் பொருள்களே இவ்வாறு திருட்டுக்கு உள்ளாகின்றன. எனக்குத் தேவையில்லாத ஒரு பழத்தை நான் உண்பது திருட்டே; அவசியத்துக்கு மேற்பட்டு நான் உண்பதும் அத்தகையதே. சாதாரணமாக, நமக்குத் தேவை எவ்வளவு என்பதை நாம் அறிவதே யில்லை; நம் தேவைகளை நாம் அனாவசியமாக அதிகப்படுத்திக்கொண்டு, நம்மையறியாமலே கள்ளர்களாகிறோம். சிறிதளவு ஆலோசிப்போமானால், நாம் இன்றைக்குத் தேவை என்று நினைப்பவைகளில் பெரும்பாலானவற்றை வேண்டாமென்று தள்ளிவிடக் கூடும். திருடாமை என்னும் தருமத்தைப் பின்பற்ற விரும்பும் ஒருவன் தன் தேவைகளில் பெரும்பான்மையைக் குறைத்துக்கொண்டே வருவான்; உலகத்தில் காணப்படும் கொடிய வறுமைக்குக்

காரணமெல்லாம், திருடாமை என்னும் தருமத்தைச் சரியாக அனுஷ்டியாமையே.

இதுவரையில் நாம் ஆலோசித்த திருட்டுகளெல்லாம் வெளிப்படையான திருட்டுகள். திருட்டில் இன்னெரு வகை உண்டு; அது மிகவும் நுட்பமானது; மனிதரின் மனிதத்தன்மைக்குச் சிறிதும் ஒவ்வாதது. அதாவது பிறருடையதொன்றை நமக்கு வேண்டும் என்று விரும்பும் மனத்திருட்டே அது. உண்ணவிரதம் இருக்கும் ஒருவன், தான் சாப்பிடாமலிருந்தும், மற்றவனெருவன் புசிப்பதைக் கண்டு தான் உணவெடுக்க முடியவில்லையே என்று ஆலோசிப்பானுனல் அதுவும், திருட்டாகும். அல்லாமலும் விரதம் முடிந்தவுடன் என்னென்ன ஆகாரங்கள் உண்ணலாம் என்று அவன் நினைத்துக் கொண்டிருந்தாலும் திருட்டுக் குற்றம் அவனைச் சேரும். 'திருடாமை' என்னும் தருமத்தை அனுஷ்டிக்க விரும்புகிறவன் நாளைக்கென்று ஓர் ஆலோசனையும் செய்யமாட்டான். வருங்காலத்தைப் பற்றிய எண்ணமே எந்த வகையான திருட்டுக்கும் மூலமாயிருக்கிறது. இன்றைய தினம் நமக்கு ஒரு பொருள் இருந்தால் நல்லதென்று மாத்திரம் நினைக்கிறேம்; நாளை நேரான வழியாலோ, அல்லது தப்பான வழியாலோ, அந்தப் பொருள் நமக்குக் கிடைக்க வேண்டுமென்று ஆசைப்பட ஆரம்பிக்கிறேம்.

இன்னும் திருடப்படுவன வஸ்துக்கள் மாத்திரமல்ல; அபிப்பிராயங்களையும் சிலர் திருடுவதுண்டு. எவனெருவன் தனக்காகவே தோன்ருத ஓர் அபிப்பிராயத்தைத் தனக்கே முதலில் தோன்றினதென்று சொல்லிக் கொள்ளுகிருனே அவனும் திருடனே. உலக சரித்திரத்தில் மிகப் படித்தவர்களில் பலர்கூட இத்திருட்டுக்கு ஆளாகி யிருக்கிருர்கள். இன்றையதினம் இது மிகவும் சகஜமாகவே காணப்படுகிறது. உதாரணமாக, நான் ஆந்திர தேசத்தில் ஒரு புதிய முறை - ராட்டினத்தைப் பார்த்து விட்டு அதேமாதிரி ஒன்றை ஆச்ரமத்தில் செய்து வைத்து இதை நான் நூதனமாகச் செய்தேன் என்று சொல்லிக்கொள்வேனுனல், மற்றெருவருடைய நூதன ஆராய்ச்சியைத் திருடின குற்றம் எனக்கு வராமல் போகாது.

ஆகையால் திருடாமை என்பதை அனுஷ்டிக்க விரும்பும் ஒருவன் மிகத் தாழ்மையும், ஆலோசனையும், விழிப்பும், எளிய வாழ்க்கையும் உடையவனுக இருத்தல் வேண்டும்.

# 6. உடைமை யின்மை அல்லது வறுமை

உடைமையின்மை என்பது திருடாமை என்பதைத் சார்ந்ததே. ஒருவன் தனக்குத் தேவை யில்லாத ஒன்றை வைத்திருத்தல் என்பதும் திருட்டுச் சொத்தின் பாற்படும். அது உண்மையில் திருடப்பட்டிருக்க வேண்டுமென்பது அவசியமில்லை. உடைமை என்பது வருங்காலத்துக்கு வைத்துக் கொள்ளுதல் என்று பொருளுடையதாகிறது. சத்திய விசாரம் செய்கிறவனும், அன்பென்னும் தருமத்தைப் பின்பற்றுகிறவனும் நாளைக்கென்று ஒன்றையும் வைத்திருக்க மாட்டான். கடவுள் நாளைக்காக ஒன்றையும் சேமிப்பதில்லை. அந்த க்ஷணத்துக்கு வேண்டியவற்றை யன்றி அதிகப்படியானவற்றை அவர் சிருஷ்டிப்பதில்லை. நமக்கு மாத்திரம் அவரிடம் பூரண விசுவாசமும் நம்பிக்கையும் இருக்குமானால் நமக்குத் தினந்தோறும் வேண்டும் எதையும் அவர் கொடுக்கத் தவறுவதில்லை. ரிஷிகளும் பக்தர்களும் அம்மாதிரி நம்பிக்கை வைத்ததால் சிறிதும் கஷ்டமடையாமல் வாழ்ந்து வந்தனர். ஒவ்வொருவரும் தங்கள் தங்களுக்கு அன்றைய அன்றையத் தேவைகளுக்கு வேண்டிய அளவே தான் வைத்துக்கொள்ள வேண்டுமென்பது ஈச்வரனின் விதி; அவ்விதி சரியாக நடத்தப் பெறாமையாலேதான் ஏற்றத் தாழ்வுகளும் அவற்றைப் பின்பற்றிய பல துக்கங்களும் உலகத்தில் உண்டாகிவிட்டன. பணக்காரர்களிடம் அவர்களுக்குத் தேவையில்லாத வஸ்துக்கள் பல கிடக்கின்றன; அவை இல்லாமையால் பல லட்சம் ஏழைகள் பிழைப்பில்லாமல் சாகிறார்கள். ஒவ்வொருவரும் தமக்கு வேண்டிய அளவே வைத்துக்கொள்வார்களானால் ஒருவருக்கும் தேவை என்பது இராது; எல்லோரிடமும் திருப்தியே குடியிருக்கும். இப்பொழுதிருக்கிற நிலையிலோ பணக்காரர்களுக்கும் திருப்தி யில்லை; எளியவர்களுக்கும் திருப்தி யில்லை. ஏழை நாளை லக்ஷப் பிரபுவாகலாம்; லக்ஷப் பிரபு கோடீச்வரனாகலாம். ஆகையால் இன்றைய தினம் பணக்காரர்களாக இருக்கிறவர்கள் உலகத்தில் எல்லோரும் திருப்தியுடன் இருக்கவேண்டுமென்று பார்க்க வேண்டும். அவர்கள் தங்கள் சொத்துக்களை ஓரளவுக்குள் சுருக்கிக் கொள்வார்களேயானால், பட்டினி கிடக்கிறவர்கள் சிறிதளவு ஆகாரம் பெற்றுத் திருப்தி யடைவார்கள். பரிபூர்ணமாக உடைமை யின்மை என்பது உலகத்தில் காணப்பட வேண்டுமானால் பறவை

களைப் போலவே மனிதனும் வாழ வேண்டும். குடியிருக்க வீடாவது, கட்டத் துணியாவது இவனுக்கு இருத்தல் கூடாது. நாளைக்கென்று வைத்த சோறும் ஒன்றும் இருத்தலாகாது. ஆனால் அவன் தினசரி வாழ்க்கைக்குச் சோறு வேண்டுமே என்றால் அது அவனுடைய பொறுப் பன்று, கடவுளுடைய பொறுப்பு. ஆனால் இந்த லக்ஷ் யத்தை அடைவது சிலருக்கே சாத்தியமாகும். நம்மைப் போன்ற சாதாரணப் பிரயாசிகளுக்கு இந்த நிலைமையில் நிற்பது முடியாது. ஆனால் இந்த மனோ லக்ஷயத்தை எப்போதும் நம் கண்முன் நிறுத்தி வைத்து, நம்முடைய உடைமையெல்லாம் நமக்கு வேண்டியவைதானா, அவற் றைக் குறைத்துக் கொள்ளலாகாதா? — என்று அடிக்கடி ஆராய்ந்து வரலாம். நாகரிகம் என்பது யோசித்துப் பார்க்கும் வேளையில் உடைமைகளைப் பெருக்கிக் கொள்ளு தலன்று என்றும், தேவைகளை முடிந்த வரையில் நாமாகவே குறைத்துக் கொள்வதே என்றும் புலப்படும். இது ஒன்றே வாஸ்தவமான சந்தோஷத்தையும் திருப்தி யையும் பெருக்குவதாகும். இதுவே பிறருக்கு உழைக்க நமக்கிருக்கும் சக்தியை வலுப்படுத்தும். இந்த அளவைக் கொண்டு யோசித்துப் பார்ப்போமானால், நம் ஆச்ரமத்தில் பல அனாவசியமான பொருள்கள் இருப்பது நமக்குத் தெரியவரும். அவற்றை வைத்துக்கொள்வதால் நாம் அண்டையிலுள்ளவர்களுக்குத் திருட்டுப் புத்தியைக் கற்பிக்கிறவர்களாகிறோம்.

வாஸ்தவமான ஸத்தியத்தைக் கொண்டு பார்ப்போ மானால் மனிதனுக்கு உடல்கூட ஓர் உடைமைப் பொருளே யாகும். அனுபவிக்க வேண்டுமென்ற ஆசையே ஆத்மா வுக்கு உடலைச் சம்பாதித்துக் கொடுக்கிறது என்று சொல்லுவது உண்மையே; இந்த ஆசை அழியும்போது, உடலுக்குத் தேவையில்லை; மனிதன் பிறப்பு இறப்புக் களாகிய கொடிய சுழலிலிருந்து விடுபட்டவனாகிறான். ஆத்மா எங்கும் உள்ளது; அது ஒரு கூண்டில் அடைபட்டு அக்கூண்டின் பொருட்டுக் கொலை முதலிய கொடுமை களைச் செய்வது ஏன்? இவ்வாறு யோசிப்போமானால் துறவு என்னும் மனோலக்ஷயம் நமக்குத் தோன்றும்; உடல் உள்ளவரையில் பிறருக்கு உழைப்பது என்கிற தர்மத்தின் பொருள் நமக்கு விளங்கலாகும். வாழ்க்கையின் ஆதாரம் உணவன்று, ஊழியமே என்பது நன்கு தோன் றும். நாம் உண்பதும், குடிப்பதும், உறங்குவதும், விழித் திருப்பதும் இந்த ஊழியம் ஒன்றினுக்காவே; இம்மாதிரி

யான மனநிலை வந்துவிடுமானல் மகத்தான ஆனந்தம் நமக்கு உண்டாகிவிடும்; காலமாக ஆக மிக அழகான காட்சிகள் நமக்குத் தோன்றலாகும். இதை மனத்தில் வைத்துக்கொண்டு நம்மை நாமே சோதனை செய்து கொள்வோமாக.

உடைமையின்மை என்பது வஸ்துக்களை மாத்திரம் பற்றினவை யன்று; அது அபிப்பிராயங்களையும் பற்றியதாகும். பயனற்ற விஷயங்களால் மூளையை நிரப்பிக் கொள்பவனும் இந்தத் தருமத்தைப் புறக்கணித்தவனே. ஈச்வரனுக்கு எதிரிடையாக நம்மை இழுத்துச் செல்லும் எண்ணங்களும், அவனிடம் செல்வதற்குத் தடையாக இருக்கும் எண்ணங்களும் பயனற்றனவே. இந்தச் சந்தர்ப்பத்தில் கீதையின் பதின்மூன்றும் அத்தியாயத்தில் 'அறிவு' என்பதற்குக் கொடுக்கப்பட்டிருக்கும் வியாக்கியானத்தைப் பார்ப்போம். அடக்கம் முதலியனவே அறிவென்றும், பிறவெல்லாம் அறிவீனமென்றும் கூறப்பட்டிருக்கிறது. இது உண்மையானல்—இதன் உண்மையில் சிறிதும் ஆக்ஷேபமில்லை — இன்று நாம் அறிவென்று நினைப்பவற்றுள் பல சுத்த அஞ்ஞானமென்றும், அவற்ருல் நன்மை விளைவதைவிடத் தீமையே அதிகமென்றும் அறிவோம். அத்தகைய அறிவு நம் மனத்தை அலையச்செய்து, அதனைச் சூனியமாகவும் செய்து விடுகிறது; அதிருப்தி நிரம்புகிறது; முடிவு துன்பமேயன்றி இன்பமில்லை. இப்படி நான் சொல்வதிலிருந்து 'சும்மா இருத்தலே' என் நோக்கம் என்பதில்லை. நம் ஆயுளில் ஒவ்வொரு விநாடியும் வேலையிலேயே கழியவேண்டும்; ஆனல் அது 'ஸாத்விக'மாய் ஸத்தியத்தை நாடிச்செல்வதாய் இருக்கவேண்டும். எவனொருவன் தன் ஆயுளைச் சேவைக்கே அர்ப்பணம் செய்கிருனே அவனுக்கு ஓய்வு ஒருநாளும் இல்லை. ஆனல் நல்ல உழைப்பு, தீய உழைப்பு இவை இரண்டிற்கும் உள்ள வித்தியாசத்தை எவரும் நன்ருக அறிந்துகொள்ள வேண்டியது அவசியம். இந்த அறிவு சேவைக்கென்று தம்மை முற்றிலும் அர்ப்பணஞ் செய்தவர்களுக்கே தெரியும்.

## 7. அச்சமின்மை

கீதையின் பதினுரும் அத்தியாயத்தில் சொல்லப்பட்டுள்ள தெய்வ குணங்களுள் அச்சமின்மை யென்பது முதலாவதாக இருப்பதை, கீதையைப் படித்தவர்கள் நன்ருய்

அறிவர். செய்யுளின் யாப்பு - அமைதிக்காக இவ்வாறு செய்யப்பட்டதா அல்லது வேண்டுமென்றே அவ்வாறு முதலில் வைக்கப்பட்டதா?—என்பதை நானறியேன். கீதையின் முறைக்குக் காரணம் எதுவாலுைம் 'பய மின்மை' என்பது எல்லாக் குணங்களிலும் தலைமை யானது என்பதற்குச் சந்தேகமே யில்லை யென்பது என் அபிப்பிராயம். ஏனென்றால் பிற உயரிய குணங்களுக் கெல்லாம் மூலமாயிருப்பது அச்சமின்மையே. பயங் கொண்ட ஒருவன் ஸத்தியத்தை நாடுவது எப்படி, அன்பைச் செலுத்துவது எப்படி? "ஹரிக்குச் செல்லும் வழி தீரர்கள் வழியே; பயங்காளிகளின் வழியன்று"—ஹரி என்னும் சொல்லுக்கு ஸத்தியம் என்பது இங்குள்ள பொருள். தீரர்களுக்கு உண்மையான ஆயுதம் பய மின்மை; பயங்காளிகளுக்கே கத்தி, துப்பாக்கி முதலிய கொலை செய்யும் ஆயுதங்கள் வேண்டும்.

பயமின்மை யென்பது யாது? நோய், உடல் வருத்தம், சாவு, சொத்து - இழப்பு, உறவினரின் சாவு, மதிப்பு - இழப்பு, பிறர் மனம் புண்படுவாரோ என்ற பயம் இவை யாவற்றையும் ஒழித்தலே அச்சமின்மை. இவற்றை 'வெளி அச்சம்' என்னலாம். சாவைக் கண்டு அஞ்சாதவன் வேறொன்றையுங் கண்டு அஞ்சமாட்டான் என்பது சாதா ரணமாக எல்லோருடைய கருத்தாகவும் இருக்கிறது. இது தவறு. நம்மில் சிலருக்குச் சாவைக் கண்டு பய மில்லை; ஆனால் வாழ்க்கையி லுள்ள சில அற்பமான துன் பங்களைக் கண்டு நடுங்குகிறோம். சிலர் தாம் சாகத் துணிந்திருக்கிறார்கள்; ஆனால் தம்மிடம் அன்பு நிறைந்த ஒருவர் இறந்தால் அவர்கள் படும்பாடு அதிகமாயிருக் கிறது. சில கருமிகள் தங்கள் உயிரை இழந்தாலும் இழப்பர்; தங்கள் சொத்தில் சிறிது இழப்பதானால் மிகவும் பரிதவிப்பர். இன்னும் சிலர் தங்கள் பெருமையைக் காப்பாற்றிக்கொள்ள எந்தக் கேடான காரியத்தையும் செய்யப் பின்வாங்கார். சிலர் உலகத் துக்கு அஞ்சித் தமக்கு முன் தோன்றும் குறுகியதும் நேரானதுமான பாதையில் செல்லாமல் வழிமாறிச் செல்வர். ஸத்தியத்தைப் பின்பற்றுகிறவர் இவ்வச்சங்கள் எல்லாவற்றையும் விட்டுவிடவேண்டும். அவர் ஹரிச் சந்திரனைப்போல ஸத்தியத்திற்காகத் தம் உடைமை எல்லாவற்றையும் தியாகஞ் செய்யவும் சித்தமா யிருக்க வேண்டும். ஹரிச்சந்திரன் வரலாறு பொய்யாக இருக் கலாம். ஆனால் ஸத்தியத்தைப் பின்பற்ற முயலும் ஒவ்

வொருவருக்கும், அவரவர் அனுபவத்திலிருந்து, ஹரிச்சந்திரன் கதையிலுள்ள உண்மை புலப்படும்.

மிகவும் உன்னதப் பொருளான ஈச்வரனே அறிந்தவர்களுக்கே பூரணமான பயமின்மை என்பது உண்டாகும். ஏனென்றால் பயமற்றவன் மாயைகளால் மயங்க மாட்டான். மனத்தில் உறுதியும் நம்பிக்கையுங் கொண்டு இடைவிடாமல் முயன்று வந்தால் எவரும் இந்த நிலையை அடைந்து விடலாம் என்பதற்குச் சந்தேகமில்லை.

நாம் முதலில் சொன்னதுபோல எல்லாவிதமான வெளி - அச்சங்களையும் ஒழித்துவிடவேண்டும். ஆனால் உள்ளே இருக்கும் பகைவர்களைக் கண்டு நாம் எப்பொழுதும் அஞ்சவேண்டும். காமம் குரோதம், முதலான உட்பகைகளுக்கு நாம் எக்காலத்தும் அஞ்சவேண்டுவதே. இந்த உட்பகைகள் வெல்லப்பட்ட மாத்திரத்தில் புறப்பகைவர்கள் எல்லோரும் தாமே ஓடிவிடுகின்றனர். அவையெல்லாம் இந்த உடலைச் சுற்றியே சுழல்கின்றன வாகையால் உடலைப்பற்றின அபிமானம் ஒழிந்தவுடன் அவை ஒழிந்துவிடும். பயம் என்பதெல்லாம் நம் மனத்தின் தோற்றமேயன்றி வேறில்லை. செல்வம், குடும்பம், உடல் ஆகிய எல்லாவற்றிலும் உள்ள ஆசையை என்று நாம் விட்டு நீங்குகிறோமோ, அன்றே சகல அச்சங்களும் அகன்றோடுகின்றன.

“உலக வஸ்துக்களைத் துறப்பதன் மூலம் அவற்றை அனுபவி” என்ற உபநிஷத்து வாக்கியம் உண்மையானதே. செல்வம், குடும்பம், உடல் இவை இருந்த இடத்திலேயே இருக்கும், எங்கும் போகா; அவற்றுடன் கொண்டுள்ள சம்பந்தத்தை நாம் மாற்றிக்கொள்ள வேண்டும். இவையெல்லாம் நம்முடையன அல்ல, கடவுளுடையன; இவ்வுலகத்தில் ஒன்றும் நம்முடையதன்று. நாமே அவனுடைமை. ஆதலால் நமக்குப் பயம் ஏன்? ஆகையால் தான் உபநிஷத்து, “அனுபவித்துக் கொண்டே பற்றை அகற்ற வேண்டும்” என்று விதித்தது சரியானது. அதாவது, அவை நமக்குச் சொந்தமானவை என்று நாம் அபிப்பிராயப்படாமல், அவற்றிற்கு நாம் ‘டிரஸ்டி’கள் என்ற அபிப்பிராயம் கொள்ளவேண்டும். யாருக்காக நாம் அவற்றை வைத்துக்கொண்டிருக்கிறோமோ, அவன் அவற்றைக் காப்பாற்றுதற்கு வேண்டிய பலத்தை நமக்குக் கொடுப்பான். இவ்வாறு நாம் எஜமானர் என்ற

எண்ணத்தை அகற்றி, காலில் ஒட்டும் தூசியைக் காட்டிலும் தாழ்ந்த சேவகர் என்ற எண்ணம் எப்பொழுது வருமோ அப்பொழுது பயமெல்லாம் மறையும். எல்லையற்ற சாந்தியும், ஸத்திய நாராயண தரிசனமும் நமக்கு எளிதில் கிடைக்கும்.

* * *

## 8. சுதேசியம்

இக்காலத்திலுள்ள மனிதர்கள் அனுஷ்டிக்க வேண்டிய தருமங்களுள் தலைசிறந்தது சுதேசியம். இயற்கைத் தருமங்களும் ஆத்மீக தருமங்களும் தாமே தம்மை அமுலுக்குக் கொண்டு வருபவை. ஆனால் அறியாமையாலோ அல்லது வேறு காரணங்களாலோ மனிதன் அவற்றை அலக்ஷயம் செய்து, அவற்றிற்கு விரோதமாக நடக்கிறான். ஆகையால்தான் ஒருவனுக்குத் தன்னை நேரான வழியில் நிலைநிறுத்திக் கொள்ள விரதங்கள் தேவையாயிருக்கின்றன. மரக்கறிகளையே சாப்பிடுவதில் சுபாவமான பற்றுள்ள ஒருவனுக்கு அவற்றைத் தான் சாப்பிடவேண்டுமென்ற விரத நியமம் வேண்டுவதில்லை. ஏனென்றால், மாமிச ஆகாரத்தைக் கண்ட மாத்திரத்திலேயே அவனுக்கு வெறுப்பு உண்டாகிவிடும். மனிதனுடைய சுபாவத்திலேயே 'சுதேசி' என்ற குணம் பொருந்தியிருக்கிறது. இருந்தாலும் இக்காலத்தில் அந்தக் குணம் அந்தகாரத்தில் மூழ்கிக் கிடக்கிறது. ஆகையால்தான் சுதேசி விரதம் அவசியமாகிறது. ஆழ்ந்து ஆலோசித்துப் பார்ப்போமானால் சுதேசியின் முடிவான நிலை இந்த உலக பந்தங்கள் எல்லாவற்றினின்றும் விடுபட்ட முக்தி நிலையே யாகும். ஆத்மாவின் குடியிருப்பு இந்த உலகமன்று. அதன் முன்னேற்றப் பிரயாணத்திற்கு இந்த உலகம் ஒரு தடையாகிறது; தன்னை எல்லா உயிர்களோடும் ஒன்றாகக் கருத முடியாமல் தடுக்கிறது. சுதேசி விரதத்தை அனுஷ்டிக்கிற ஒருவன், உலக சிருஷ்டி எல்லாவற்றோடும் தன்னை ஒன்றாக்கச் செய்யும் முயற்சியால், இந்தப் பூத உடம்பைச் சுற்றிக் கிடக்கும் கட்டுகளை உதறி எறிய முயலுகிறான்.

சுதேசி என்பதற்கு இந்த அர்த்தம் சரியென்று ஒப்புக்கொண்டால், அதை அனுஷ்டிப்பவன் தனக்குச் சமீபத்திலுள்ளவர்களுக்காகத் தொண்டு புரிவதைத் தன் முதற் கடமையாகக் கொள்வான். இதனால் மற்றவர்

களின் லாப நஷ்டங்களை அவன் கவனிக்காமல் இருக்க வேண்டுமென்பதாகிறது: ஆனல் இந்தக் கவனமின்மை தோற்றத்தில் மாத்திரம் இருக்குமேயன்றி உண்மையில் இராது. அயலாருக்குத் தொண்டு புரிதல் என்பதால், மற்றவர்களுக்குத் தீங்கு புரிதல் என்பது ஏற்படாது; 'ஒருவருக்கு உள்ளதே உலகத்திற்கு உள்ளது' என்ற உண்மையை நாம் மனத்தில் இருத்திக் கொள்ள வேண்டும். இன்னெரு முறையில் ஆலோசித்துப் பார்த்தால், எவனெருவன் 'தூரத்துப் பச்சை'யால் இழுக்கப் பட்டு, உலகம் முழுமையும் ஓடித்திரிந்து தொண்டு புரிய அலைகிருனே, அவன் தன் காலத்தையும் சக்தியையும் விழலுக் கிறைத்தவனவான்! அவனல் அண்டையி லுள்ளவர்களுக்கும் அனுகூலமில்லை. உதாரணம் ஒன்று எடுத்துக் கொள்வோம். நான் வசிக்கிற இடத்தில் என்னைச் சுற்றிலும் சில உறவினர்களும், என்னை நம்பிப் பிழைக்கிறவர்களும் இருக்கிருர்கள். அவர்கள் நியாய மாகவே என்னிடம் உதவியை நாடுகிருர்கள்; அப்படிச் செய்ய அவர்களுக்கு உரிமையும் உண்டு. நான் அவர்களை யெல்லாம் அலக்ஷயம் செய்துவிட்டு, தூரத்திலுள்ள சில ருக்கு உதவிசெய்யப் போவதாக நினைத்துக் கொள் வோம். என்னை நம்பி யிருக்கிறவர்கள் உதவி செய்வா ரற்றுத் தவிப்பவர்களாவார்கள்; புதிய இடத்திலும் நான் போய் அதிகம் செய்யக் கூடாமையால் அவர்களுக்கும் நான் பயனற்றவனவேன். இவ்விதம் நம்பினவர்களுக்குத் துரோகம் செய்த பாபமும், நான் தொண்டு புரிய விரும்பிய புதிய ஜனங்களுக்குப் பயன்படாத தோஷமும் ஆகிய இரண்டு பயன்களே எனக்குக் கைகூடும்.

இந்தமாதிரி உதாரணங்களில் பல சொல்லக்கூடும். ஆகையால்தான் கீதை, "ஒருவன் தன் ஸ்வ தர்மத்தைச் செய்து இறப்பதே மேல்; பர தர்மம் செய்வதில் ஆபத்துக்கள் நிரம்பி யுள்ளன" என்று கூறுகிறது. இந்தக் கீதா வசனத்தை ஒருவன் தன் சுற்றுப்புறங்களுடன் பொருத்திப் பார்ப்பானனல், சுதேசி-தருமத்தின் பொருள் அவனுக்கு நன்ருக விளங்கும். கீதை ஸ்வ தர்மம் என்று எதைச் சொல்லுகிறதோ அதுவேதான் சுதேசி. இது ஒருவன் பக்கத்தில் உள்ளவர்களைப் பற்றியது என்று பொருள்படும்.

இந்தத் தருமத்தின் பொருளைச் சரியாகத் தெரிந்து கொள்ளாவிட்டால் விபரீதங்கள் விளைகின்றன. உதா

ரணமாக, வந்த வழிகளிலெல்லாம் சம்பாதித்து என் குடும்பத்தின் செல்வத்தை நிரப்ப வேண்டுமென்று ஒருவன் எண்ணினுல் அது சுதேசியாகாது. என் குடும்பத்துக்கு வேண்டியவற்றை நான் நியாயமான வழிகளில் சம்பாதிக்க வேண்டியவனே ; அவ்விதம் செய்ய முயலும்போது நம் நடத்தையின் பாங்கெல்லாம் தானே நமக்குத் தோன்றி விடும். சுதேசி – தர்மம் ஒருவருக்கும் ஒரு தீங்கையும் விளைவிக்காது ; அவ்வாறு செய்யுமானுல் அது ஸ்வ தர்மம் ஆகாமல் ஆணவமயம் ஆகும்.

சுதேசி விரதம் அனுஷ்டிப்பவன் ஒருவன் உலக சேவைக்காகத் தன் குடும்பத்தையே தியாகம் செய்ய வேண்டியவனுக ஆகலாம். இம்மாதிரி ஒருவன் தன் குடும்பத்தைத் தியாகம் செய்யவேண்டி வந்தால், அதுவே அவன் அதற்குச் செய்யக்கூடிய பெரிய உபகாரமாகும். '' எவனெருவன் தன் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள முயலுகிருனே அதை அவன் இழந்தவனுகிருன் ; எவன் அதனை ஈச்வரனுக்கு அர்ப்பணம் செய்கிருனே அவன் அதைக் கண்டெடுத்தவனுகிருன் '' என்று சொன்ன நீதி ஒரு தனி மனிதன் விஷயத்தில் எவ்வளவு உண்மையானதோ, அவ்வளவு உண்மையானது அவன் குடும்ப விஷயத்திலும். வேறொரு உதாரணத்தை எடுத்துக் கொள்வோம் : என் கிராமத்தில் பிளேக் வியாதி வந்ததாக நினைத்துக் கொள்வோம். அதனுல் கஷ்டப்படுகிறவர்களைக் காப்பாற்றும் காரியத்தில் நான் என் குடும்பத்தாரையும் சேர்த்துக்கொண்டு உழைத்ததில் என் குடும்பத்தாரும் நோய் கண்டு இறந்துவிட்டதாக நினைத்துக் கொள்வோம். இம்மாதிரியான செயலால் நான் என் குடும்பத்தைக் கெடுத்தவனுக மாட்டேன்; அதன் உண்மையான நண்பனுகவே நான் கருதப்படுவேன். சுதேசியில் சுயநலம் என்பதற்கு இடமேயில்லை. அதில் சுயநலம் காணப்படுமானுல் அது மிக உயர்ந்த தன்மையுள்ளதாகவே இருக்கவேண்டும். பரிசுத்தமான சுதேசியம் உலகத்திற்குச் சிறந்த தொண்டேயன்றி வேறன்று.

இம்மாதிரி ஆலோசனை செய்து, முடிவில் ஜன சமூகத்திற்குச் செய்யவேண்டிய மகத்தான தொண்டில் 'காதி'யே மிகச் சிறந்தது என்ற முடிவிற்கு வந்து சேர்ந்தேன். '' இச்சமயத்தில் இந்தியர்களான பல கோடி மக்களும் செய்ய வேண்டியது என்ன ? எது எல்லோருக்கும் இலகுவில் விளங்குவது, எல்லோராலும் இலகுவாய்

அறிந்துகொள்ளக் கூடியது? செய்வதற்கு எளிதாயும், அரை வயிற்றுக்குக் கூடச் சோறில்லாமல் தியங்கும் கோடிக்கணக்கான ஜனங்களுக்குச் சோறு அளிப்பதும் எது?'' என்று ஆராயலானேன்; இவற்றிற்கெல்லாம் சரியானது 'காதியும் ராட்டினமுமே' என்று பதில் வந்தது.

காதி மூலமாய்ச் சுதேசியை அனுஷ்டிப்பதால் அன்னிய நாட்டு மில்காரர்களுக்கு ஆபத்து வந்துவிடும் என்று எண்ணவேண்டாம். தன் குற்றத்தினின்று விடுவிக்கப்பட்ட திருடனுக்கு அதனுல் கேடொன்றுமில்லை; அவன் திருடின சொத்துக்களைச் சொந்தக்காரரிடம் அவனையே திருப்பிக் கொடுக்கச் செய்வது அவன் நன்மையின் பொருட்டல்லவா? இப்படிச் செய்வதால் முடிவில் அவனே லாபம் பெற்றவனுகிருன்; அதைப்போலவே கள் குடிப்பவர்களும் அபினி தின்பவர்களும் தங்கள் வழக்கத்தை நிறுத்திவிட்டால், கள் வியாபாரிகளும் அபினிக் கடைக்காரர்களும் நஷ்டமடைகிருர்கள் என்பதில்லை. அவர்கள் உண்மையாக லாபம் அடைந்தவர்களாவார்கள். ஒரு தனி மனிதனுக்காகட்டும், ஒரு ஜனக் கூட்டத்திற்காகட்டும், பாபங்களைக் களைந்து கொள்ளுதல் புண்ணியமாகுமேயல்லாமல் தீமையாகாது.

இன்னென்று கவனிக்கப்பட வேண்டும். நூல் நூற்று, அதனுற் செய்த 'காதி'யைக் கட்டிக்கொண்டதுடன் சுதேசி முடிந்துவிடும் என்றெண்ணுவதைப் போல் கொடியது வேறென்றுமில்லை. சுதேசி - தருமத்தை ஜனசமூகத்திற்குச் செய்வதற்குக் 'காதி' முதற் படியேயாகும். ஆனுல் 'காதி'யை மட்டும் இடுப்பில் உடுத்திக்கொண்டு, மற்றெல்லா அம்சங்களிலும் அன்னிய நாட்டு ருசிகளில் நுழைபவர்கள் பலர் இருக்கிருர்கள். இவர்கள் சுதேசியை அனுஷ்டிப்பவர்களாகக் கருதப்பட மாட்டார்கள். இவர்கள் இதை ஒரு நாகரிக மோஸ்தராகப் பின்பற்றுபவர்களே யாவர். சுதேச விரதியொருவன் தன் சுற்றுப்புறங்களை யெல்லாம் நன்ருக ஆராய்ந்து அதிக விலையானுலும், மட்டமான வேலைப்பாடானுலும், தன் அண்டைப் புறங்களிலுள்ள வஸ்துக்களையே வாங்கித் தொழிலாளிகளுக்கு உதவி செய்வான். அவர்களிடமுள்ள குற்றங்களைக் கண்டால் அவன் அவற்றைப் போக்கடிக்க முயல்வானேயன்றி, அவர்களைக் கைவிட்டுவிட்டு அப்பால் செல்ல மாட்டான்.

ஆனல் சுதேசியையும் கண்மூடித்தனமாக அனுஷ்டித்து வந்தால் அதுவும் வீணுகிவிடும். இவ்விஷயத்தில் எவரும் அதிக ஜாக்கிரதையுடன் இருத்தல் வேண்டும். அன்னிய நாட்டுப் பொருள்களைத் தொடவே கூடாதென்று அவற்றைப் பகிஷ்கரித்து, நாட்டுக்குத் தகாத தொழில்களைச் செய்துகொண்டு பணத்தையும் காலத்தையும் விரயம் செய்வது மிகவும் கொடியதொரு காரியம். சுதேசி-அனுஷ்டானி எவனும் எவனிடத்திலும் துவேஷங் கொள்ள மாட்டான். சுதேசியம் வெறுப்பு - மதமன்று. அது தன்னலமற்ற தொண்டு புரிதலென்னும் மதம்; அதன் வேர்கள் 'அன்பு' என்ற 'அஹிம்ஸா தர்ம'த்தில் பதிந்திருக்கின்றன.

[இந்தக் கட்டுரை 1930-ல் எரவாடா மந்திரத்தில் எழுதப்பட்ட தன்று; காந்திஜி விடுதலை பெற்ற பிறகு 1931-ல் வெளியே எழுதப்பட்டது. அரசியல் விஷயம் சிறைச்சாலையில் தடுக்கப்பட்டவற்றுள் ஒன்றதலால், இவர் இதனை அங்கிருந்து எழுதவில்லை.]



# கீதா போதனை

ஆச்ரமத்தில் அனுஷ்டிக்கப்படும் விரதங்களைப் பற்றியும், யக்ஞங்களைப் பற்றியும், யக்ஞங்களின் அவசியத்தைப் பற்றியும் நாம் ஆலோசித்து, முடிவு செய்தாகி விட்டது. இனி எந்த ஒரு மகத்தான கிரந்தத்தை நாம் தினந்தோறும் கொஞ்சங் கொஞ்சமாகப் பாராயணம் செய்து வருகிறோமோ, மனனம் செய்து வருகிறோமோ, எதை நாம் நமது ஆத்மாவை அறிவதற்கான தீபஸ்தம்பமாகவும், துருவ நக்ஷத்திரமாகவும் கருதுகிறோமோ, அந்த பகவத் கீதையை நான் எவ்விதம் அறிந்திருக்கிறேன் என்று ஆராய விரும்புகிறேன். இந்த ஆராய்ச்சியில் என்னை ஈடுபடும்படி செய்தது ஒரு நண்பரின் கடிதமேயாகும். அவர் என்னால் எழுதப்பட்ட 'அநாஸக்தி யோக'த்தைப் படித்தாராம். ஆனால் அதன் பொருள் அவருக்குத் தெளிவாக விளங்கவில்லையாம். ஆம், 'அநாஸக்தி யோகம்' மிக எளிய நடையில் எழுதப்பட்டிருப்பினும், அது மூல கிரந்தங்களின் பொழிப்புரையே யாதலால் அதை அறிந்து கொள்வதில் கஷ்டம் ஏற்படுவது சகஜமே. விஷயமே கடினமாக இருக்கையில் எளிய நடையால் மட்டும் என்ன பிரயோஜனம்? ஆகவே விஷயத்தையே சுலபமாக்கி எளிய நடையில் எழுத முற்படுகிறேன். எந்த விஷயத்தை நாம் சதா நமது வாழ்க்கையில் நடத்திக்காட்ட விரும்புகிறோமோ, எதன் உதவியால் நாம் நமது வாழ்க்கைச் சிக்கல்கள் அனைத்தையும் விடுவிக்கப் பிரயத்தனப்படுகிறோமோ, அத்தகைய நூல் எவ்விதமாக மனத்தில் தோன்றுகின்றதோ, அதே விதமாக நாம் அதை அறிந்து அடிக்கடி மனனம் செய்வோமாகில், முடிவில் நாம் அதன் மயமாகி விடுகிறோம். நானோ எனக்குக் கஷ்டங்கள் நேரும் பொழுதெல்லாம் 'கீதா மாதா'விடமே ஓடுகிறேன்; இன்றுவரை அதன் மூலமாகத் தேறுதலும் அடைந்திருக்கிறேன். ஆகையால் என்னைப்போல் கீதையால் தேறுதல் அடைய விரும்புவோருக்கு நான் எந்த ரீதியில் கீதையை அறிந்துள்ளேன் என்று தெரிந்து கொள்வது அதிக உதவியாக இருக்கலாம். ஒருகால் அவர்களுக்கு எனக்குத் தோன்றியதைக் காட்டிலும் அதிகமான புதிய விஷயங்களும் தோன்றலாமல்லவா?

# 1. அர்ஜுனன் துயர்

கீதை மகாபாரதத்தின் ஒரு சிறு பகுதி. மகாபாரதம் ஓர் இதிஹாச (சரித்திர சம்பந்தமான) நூலாகக் கருதப் படுகிறது. ஆனால் நான் மகாபாரதத்தையும் ராமாயணத்தையும் இதிஹாச நூல்களாக மட்டும் கருதவில்லை. அவற்றை அற நூல்களாகவும் மதித்திருக்கிறேன். இதிஹாசங்களாகவே கூறவேண்டுமாயின் அவற்றை ஆத்ம-இதிஹாசங்கள் என்றே கூறவேண்டும். தவிர, அவை ஆயிரக்கணக்கான வருஷங்களுக்கு முன் நடந்த சம்பவங்களின் வர்ணனை மட்டுமல்ல. ஆனால் இன்று ஒவ்வொரு மானுட தேகத்திலும் நடைபெற்றுவரும் நிகழ்ச்சிகளின் வர்ணனையுமாம். மகாபாரதம், ராமாயணம் இவ்விரண்டிலும் தேவர்களுக்கும் அசுரர்களுக்கும், ராமருக்கும் ராவணனுக்குமிடையே நடந்த யுத்தங்களின் வர்ணனைகள் நிரம்பி யிருக்கின்றன. பாரத யுத்தத்தினிடையே நடந்த கிருஷ்ணார்ஜுன ஸம்வாதமே கீதை எனப்படுவது. இந்தச் சம்பாஷணைகளைச் சஞ்சயன் குருட்டுத் திருதராஷ்ட்ரனுக்குச் சொல்லுகிறான்.

கீதை என்பதற்குப் 'பாடப்பட்டது' என்று பொருள். பகவத் கீதையில் உபநிஷத்துக்களின் ஸாரம் விளக்கப் பட்டிருக்கிறது, ஆகவே கீதை என்பதற்குப் 'பாடப் பட்ட உபநிஷத்' என்று அர்த்தம். உபநிஷத் என்றால் 'ஞான போதனை.' ஆகவே கீதை என்பதற்கு ஸ்ரீ கிருஷ்ணன் அர்ஜுனனுக்களித்த ஞானோபதேசம் என்று பொருள் ஏற்படுகிறது. சகல ஜீவன்களிலும் வசிக்கும் ஸ்ரீ கிருஷ்ணபகவான் நமது தேகத்திலும் வீற்றிருக்கிறார் என்று நாம் அறிதல் வேண்டும். அர்ஜுனனைப்போல் விஷயங்களை அறிய ஆவல்கொண்டு, தர்ம சங்கடம் நேரும் போது, நாம் எங்கும் நிறைந்த—நமது உள்ளத்திலேயும் வீற்றிருக்கும் — பகவானைக் கேள்வி கேட்போமானால், அவரையே சரணமாக அடைவோமானால், அப்பொழுது அவர் நமக்கருள் புரியத் தயாராகவே யிருப்பதைக் காண்போம். நாம் தூங்கிக்கொண்டிருக்கிறோம். அந்தர்யாமியோ [உள்ளே இருப்பவர்] சதா விழித்துக்கொண்டிருக்கிறார். விஷயங்களை அறிய நமக்கு ஆவல் பிறக்க வேண்டுமென்றுதான் அவர் எதிர்பார்த்திருக்கிறார். ஆனால் நமக்கு அவரை அணுகிக் கேள்விகள் கேட்கத் தெரிவதில்லை. கேள்விகள் கேட்க மனமும் வருவதில்லை. ஆகையினால் கீதை போன்ற தர்ம நூல்களைத் தினமும் படித்துத்

தியானம் செய்து, நம் உள்ளத்தில் ஒரு விதமான தர்ம உணர்ச்சியைப் பிறப்பித்துக்கொள்ள விரும்புகிறோம். கேள்வி கேட்டு விஷயத்தை அறியவும் பழகுகிறோம். அதன்பின் துன்பம் வரும்போதெல்லாம் நாம் கீதையினிடம் ஓடுகிறோம், தேறுதலும் அடைகிறோம். யார் கீதையை இத்தகைய நோக்கத்துடன் படிக்கிறார்களோ அவர் நமக்கு ஸத்குருவாகிறார்; தாய்க்குச் சமானமாகிறார். அத்தகையோரை அடைந்தவனும் க்ஷேம மடைகிறான். கீதையின் மூலம் நாம் நமது வாழ்க்கைச் சிக்கல்கள் அனைத்தையும் போக்கிவிடமுடியும். ஆகவே மேலே கூறிய படி தர்ம உணர்ச்சியைப் பெறுவதற்காக யார் விதிப்படி கீதையைப் பாராயணம் செய்கிறார்களோ, அவர்களுக்குத் தினந்தோறும் புதிய புதிய ஆனந்தம் உண்டாகும்; புதிய புதிய பொருள்கள் விளங்கிக்கொண்டிருக்கும். கீதையின் மூலமாக விளக்கப்படாத அறவிஷயங்கள் ஒன்றுகூட இல்லை. நமக்குச் சிரத்தை யின்மையால் படிப்பதற்கும், விஷயங்களை அறிந்துகொள்வதற்கும், ருசியில்லாமல் இருக்கலாம். ஆனால் அது வேறு விஷயம். ஸத் விஷயங்களில் நமக்குத் தினந்தோறும் சிரத்தை ஏற்படுவதற்காகவும், நாம் எச்சரிக்கையாக இருப்பதற்காகவுமே கீதையை உருவேற்றுகிறோம். இவ்விதம் கீதையை மனனம் செய்து வந்ததில், அதிலிருந்து நான் அறிந்து கொண்ட பொருளின் ஸாராம்சத்தை ஆச்ரம வாசிகளுக்கென்று இதனடியில் வரைகிறேன்.

பாண்டவர்களும் கௌரவர்களும் தத்தம் சேனைகளுடன் யுத்தகளத்தை யடைந்து அணிவகுத்து நின்றனர். கௌரவர்களின் ராஜாவான துரியோதனன் துரோணாசாரியாரிடம் இரு சேனைகளிலுமுள்ள முக்கிய வீரர்களைப் பற்றி வர்ணிக்கிறான். யுத்த முஸ்தீபுகள் முடிந்ததும் இரு பக்கத்துச் சங்குகளும் தொனித்தன. பார்த்த ஸாரதியான ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா அர்ஜுனனுடைய ரதத்தை அவ்விரு சேனைகளுக்கு மிடையே செலுத்தினார். எதிரிகளின் சேனையில் நின்று கொண்டிருந்த வீரர்களைக் கண்ணுற்ற விஜயன் திகிலடைந்து பகவானிடம் கூறுகிறான்:—"ஹே வாசுதேவா! நான் இவர்களுடன் எவ்வாறு யுத்தம் செய்வேன்? வேறு பகைவர்களுடன் போர் புரிவதாயிருந்தால், நான் எப்போதோ சமர் தொடங்கி யிருப்பேன். ஆனால் இவர்களோ சொந்த ஜனங்கள், என் உறவினர்கள்! கடைசியில் கௌரவர்கள் யார், பாண்டவர்கள் யார்?

பெரியப்பன், சிற்றப்பன் மக்களன்றோ? நாங்கள் அனைவரும் ஒன்றாக வளர்ந்து ஆளாகியிருக்கிறோம். துரோணர் அவர்களுக்கு மட்டுந்தானா குரு? எங்களுக்கும் சகல வித்தைகளையும் கற்றுக் கொடுத்த குருவன்றோ? அதோ பீஷ்மர் நிற்கிறார். அவர் எங்கள் பிதா மகனன்றோ? அவருடன் எவ்வாறு சண்டை போடுவேன்? கௌரவர்கள் மகா கொடியவர்கள் என்பது வாஸ்தவமே. அவர்கள் கணக்கற்ற துஷ்ட கர்மங்களைச் செய்திருக்கிறார்கள், அநியாயமாக நடந்து கொண்டிருக்கிறார்கள். பாண்டவர்களாகிய எங்கள் ராஜ்யத்தையும் கவர்ந்து அவமானப் படுத்தியிருக்கிறார்கள். இவையாவும் அவர்கள் எங்களுக்கு இழைத்த குற்றங்களே. எனினும் அவர்களைக் கொன்று விட்டு, நான் போவதெங்கே? எனக்கும் சிறிது பகுத்தறிவு இருக்கிறது, விவேக மிருக்கிறது. உறவினருடன் சண்டையிடுவது பாவம் என்று நான் கருதுகிறேன். பாண்டவர்களாகிய எங்களை வஞ்சித்து, எங்களுடைய பாகமாகிய ராஜ்யத்தை அபகரித்துக் கொண்டவர்களாகவே இருக்கட்டும், அதனால் பாதகமில்லை. எங்களை யெல்லாம் கொன்றுவிடக் கருதினாலும் கொல்லட்டும். ஆனால் அதற்காக நாங்கள் அவர்கள் மீது கை வைக்கமாட்டோம். ஹே கிருஷ்ணா! நான் இந்த பந்துக்களுடன் சண்டை போடவே மாட்டேன்'' என்று கூறி, அர்ஜுனன் மூர்ச்சை யுற்றுத் தன் ரதத்திலிருந்து விழுந்து விட்டான்.

இவ்விதம் இந்த அத்தியாயம் முடிவு பெறுகிறது. இந்த அத்தியாயத்திற்கு ''அர்ஜுனன் துயர யோகம்'' என்று பெயர், அர்ஜுனனுக்கு எத்தகைய துக்கம் ஏற்பட்டதோ அத்தகைய துக்கம் நம்மனைவருக்கும் ஏற்பட வேண்டும். தர்ம வேதனையும், விஷயத்தை யறிய ஆவலும் மின்றி ஞானம் கிடைப்பதரிது. நல்லதெது, கெட்டதெது என்றறிய இச்சைகூட அடையாதவனுக்குத் தர்ம விஷயத்தைப் பற்றிய பேச்செதற்கு? குருக்ஷேத்திரத்தில் நடந்த யுத்தம் கேவலம் நிமித்த மாத்திரமே. அதாவது உண்மைக் குருக்ஷேத்திரம் நமது சரீரமே. அது (சரீரம்) குருக்ஷேத்திர மட்டுமல்ல, தர்ம க்ஷேத்திரமும் கூட. இந்தச் சரீரத்தை ஈச்வரனுடைய வாசஸ் தானமென்று கருதி, அவ்வாறே செய்வோமானால் இது தர்ம க்ஷேத்திரமாகிறது. இந்த க்ஷேத்திரத்தில் தினந் தோறும் நம் கண் முன்னாலேயே ஏதேனுமொரு சண்டை நடந்து கொண்டேதா னிருக்கிறது. அத்தகைய சண்டை

களுக்குப் பொரும்பாலும் காரணமாக இருப்பது "இது எனது, அது உனது'' என்ற மனப்பான்மையேயாகும். இக்காரணம் பற்றியே பகவான் அர்ஜுனனுக்குப் போதிக்கிறார் :—"அதர்மத்திற்கு மூலகாரணம் ராகத்வேஷங்களே (விருப்பும் வெறுப்பும்)." "எனது'' என்ற மாத்திரத்தில் ராகம் (விருப்பு) உதிக்கிறது. "உனது'' என்ற அளவில் துவேஷ மேற்படுகிறது; பகை ஏற்படுகிறது. ஆனது பற்றியே "எனது, உனது'' என்ற பேதத்தை மறப்பது நல்லது. கீதைமட்டு மின்றி ஸகல தர்ம நூல்களும் இதே விஷயத்தைப்பற்றித் தூண்டித் தூண்டிக் கூறி எச்சரிக்கை செய்கின்றன. இவ்விஷயத்தைப்பற்றிப் பேசுவது ஒன்று, அதன்படி நடப்பது வேறு; ஆனால் கீதை இந்தப் போதனையை வாழ்க்கையில் நடத்திக் காட்ட வேண்டுமென்று போதிக்கிறது. அது எவ்வாறு என்று விளக்க முற்படுவோம்.

## 2. கடமையைச் செய்

அர்ஜுனன் சற்றுக் குணமடைந்தவுடன், பகவான் அவனைச் சற்றுக் கடிந்து பின்வருமாறு கூறினார் :— "பார்த்த! உனக்கு இவ்வளவு மோகம் எங்கிருந்துவந்தது? உன்னைப்போன்ற வீர புருஷர்களுக்கு இது பெருமை யளிக்காது.'' ஆனால் இம் மொழிகள் அர்ஜுனனுடைய மோகத்தைத் துரத்த வல்லனவா? அவன் யுத்தம் செய்ய மறுத்து மேலும் கூறுவான் :—" இந்த பந்து ஜனங்களை — சம்பந்திகளைக் கொன்று, அதனால் ராஜ்ய பதவி மட்டுமல்ல, சுவர்க்க சுகமே கிடைப்பதாயினும் சரியே, அது எனக்குத் தேவையில்லை. நான் பெருத்த மனக் குழப்பத்தில் ஆழ்ந்துள்ளேன். இது சமயம் என் தர்மம் (கடமை) எது வென்று எனக்குத் தோன்றவில்லை. உன்னைச் சரண மடைகிறேன், எனக்கு என் தர்மத்தை விளக்குவாயாக.''

இவ்விதம் அர்ஜுனன் துக்கப்படுவதையும், அவன் உள்ளத்தில் விஷயத்தை அறிய ஆவல் உண்டாயிருப்பதையும் கண்ட பகவானுக்கு இரக்க முண்டாயிற்று. அவர் கூறுகிறார்: "நீ காரணமின்றித் துக்கிக்கிறாய். சரியாக அறிந்துகொள்ளாமல் ஞானமொழி பேசுகிறாய். தேகத்திற்கும், அதனுள் உறையும் ஆத்மாவுக்கும் உள்ள பேதத்தை மறந்து நீ பேசுவதாகத் தெரிகிறது. தேகம் மரிக்கிறது, ஆத்மா மரிப்பதில்லை. தேகமோ பிறவியிலிருந்தே அழியக்கூடிய தன்மை வாய்ந்தது. தேகத்தில் இளமையும்

முதுமையும் தோன்றுவதே போல அழிவும் காலக்கிரமத்தில் ஏற்படுகிறது. தேகத்தின் அழிவு ஏற்பட்ட பின்பும் தேஹி(ஆத்மாவின்)யின் அழிவு ஒரு பொழுதும் ஏற்படுகிறதில்லை. மேலும் தேகம் ஜனிக்கிறது. ஆத்மாவுக்கு ஜனனமும் கிடையாது; தேய்வுமில்லை, விருத்தியுமில்லை. அது என்றும் உள்ளது, இன்று இருக்கிறது. இனியும் இருக்கும். ஆகவே நீ எதன் பொருட்டுச் சோகமடைகிறாய்? உன் துயரம் உனக்கு ஏற்பட்ட மோகத்திலிருந்தே விளைந்திருக்கிறது. இந்தக் கௌரவர்களை நீ உன்னைச் சேர்ந்தவரெனக் கருதுகிறாய். அவ்வாறு கருதும்போழுதே உன் மனத்தில் மமதை தோன்றுகிறது. ஆனால் நீ எந்தத் தேகங்களுக்காக இவ்வளவு மமதை அடைகிறாயோ, அவை அழிந்தே தீரவல்லன என்பதை ஞாபகப்படுத்திக்கொள். அவற்றில் (தேகங்களில்) வசிக்கும் ஆத்மாவைப்பற்றியோ என்றால், அவற்றை அழிக்கும் சாமர்த்தியம் யாருக்கும் கிடையாதென்று உணர்க. அதை நெருப்பும் எரிக்காது, நீரும் நனைக்காது, காற்றும் அதை உலர்த்தாது. ஆம், நீ உன் கடமையைச் சிந்தித்துப் பார். நீயோ ஒரு க்ஷத்திரியன். உன் பின்னே இந்தப் பெரிய சேனைக்கூட்டம் நிற்கிறது. இப்பொழுது நீ பேடியைப்போல நடந்துகொள்வாயானால், நீ எண்ணிக்கொண்டிருப்பதற்கு நேர் விரோதமான பலனே ஏற்படும். மேலும் உன்னைக் கண்டு உலகம் நகைக்கும். இதுவரை நீ மகா வீரர்களில் ஒருவனாகக் கருதப்பட்டுள்ளாய். இப்பொழுது இவ்வளவு தூரம் யுத்த முஸ்தீபுகள் நடந்தேறிய பின் நீ யுத்தம் செய்யப் பின்வாங்குவாயானால், நீ பயந்து ஓடிப்போனாய் என்றே உலகம் மதிக்கும். போர்க்களத்திலிருந்து பின்னிடைந்து ஓடுவது உன் கடமையாக இருப்பின், அவ்வாறு செய்வதனால் ஏற்படும் உலக நிந்தையைப் பற்றிக் கவலைப்படத் தேவையில்லை. ஆனால் இங்கு நீ ஓடுவது அதர்மமாகிறது. இவ்விதம் இரண்டு விதத்திலும் தோஷம் ஏற்படுவதைக் கவனி.

"இதுவரை நான் உனக்குப் புத்தியைப் பற்றியே கூறினேன். ஆத்மாவுக்கும் தேகத்திற்குமுள்ள பேதத்தை விளக்கினேன். உன் குலதர்மத்தைப் பற்றியும் எடுத்துரைத்தேன். இனி நான் உனக்குக் கர்மயோகத்தின் பெருமையை உணர்த்துகிறேன் கேள்: இந்தக் கர்மயோகத்தை அப்பியாசம் செய்வோன், இதை விதிப்படி வாழ்க்கையில் நடத்திக் காட்டுவோன், ஒருகாலும் கஷ்டமடைவதேயில்லை. இது தர்க்கிக்கத் தகுந்த விஷய

மல்ல. இது அனுஷ்டிக்கப்பட்டு, அனுபவம் அடையத் தக்க விஷயமாகும். ஆயிரம் மணங்கு எடையுள்ள தர்க்கத்தைக் காட்டிலும் ஒரு குன்றிமணி எடையுள்ள ஒழுக்கமே மேம்பட்டதென்பது உலகறிந்த விஷயம். இந்த ஒழுக்கத்தின் நன்மை தீமைகளைப் பற்றி விவாதிக்கத் தொடங்குவதும் கெடுதலாகவே முடியும். பரிணாமத்தைப் பற்றி எண்ணும்பொழுதே நமது புத்தி மழுங்கி விடுகிறது. புஸ்தகப் பண்டிதர்கள் கர்ம காண்டத்தில் ஈடுபட்டு, அநேக விதமான பலன்களை அடைய வேண்டுமென்ற இச்சை யுடையவர்களாகிப் பல கிரியைகளைத் தொடங்கிவிடுன்றனர். ஒரு கிரியையில் பலன் கிட்டவில்லை யென்று தெரிந்த மாத்திரத்தில் வேறு ஒரு கிரியையைச் செய்ய முற்படுகின்றனர். இதன் நடுவில் யாராவது மூன்றாவது முறை ஒன்றைக் கூறுவார்களானால், அதையும் செய்ய முற்படுகின்றனர். இவ்விதம் செய்வதனால் அவர்களது புத்தி நிலையற்றுப் போகிறது. ஆனதுபற்றியே மனிதன் கர்மத்தின் பலனைக் கருதாமல் தன் கடமையை—கர்மத்தை மட்டும் செய்துகொண்டு போகவேண்டும். ஆகையால், பார்த்தா! இது சமயம் சமர் புரிதலே உன் கடமையாகிறது, இதை முடிவுறச் செய்வது என் தர்மமாகிறது. லாபமும் நஷ்டமும், வெற்றியும் தோல்வியும் உன் கையில் இல்லை. நீ ஏன் வண்டியின் இருசைப்போல (அச்சு) இதன் பாரத்தை உன் தலையில் ஏற்றிக் கொள்ளுகிறாய்? வெற்றியும் தோல்வியும், குளிரும் வெப்பமும், சுகமும் துக்கமும் மனிதன் பின்னே தொடர்ந்து நிற்பன. மனிதன் அவற்றைச் சகித்தே தீரவேண்டும். பலன் எத்தகையதாயினும், அதைப்பற்றிச் சிந்தனையற்று, ஸமத்வ பாவத்துடன் தன் கடைமையைச் செய்துகொண்டு, அதிலேயே தன்னை மறந்திருக்க வேண்டும். இதைத்தான் யோக மென்பர். இதில்தான் கர்மத்தின் பெருமை யிருக்கிறது. அதாவது, காரியசித்தி இதைச் செய்வதைப் பொறுத்திருக்கிறதே யன்றி, இதனால் ஏற்படும் பலனைப் பொறுத்திருக்கவில்லை. நீ உன்னைத் தேற்றிக்கொண்டு, உன் கடமையைச் செய்ய முற்படு! அதன் பலன்களின் மேலுள்ள ஆசையைத் துறந்து விடு!"

## ஸ்திர சித்தனாயிரு

இதைக் கேட்ட அர்ஜுனன், "இதென்ன, சக்திக்குப் புறம்பான விஷயமாகத் தெரிகிறது! வெற்றி, தோல்வி

யின் சம்பந்தமான விசாரங்களைத் துறந்து விடுதல், ஸமத்வ பாவமடைதல், ஸ்திர புத்தியுடன் இருத்தல் ஆகிய இவையெல்லாம் எவ்வாறு லயிக்கும்? அத்தகைய ஸ்திர புத்தியுடையோனுவது எங்ஙனம்? அவனுடைய அடையாளங்கள் என்ன? எனக்கிவற்றை எடுத்துரைப்பாயாக'' என்று வினவினன்.

இதைக் கேட்ட பகவான் கூறுகிறுர்: ''ஹே அர்ஜுன! எவன் தன் ஆசைகள் அனைத்தையும் துறந்து தன்னுள் தானே மகிழ்ச்சியடைகிறுனே, அவனே ஸ்திர சித்தன், ஸ்திர புத்தி யுடையோன், சமாதி நிலை யடைந்தோன் என்று சொல்லப்படுகின்றுன். அத்தகையோன் துன்பங்கள் வரும்போது மனமுடைந்து போகான். இன்பங்கள் வரும்பொழுதும் மகிழ்வுறுன். சுகம் துக்கம் முதலிய உணர்ச்சிகள் பஞ்சேந்திரியங்களைச் சார்ந்த விஷயங்களாகும். ஆகவே சமர்த்தனை புருஷன், ஆமை தன் அவயவங்களைத் தன்னுள் அடக்கிக் கொள்வதே போல், விஷய பதார்த்தங்களிலிருந்து தன் புலன்களை நீக்கித் தன் வசப்படுத்திக் கொள்வான். ஆமையானது தன் சத்துருக்களைக் கண்ட இடத்தில் மட்டும் தன் அவயவங்களைத் தன்னுள் அடக்கிக் கொள்ளும். மனிதனுடைய புலன்கள் சதா ஓய்வின்றி விஷய பதார்த்தங்களை நாடித் திரிவதால், அவன் அவற்றைச் சதா தன்னுள் அடக்கிக் கொண்டிருப்பதைத் தவிர, தானே சுயமாக அவற்றுடன் போராடிக் கொண்டு மிருக்கவேண்டும். இதுவே உண்மையான சமர். சிலர் விஷய பதார்த்தங்களை ஒழிப்பதற்காகத் தங்கள் உடலை வாட்டுகிறுர்கள்; உபவாச மிருக்கிறுர்கள். இது சரியான முறையே. ஆனுல் உபவாசத்தால் மட்டும் விஷய வாசனைகள் அழிவதில்லை. உபவாசம் இருக்கையில் இந்திரியங்கள் விஷயங்களைத் தேடி அலைவதில்லை. உபவாசம் முடிந்ததும் அவை முன்னைக் காட்டிலும் விஷய வாசனையை அதிகமாக அடையலாம். ஆகவே விஷய வாசனைகளை ஒழிப்பதற்குக் கூட ஈச்வரானுக்கிரகம் தேவையாக இருக்கிறது. இந்திரியங்களுக்கு எவ்வளவு பலம் இருக்கிறது என்றுல், மனிதன் மட்டும் ஜாக்கிரதையாக இருக்கத்தவறியதும் அவை அவனைப் பலாத்காரமாகத் தம்முடன் இழுத்துக் கொண்டே போய்விடும். ஆகையினுல் மனிதன் தன் இந்திரியங்களைச் சதா தன் கைவசப்படுத்தியே வைத்திருத்தல் அவசியம். எப்பொழுது மனிதன் ஈச்வர தியானத்தில் ஈடுபட்டுத் தன்னுள்ளேயே – தன் ஹிருதயத்திற்குள்ளேயே - வீற்றிருக்கும் அந்தர்யாமியை

அறிகிருனே, பக்தியுடன் தொழுகிருனே, அப்பொழுது மட்டுமே மனிதனுல் தன் புலன்களைக் கட்டுப்படுத்த முடியும். இங்ஙனம் எவன் என்னையே சார்ந்து, இந்திரியங்களைத் தன்வசப்படுத்திக் கொள்ளுகிருனே அவனே ஸ்திரபுத்தி யுடையோன் என்று கூறப்படுகிருன்.

"இனி எவன் அவ்வாறு ஸ்திரபுத்தியற்றிருக்கிருனே அவனுக்கு எந்தக் கதி ஏற்படுகிறது என்று கூறுகிறேன் கேள்: எவனுடைய இந்திரியங்கள் சுதந்தர பூர்வமாக விடப்பட்டிருக்கின்றனவோ, அவை தினந்தோறும் விஷய பதார்த்தங்களையே நாடிக்கொண்டிருக்கும். அவற்றின் மீது அடங்கா ஆவலுறும். ஆவலின் காரணமாகக் காமம் ஜனிக்கும். காமம் கைகூடாவிடத்துக் கோபம் பிறக்கும். கோபமோ பைத்தியத்தில் பாதி. ஆதலால், கோபம் பிறந்த மாத்திரத்தில் நினைவு தவறிவிடுகிறது. நினைவு தவறியவுடன் தடுமாற்றம் ஏற்படுகிறது. அத்தகைய மனிதன் முடிவில் நாசத்தையே அடைகிருன். மாலுமி இல்லாத மரக்கலம் எவ்விதம் அலைகளின்மீது நிலையற்றுத் தத்தளிக்குமோ, அதே போலக் கட்டுப் படுத்தப்படாத இந்திரியங்களும் தம் இஷ்டம்போல் அலைவன! மாலுமியற்ற மரக்கலத்தைக் காற்று இங்கு மங்கும் இழுத்துச் சென்று, முடிவில் ஒரு பாறைமீது மோதுவித்துச் சின்னுபின்ன மாக்குவதேபோல், கட்டுப் படுத்தப்படாத இந்திரியங்களும் ஒருவனுடைய மனத் தைத் தம் வழியே இழுத்துச்சென்று முடிவில் அதை நாச மாக்கிவிடும். ஆதலின், மனிதன் இந்திரிய பதார்த்தங்க ளிடம் ஆசை வைக்கலாகாது.

## பொதுநலத் தொண்டே பெரிது

"இந்திரியங்களைக் கட்டுப்படுத்தி, அவற்றை நம் வசமாக்கிக் கொள்வதென்றுல் என்ன? அவற்றைத் தீய வழிகளில் செல்லவிடா திருத்தலேயாம். உதாரணமாகக் கண்கள் நேரே நோக்கட்டும்; புனித வஸ்துக்களையே காணட்டும். காதுகள் பகவானுடைய பஜனைகளையே கேட்கட்டும்; அல்லது துக்கப்படுவோரின் குறைகளையே கேட்கட்டும். கைகளும் கால்களும் பொதுநலத் தொண்டில் ஈடுபடட்டும். சகல புலன்களும் மானுட சேவையிலேயே ஈடுபட்டு உழைக்கட்டும். அதிலேயே ஈச்வரானுக்ரஹம் அவசியம் சித்திக்கும். ஈச்வரானுக்ரஹம் ஏற்பட்ட அளவில் ஒருவனுடைய சகல துக்கங்களும் தாமே விலகிக் கொள்ளுகின்றன என்று உறுதியாக நம்பு. சூரியனுக்கு

முன் பனி உருகிவிடுவதே போல் ஈச்வரப் பிரசாதம் ஏற்பட்டவுடன் சகல துக்கங்களும் தாமே கரைந்து விடுகின்றன. அத்தகைய அருள் பெற்றோனே உறுதி கொண்ட புத்தியுடையோனாகிறான். ஸ்திர புத்தியற்றோனுக்கு உத்தம மனோபாவம் ஏது? நற்பாவனை யற்றோனுக்கு மனச் சாந்தி யேது? சாந்தியின்றேல் சுகமேது? ஸ்திரபுத்தி யுடையோன் மலைபோல் தெளிவாகக் காண்பனவற்றை, ஸ்திரபுத்தி யற்றோன் உலக மாயையில் சிக்கிக் காணத் தவறிவிடுகிறான். மேலும் எவை ஏனையோருக்கு ஸ்பஷ்டமாகத் தெரிகிறதோ, அவை சமாதி நிலையை யடைந்த யோகிக்கு அற்பமாகவும் கெடுதலாகவும் காணப்படும். ஆதலால் அவற்றை அவன் கண்ணெடுத்துக் கூடப் பார்ப்பதில்லை. நதிகளின் நீர் சதா வந்து விழுந்து கொண்டிருந்தும், கடலானது சதா அசையா நிலை கொண்டிருப்பதே போல், விஷய விருப்பங்கள் சதா வந்து விழுந்து கொண்டிருப்பினும், யோகியின் மனம் மட்டும் எப்பொழுதும் அமைதியாகவே யிருக்கும். ஆனது பற்றியே சகல விருப்பங்களையும் துறந்து, அகந்தையை அழித்து, எவன் பரந்த நோக்குடையவனாகிறானோ, அவனே சாந்தியடைகிறான். இந்தச் சாந்திநிலையே ஈச்வரப் பிராப்திக்கு உகந்த ஸ்திதி. இந்த ஸ்திதியில் இதுவரையில் எவன் நிலைத்திருக்கிறானோ அவன் மோக்ஷத்தையே அடைகிறான்.''

## 3. பற்றற்ற சேவையே கர்ம யோகம்

ஸ்திர புத்தியுடையோனுடைய லக்ஷணங்களைக் கேட்ட அர்ஜுனனுக்கு மனோ சாந்தி யடைந்து வீற்றிருத்தலே போதுமானதென்று தோன்றிற்று. ஸ்திர புத்தியுடையோனுடைய லக்ஷணங்களில் 'கர்மம்' என்ற பெயரைக்கூட அவன் (அர்ஜுனன்) கேட்கவில்லை. ஆகவே அவன் பகவானை வினவுகிறான் :—'' உன் மொழிகளிலிருந்து கர்மத்தைக் காட்டிலும் ஞானமே சிறந்தது என்று ஏற்படுகிறது. இக்காரணம் பற்றி என் புத்தி கலங்கிவிட்டது. செய்கையைக் காட்டிலும் புத்தியே சிறந்ததெனில், என்னை ஏன் இக் கொடிய செய்கையில் (யுத்தத்தில்) புகுத்துகிறாய்? ஞானம், கர்மம் என்ற இவ்விரண்டில் எனக்கு நன்மை தரத்தக்கது எதுவென்று எனக்கு அருள்வாயாக!''

இதைக் கேட்ட பகவான்: ''ஹே பாவமற்ற அர்ஜுனா! ஆதியிலிருந்தே இவ்வுலகில் இரண்டு மார்க்கங்கள்

இருந்து வருகின்றன. ஒன்று ஞானத்தைப் பிரதான மாகக் கொண்டது, மற்றொன்று கர்மத்தைப் பிரதான மாகக் கொண்டது.

"ஆனால் மனிதன் ஒரு க்ஷண நேரமாவது கர்மம் செய் யாமல் சோம்பேறியாக இருக்கமுடியாதென்றும், கர்மம் செய்யாமல் எவனும் ஞானத்தை அடைய முடியாதென் றும் ஆலோசித்துப் பார்த்தால் உனக்கே தெரியவரும். சகலத்தையும் துறந்துவிடுவதனாலேயே மனிதன் ஸித்த புருஷனாக முடியாது. ஒவ்வொரு மனிதனும் கொஞ்சம் வேலையாவது செய்துகொண்டிருப்பதையே நீ காண்கிறாய். ஏனெனில் மனித சுபாவமே அத்தகையது. அது அவனை ஏதேனும் ஒன்றைச் செய்து கொண்டிருக்கவே தூண்டும். உலக இயல்பு இவ்வாறிருக்க, எவனொருவன் கால் மேல் கால் போட்டுக்கொண்டு சோம்பேறியாக உட்கார்ந் திருக்கிறானோ, ஆனால் மனத்தில் மட்டும் அநேக விதமான சங்கற்பங்களையும் விகற்பங்களையும் கற்பனை செய்து கொண்டிருக்கிறானோ, அவனை மூர்க்கர்களில் ஒரு வனாகவே கருதவேண்டும்; கள்ள ஆசாரமுடையோனாகவும் கூறலாம். இதை விட, இந்திரியங்களைத் தன்வசப்படுத்திக் கொண்டு விருப்பு வெறுப்பற்று ஆத்ம வஞ்சகமற்று, பற்றற்றோனாகி—அதாவது பலன்களின் பேரில் ஆசை யைத் துறந்தோனாகி—கை கால்களால் ஏதேனு மொன் றைச் செய்துகொண்டு கர்ம யோகத்தைக் கடைப் பிடித்துக் கொண்டிருத்தல் சாலச் சிறந்ததன்றோ? ஆதலால் நீ இந்திரியங்களை உன் வசப் படுத்திக்கொண்டு, உன் நித்திய கர்மத்தை—உனக்கென்று ஏற்பட்ட சேவா காரியத்தைச் செய்துகொண்டிரு, சோம்பி உட்கார்ந் திருப்பவருடைய உடல் முடிவில் க்ஷீணித்துப் போம். ஆனால் கர்மம் செய்கையில் யக்ஞ காரியத்தைத் தவிர (பரோபகாரமான தொண்டு) மற்றக் கர்மங்கள் அனைத் தும் மனிதனை அடிமைப்படுத்தி விடுகின்றன என்பதை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். யக்ஞம் என் பதற்கு, 'சுயநலமின்றிப் பரோபகாரத்திற்காக எடுத்துக் கொண்ட சிரமம்' அல்லது இன்னும் சுருக்கமாகக் கூறுமி டத்து 'ஸேவை' என்று பொருள். ஆகையினால் எவன் ஸேவை யின் பொருட்டாகவே ஸேவை செய்கிறானோ அவனே புனி தன். விருப்பு வெறுப்பு அவனிடம் தலை காட்டா. விஜயா! ஆனதுபற்றியே நீயும் யக்ஞம்—ஸேவை—செய்து வா.

"பிரம்மா இவ்வுலகத்தைப் படைத்த காலத்திலேயே யக்ஞத்தையும் (ஸேவையையும்) கூடவே சிருஷ்டித்து, நமது

காதுகளில், 'பிருதிவியின்மேல் ஜனனமெடு; பரஸ்பரம் ஸேவை செய்; விருத்தி செய்; சகல ஜீவர்களையும் தேவர்களின் ரூபமாகக் கருது' என்று ஓதினார். ஆகவே நீ இந்த தேவதா ஸ்வரூபங்களுக்கு ஸேவை செய்து அவர்களை மகிழச்செய், அப்பொழுது அவர்களும் உன்னை மகிழச்செய்வார்கள். மன மகிழ்வெய்திய தேவர்கள் நீ கேட்காமலே உனக்குப் பலனளிப்பார்கள். எவனொருவன் உலக ஸேவை செய்யாமல் உலகத்தவரின் பகுதியை—அவர்களுக்கு உரிய பங்கை — அவர்களுக்குக் கொடுக்காமல் தன் வயிற்றை மட்டும் நிரப்பிக் கொள்ளுகிறானோ, அவனைத் 'திருடன்' என்றே கூறலாம். ஆனால் எவனொருவன் உலகத்தில் சகல ஜீவர்களுக்கும் உரியதான அதனதன் பங்கை அடையச் செய்துவிட்டுத் தன் பங்காகிய உணவை உட்கொள்ளுகிறானோ—அல்லது தன் பாகத்தை யனுபவிக்கிறானோ—அவனே மேலோன். அவனுக்கு அதை அனுபவிக்க உரிமையுமுண்டு அவன் பாவத்தினின்றும் விடுபடுகிறான். ஆனால் அதற்கு மாறாக எவன் தனக்கென்றே பொருளீட்டுகிறானோ, தொழில் செய்கிறானோ, அவன் பாவி. அவன் உண்பதும் பாவமயமான அன்னம். சிருஷ்டியின் நியாயம் என்னவென்றால், ஆகாரத்தினால் ஜீவராசிகள்பிழைக்கின்றன. ஆகாராதிகள் மழையினால் விளைகின்றன. மழை, யக்ஞத்தால் அல்லது ஜீவர்களின் உழைப்பால் ஏற்படுகிறது. எங்கே ஜீவர்கள் இல்லையோ, அங்கே மழையும் இல்லை. எங்கு ஜீவர்களுண்டோ, அங்கு மழையுமுண்டு. சிரமப்பட்டு ஜீவிப்பவனே—அதாவது உழைப்பின் பயனாய் ஜீவிப்பவனே — உயிர் பெற்றவனாகிறான். எவனும் படுத்துக்கொண்டே உயிர் வாழ முடியாது. சோம்பலாகவே இருந்துகொண்டு காலம் கழிக்கலாம் என்ற மூட எண்ணம் மட்டும் மனித வர்க்கத்தின் உள்ளத்தில் குடிகொள்ளுமேயானால், அதனால் உலகத்திற்கு எத்தகைய பெருங் கஷ்டம் ஏற்படும் என்று ஆலோசித்துப் பார்!

பின்னும் பகவான் சொல்லுகிறார் :—"கர்மத்தைப் பிரம்மா படைத்தார். பிரம்மாவை அக்ஷர பிரம்மா படைத்தார்" என்றார். ஆகவே யக்ஞமெனப்படும் பரோபகாரார்த்தமான ஸேவையிலேயே அக்ஷர பிரம்மாவான பரமேச்வரன் எழுந்தருளியுள்ளார் என்று அறிதல் வேண்டும். இந்த ஸேவா முறையில் எவன் ஒழுகுவதில்லையோ, அவன் பாவி. அவன் வாழ்க்கையும் பூமிக்கு வீண் பாரமே.

"சாந்த நிலையை எய்திச் சதா சந்துஷ்டனாக இருப்பவனுக்கு யாதொரு தொழிலுமில்லை யென்றே கூறலாம். தொழில் செய்தாலும் சரி, செய்யாவிட்டாலும் சரி, அவனுக்கு அதனால் யாதொரு லாப நஷ்டமும் இல்லை. அவனுக்கு எதன் பேரிலும் சுயநல மென்பதில்லை. எனினும், யக்ஞ காரியங்களை மட்டும் எவனும் கைவிடலாகாது. ஆகவே நீ உன் நித்ய கர்மங்களாகிய கடமையைச் செய்துகொண்டிரு. ஆனால் அதில் விருப்பு வெறுப்புக் கொள்ளாதே. அதில் பற்றுக் கொள்ளாதே. பற்றற்றுத் தொண்டாற்றுவோன் பரம்பொருளை அடைகிறான். இன்னும் கேள். ஜனகரைப் போன்ற பற்றற்ற அரசர்களும் தம் கடமையைச் செய்துகொண்டே ஸித்தி யடைந்திருக்கின்றனர், ஏனெனில் அவர்கள் சதா உலக உபகாரத்தையே மனத்துட்கொண்டு கடமை செய்தனர். அப்படியானால் நீ மட்டும் இதற்கு மாறாக ஏன் நடந்து கொள்ள வேண்டும்? உலக சம்பிரதாயம் எப்படி யிருக்கிறதென்றால், 'நல்லவர்கள், பெரியோர்கள்' என்று கருதப்படும் மக்கள் எவ்வாறு நடந்து கொள்ளுகிறார்களோ, அவ்வாறே ஏனைய சாதாரண ஜனங்களும் நடக்க முற்படுகிறார்கள். உதாரணத்திற்கு என்னையே எடுத்துக்கொள். தொழில் செய்து நான் என்ன நலனை அடைய இருக்கிறது? எனினும் நான் அறுபது நாழிகையும் தொழிலிலேயே ஈடுபட்டிருக்கிறேன். ஜனங்களும் என்னைப் பின்பற்றி நடந்துகொள்கின்றனர். நான் மட்டும் சோம்பேறியாக இருப்பேனாகில், உலகம் எக்கதி யடையும் தெரியுமா? சூரிய, சந்திர, நக்ஷத்திரங்கள் ஸ்தம்பித்துப் போய்விடும்; உலகமே அழிந்துவிடும்! ஏனெனில் இவ் அனைத்தையும் இயக்குவோனும், ஒழுங்குபடுத்துவோனும் நானே யன்றோ? ஆனால் எனக்கும் ஜனங்களுக்கும் உள்ள வித்தியாசம் என்னவென்றால், நான் பற்றற்றவன், ஜனங்களோ பற்றுடையோர்; அவர்கள் தங்கள் நலத்தைக் கருதியே தொழில் புரிகின்றனர், நானோ உலக நன்மைக்காகத் தொழில் புரிகின்றேன். நிற்க, உன்னைப் போன்ற அறிவாளிகளே தங்கள் தொழிலைத் துறந்துவிட்டால், இதர ஜனங்களும் அதைப் பின்பற்றி நடக்க முற்படுவர், கர்ம பிரஷ்டர்கள் ஆவர். நீ பற்றற்று உன் கடமையைச் செய்துவா. அதைக் கண்டு ஜனங்களும் தம் தம் கடமையைச் செய்யவும், படிப்படியாக அனுஸக்தர்களாகவும் பழகட்டும். ஒவ்வொருவனும் தனக்கு இயற்கையிலேயே ஏற்பட்ட குணத்தை யொட்டி, ஏதேனுமொரு கடமையைச் செய்துகொண்டே யிருப்பான்.

மூர்க்கன்தான், 'இதை நான் செய்தேன், அதை நான் செய்தேன்' என்று வீண் பெருமை கொள்வான். அறிவாளி அவ்வாறு கருதான். மூச்சு விடுதல் சகல ஜீவராசிகளுக்கும் இயல்பானது, சுபாவமானது. கண்களின் மீது ஏதேனும் விழுமானுல், மனிதன் தன்னை அறியாமலே – சுபாவமாகவே – இமையைக் கொட்டுகிருன். அப்பொழுதெல்லாம் அவன், "நானே சுவாசம் விட்டேன்; நானே இமையை அசைத்தேன்" என்று சொல்லிக் கொள்வதில்லை. இதே போல் ஒருவன் எத்தனை கர்மங்கள் செய்த போதிலும் – அவை அத்தனையும் சுபாவமாகச் செய்யப்பட்டவைகளாகவே ஏன் கருதக்கூடாது? அதற்கு மாருக 'நான், நான்' என்ற அகங்காரம் தோற்றுவானேன்?

* * *

"மமதையற்றுச் சகஜமாகத் தொழில் புரிவதற்கேற்ற ராஜமார்க்கம் யாதெனில், சகல கர்மங்களையும் என் பொருட்டு மமதையற்றுச் செய்வதேயாம். இவ்வாறு என் பொருட்டுக் கர்மம் செய்துவந்தால், நாளடைவில் அகங்காரமும் சுயநலமும் அழிந்துவரும். அப்பொழுது அவன் கர்மங்கள் அனைத்தும் சுபாவமானவைகளாகவும், தோஷமற்றவைகளாகவும் மாறிவிடும். அவன் பலவிதமான குழப்பங்களிலிருந்து விடுபடுகிருன். அவனை எத்தொழிலும் கட்டுப்படுத்தாது. மேலும் சுபாவத்தையொட்டித் தொழில் புரியும் பழக்கமுடையவனை அத்தொழிலைச் செய்யாதிருக்கத் தூண்டுவதும் முடியாத காரியமாகும்.

### ஸ்வதர்மம்

"உண்மையைக் கூறுமிடத்து, இந்திரியங்களுக்கும் அது அதற்குரிய விஷய பதார்த்தங்களின் மீது விருப்பு, வெறுப்புத் தோன்றுகின்றன. செவிக்கு ஒரு விஷயத்தைக் கேட்கப் பிரியம் ஏற்படுகிறது; வேறொரு விஷயம் பிடிக்கிறதில்லை. மூக்கு ரோஜா மலரை நுகரப் பிரியப்படுகிறது; மலஜலங்களின் துர்க்கந்தம் வெறுப்பையளிக்கிறது. இவ்விதமே சகல இந்திரியங்களும் விருப்பு வெறுப்புக் கொள்ளுகின்றன. ஆகவே மனிதன் இந்த விருப்பு, வெறுப்புள்ள கொள்ளைக் கூட்டமான இந்திரியங்களுக்கு வசப்படலாகாது. இவற்றைக் களைந்து விலக்கி விடவேண்டும். தவிரவும், தொழில் சம்பந்தப்பட்ட வரையில், 'இன்று இது, நாளை அது' என்று வீணுக அலையா

திருக்க வேண்டும். ஆனால் ஒவ்வொருவனும் தன் பாகமென்று ஏதேனுமொரு பொதுநலத் தொண்டை மேற்கொண்டு, அதை ஈச்வரார்ப்பணமாக்கித் தொழில் புரிந்து கொண்டே யிருத்தல் வேண்டும். இந்த மனோபாவத்துடன் தொழில் புரிவோமானால், 'நாம் செய்யும் தொழிலனைத்தையும் ஈச்வரனே செய்விக்கிறான்' என்ற மனத்தெளிவு ஏற்படும். அப்பொழுது ஞானம் ஏற்படும். அகம்பாவம் அழிவுறும். இவ்வாறு ஒழுகுவதற்கே 'ஸ்வதர்மம்' என்று பெயர். நீ உன் ஸ்வதர்மத்தில் நிலைகொள். அதுவே உனக்கு உகந்தது. பரதர்மம் வெளித்தோற்றத்திற்கு வெகு நன்றாகக் காணப்படலாம். ஆனால் அது பயங்கரமானது. ஸ்வதர்மத்தைச் செய்துகொண்டிருக்கையில் மரணம் ஏற்பட்டால் அது மோக்ஷத்தையே தரும். விருப்பு வெறுப்பற்றுக் கர்மம் செய்வதே யக்ஞமாகும்.''

இவ்விதம் பகவான் உரைக்கக் கேட்ட அர்ஜுனன், "மனிதன் யாருடைய தூண்டுதலின் பேரில் பாப கர்மத்தில் ஈடுபடுகிறான்? யாரோ ஒருவன் பலாத்காரமாக அவனைப் பாப கர்மத்தில் ஈடுபடும்படி செய்ய இழுத்துக் கொண்டு போவதாகத் தோன்றுகிறதே! இதன் உண்மை என்ன?'' என்று வினவுகிறான்.

பகவான் பதில் கூறுகிறார்: ''மனிதனைப் பாபகர்மத்தில் இழுத்து விடுவது இச்சையும் கோபமும் என்று உணர்வாய். இவை இரண்டும் கூடப்பிறந்த சகோதரர்கள். காமம் கைகூடாத இடத்துக் குரோதம் வந்து தோன்றி விடுகிறது. காமமும் குரோதமும் நிறைந்ததை ரஜோகுணம் என்றழைக்கிறோம். இந்த ரஜோ குணங்கள் மனித வர்க்கத்திற்குப் பெரிய சத்துருக்கள். இவற்றுடன் மனித வர்க்கம் தினந்தோறும் போராடிக் கொண்டே யிருக்கிறது. கண்ணாடியின் பேரில் மாசு படிந்திருக்கும்வரை, அது மங்கலாகவே காணப்படும். புகை சூழ்ந்திருக்கும் வரை, தீ நன்றாகக் கொழுந்து விட்டெரியாது. கர்ப்பப் பை கர்ப்பத்தால் நிறைந்திருக்கும் வரையில், திணறிக் கொண்டே தானிருக்கும். இத்தன்மை போல் காமமும் குரோதமும் நிறைந்திருக்கும் வரை ஞானியின் அறிவு ஒளி பெறுவதில்லை. விருப்பமானது அக்கினியைப் போல் மஹா பயங்கரமானது. இது இந்திரியங்கள், மனம், புத்தி முதலிய யாவற்றையும் தன்வசப்படுத்திக் கொண்டு மனிதனை வாட்டுகிறது. ஆகவே முதலில் நீ இந்திரியங்களை உன் வசப்படுத்திக் கொள். பின் மனம் தானே வலிய வசப்படும். கடைசியில் புத்தியும் உன்

வசமாவது உறுதி. ஏனெனில் இந்திரியங்கள், மனம், புத்தி இவை, ஒன்றைவிட மற்ருென்று அதிக வலிமை யுடையனவாக இருப்பினும், இவை எல்லாவற்றைம காட்டிலும் ஆத்மா அதிக வலிமை யுடையது. மனிதன் தன் ஆத்ம சக்தியை அறிந்து கொள்வதில்லே. இக் காரணம் பற்றியே இந்திரியங்கள், மனம், புத்தி, இவை தன்வசப் படுகிறதில்லே யென்று அவன் கருதுகிருன். ஆத்ம சக்தியின் பிரகாசம் ஏற்பட்ட மாத்திரத்தில் எல்லாம் சுலபமாகி விடுகிறது. மேலும் இந்திரியங்கள், மனம், புத்தி முதலியவற்றைத் தன் வசப்படுத்திக்கொண் டுள்ளவனேக் காமம், குரோதம் முதலினயவும், அவற் றின் கணக்கற்ற சேனேக் கூட்டங்களும் ஒன்றும் செய்ய முடியாது.''

இந்த அத்தியாயத்தை நான் கீதையை அறிவதற்கான திறவுகோல் என்று மதிக்கிறேன். இதன் ஸாராம்சத்தை ஒரே வாக்கியத்தில் கூறவேண்டுமாயின், வாழ்க்கை பரோபகாரமான ஸேவை செய்வதற்காகவே அளிக்கப்பட் டிருக்கிறது, சுகமடைவதற் கல்ல—என்று ஏற்படுகிறது. ஆகவே நாம் வாழ்க்கையை யக்ஞமயமாக்கிக் கொள்ள வேண்டும். இந்த விஷயத்தை அறிந்து கொள்வதால் மட்டும் நம் வாழ்க்கை ஸேவா மயமாகி விடாது. ஆனல் அறிந்த வற்றை நடை முறையில் நடத்திக் காட்ட முற் படவேண்டும். அப்பொழுதுதான் நாம் படிப்படியாகச் சுத்தமடைவோம.

இனி, நல்ல ஸேவை என்பதெது என்று ஆராய்வோம், இதை அறிவதற்கு இந்திரியங்களே 'எரித்து' விடுதல் அவசியம். அவ்வாறு செய்துவிட்டால் நாம் நாளடைவில் ஸத்யரூபியான பரமாத்மாவை நெருங்குகிருேம். எப் பொழுதும் நமக்கு ஸத்தியத்தின் தரிசனம் ஸ்பஷ்டமாகத் தெரியும். ஸேவா கார்யங்களும் சுயநலங்கருதிச் செய்யப் படின், அது யக்ஞமாகாது. ஆனதுபற்றியே பற்றின் மையை அடையவேண்டியது அவசியமாகிறது. இவ்வளவு அறிவு நமக்கேற்பட்டபின் வேறுவித வாக்கு வாதங் களில் நாம் தலேயிடத் தேவையில்லே. அர்ஜுனன் தன் பந்து ஜனங்களேயே கொல்லத் தூண்டப் பட்டான, அவ்வாறு தூண்டப்பட்டிருப்பின் அது தர்மமாகுமா? —என்பனவை போன்ற கேள்விகளே எழா. பற்றின்மை நமக்கேற்பட்டவுடன் எவனேயாவது கொல்லுவதற் கென்று நம் கையில் ஆயுதம் இருப்பினும், அது சகஜ மாகவே நழுவிவிடும். ஆனல் வீண் ஆடம்பரங்களினல்

பற்றின்மை ஏற்பட்டு விடாது. நாம் முயற்சி செய்வோமானல், அது இன்றே கைகூடினாலும் கூடலாம், அல்லது ஆயிரம் வருஷங்கள் வரை பிரயத்தனம் செய்த பின்பும் அது கிடைக்கா திருக்கலாம். இதைப் பற்றிய கவலையையும் நாம் துறந்துவிட வேண்டியதே. முயற்சியே பலனளிக்கும். எப்படியும் நாம் இந்தப் பற்றின்மையை அடைந்தே தீரவேண்டும். இதில் ஆத்ம ஏமாற்றம் கூடாது. இவ்வளவு தூரம் இதில் கவனம் செலுத்தினாலே போதும். முடிவில் இது அனைவருக்கும் சாத்தியமாகும்.

## 4. சிரத்தையே மனச் சாந்திக்கு வழி

பகவான் அர்ஜுனனிடம் கூறுகிறார்:—'ஹே பார்த்த! நான் உனக்கு இதுவரை போதித்த 'நிஷ்காமகர்ம யோகம்' (பற்றற்ற தொண்டு) பூர்வகாலந் தொட்டே பரம்பரையாக வழக்கத்தில் இருந்துவரும் தர்மமாகும். இது புதிய விஷயமல்ல. நீ என் பிரியமுள்ள பக்தன். மேலும் இன்று நீ தர்ம சங்கடத்தில் மூழ்கியிருக்கிறாய். உன்னை இக் குழப்பத்திலிருந்து மீட்பதற்காகவே இதனை உனக்குக் கூறினேன். எவ்வெப்பொழுது தர்மம் குன்றி அதர்மம் மேலிடுகிறதோ, அவ்வப்பொழுது நான் இம்மண்ணில் அவதரிக்கிறேன். பக்தர்களை ரக்ஷிக்கிறேன், பாவிகளை ஸம்ஹரிக்கிறேன். யார் என் இந்த மாயையை அறிகிறார்களோ, அதர்மம் அழிந்தே தீருமென்று நம்புகிறார்களோ, அவர்கள் தங்கள் தர்மத்தைத் துறப்பதில்லை. முடிவில் அவர்கள் என்னையே அடைகிறார்கள். ஏனெனில் அவர்கள் என்னையே சதா தியானிப்பவர்களாகின்றனர்; என்னையே சரணமடைந்தவர்களாகின்றனர்; காமக் குரோதாதிகளிலிருந்து விடுபட்டவர்களாகின்றனர். தவம், ஞானம் இவற்றின்மூலம் சுத்தமடைந்தோராகின்றனர். மனிதன் எங்ஙனம் தொழில் புரிகின்றானோ, அங்ஙனமே பலனடைகிறான். எனது இந்த விதிகளுக்கு மாறாக நடக்க எவனாலும் முடியாது. குணத்திற்கும் செய்கைக்கும் தக்கபடி நான் நான்கு வர்ணங்களை ஏற்படுத்தி யுள்ளேன். எனினும் அவற்றின் கர்த்தா நானல்ல—என்று உணர்வாய். ஏனெனில் அக்காரியங்களின் பலன்களின் பேரில் எனக்குக் கிஞ்சித்தேனும் பற்றென்பதில்லை. அவற்றின் பாவ புண்ணியங்கள் என்னைச் சேரா. இதை ஈச்வர மாயை எனலாம். இவ்வுலகில் நடைபெறும் தொழிலனைத்தும் ஈச்வரனுடைய கட்டளைப்

படியே நடைபெறுகின்றன. எனினும் ஈச்வரன் அவற்றின் சார்படைவதில்லை. ஆகவே ஈச்வரனை அவற்றின் கர்த்தாவென்றும் கூறலாம், கர்த்தா அல்ல வென்றும் கூறலாம். இவ்விதம் தூர விலகி நின்று, ஏமாற்றமின்றி, பலன்களை இச்சிக்காது ஈச்வரன் எவ்வாறு நடந்து கொள்ளுகிருனே, அவ்வாறே மானிடர்களும் நடத்து கொள்வார்களாளுல், அவர்கள் தடையின்றி மோக்ஷத்தையே யடைவார்கள். அத்தகையோர் தொழிலிலும் தொழிலின்மையைக் காண்கிருர்கள். அத்தகையோர் செய்யத் தகுதி யற்றவை இவை யென்றும் விரைவில் கண்டு கொள்கிருர்கள். ஆசை யுள்ளவனும், ஆசை யுருதிருக்க முடியாதவனும், தகுதியற்ற கர்மங்களைச் செய்யாமல் தம்மைத் தடுத்துக் கொள்வதே ஒரு விதத்தில் கர்ம மாகும். உதாரணமாகத் திருட்டும் விபசாரமும் செய்யாதிருப்பதே கடமையாகும். இவற்றைப் பற்றுதலின்றிச் செய்ய முடியாது. எவன் காமமும் சங்கற்பமுமின்றித் தன் கடமையை மட்டும் செய்து கொண்டிருக்கிருனே, அவன் உண்மையான ஞானமென்ற அக்கினியில் தன் கர்மத்தை எரித்தவாளுகிருன். அதாவது, அவன் பலனைக் கருதுவதில்லை. இவ்விதம் எவன் தன் கர்ம பலனைத் துறந்துவிடுகிருனே, அவன் சதா சந்துஷ்டளுக இருப்பான், சதா சுவதந்தர புருஷளுகவே இருப்பான். பிணியற்ற தேகத்தில் சரீரக் கிரியைகள் எவ்வாறு சகஜமாகவும், சுபாவமாகவும் நடைபெற்று வருகின்றனவோ, அவ்வாறே பற்றற்ற யோகியின் கர்மங்களும் சுபாவமாகவே நடைபெறும். அவன் தாளுகவே அவற்றைச் செய்தாலும், அவற்றின்பால் கர்வ மடைவதில்லை. செய்யவேண்டிய நிமித்தத்திற்காகவே அவன் அவற்றைச் செய்து வருகிருன். தன் கர்மங்கள் வெற்றி யடைந்தாலும் சரி, தோல்வி யுற்றுலும் சரி, அவற்றிற்காக அவன் மகிழ்வதுமில்லை, வருந்துவதுமில்லை. அவன் கர்மங்கள் அனைத்தும் யக்ஞ ரூபமாக—ஸேவார்த்தமாகவே-செய்யப்படுகின்றன. ஆதலின் அவன் சகல கர்மங்களிலும் ஈச்வரனையே காண்கிருன்; முடிவில் ஈச்வரனையே அடைகிருன்.

“யக்ஞ மெனப்படுவது பலவிதமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இவை அனைத்திற்கும் அடிப்படையானது தூய்மையும் ஸேவையுமாகும். இந்திரியக் கட்டுப்பாடு ஒரு வகையான யக்ஞ மாகும். யாருக்கேனும் தானமளித்தல் மற்ருெரு விதமான யக்ஞமாகும். பிராணுயாமம் முதலிய

அப்பியாசங்களும் சரீர சுத்திக்காகச் செய்யப்படும் யக்ஞங்களே. இவற்றைப் பழக்கமுள்ள ஒரு குருவிடம் கற்றுக் கொள்ள வேண்டும். நன்ருக அறிந்து கொள்ளாமல் ஞானத்தின் பெயரால் பலவிதக் கர்மங்களைத் தொடங்கி விடுவோமாஞல், ஞானத்திற்குப் பதிலாகத் அஞ்ஞான மேற்பட்டு, நன்மைக்குப் பதிலாகத் தீமைகள் ஏற்பட்டு விடும். ஆதலால் ஒவ்வொரு காரியத்தையும் தீர்க்க ஆராய்ச்சி செய்து ஞானபூர்வமாகச் செய்யவேண்டும்.

"இந்த ஞானம், எழுத்து - ஞானமன்று. இந்த ஞானத்தில் சந்தேகத்திற்கு இடமேயில்லை. சிரத்தையிலிருந்து இது ஆரம்பமாகிறது; அனுபவத்தினல் முதிர்கிறது. இந்த ஞானத்தின் மூலம் மனிதன் சகல ஜீவராசிகளையும் தன்னுள் காண்கிருன்; தன்னை ஈச்வரனிடத்தில் காண்கிருன். அதாவது, அவனுக்கு எல்லாம் பிரத்தியக்ஷ ஈச்வர மயமாகவே தோன்றும். இந்த ஞானம், பாவிகளில் பாவிகளைக் கூட ஈடேற்றுவிக்கிறது. இந்த ஞானம் மனிதனைக் கர்ம பந்தத்திலிருந்து விடுவிக்கிறது. அதாவது, கர்மத்தின் பலன் அவனைத் தீண்டுவதில்லை. இதைப்போல் புனிதமானது இவ்வுலகத்தில் வேறென்றுமில்லை. ஆகவே பாண்டவ! நீ சிரத்தையுடன் ஈச்வரனை நம்பி, உன் இந்திரியங்களைக் கட்டுப்படுத்திக் கொண்டு, இந்த ஞானத்தை அடையப் பிரயத்தனப்படு. அதனல் உனக்குப் பரம சாந்தி ஏற்படும்."

இந்த அத்தியாயமும், மூன்ருவது, ஐந்தாவது அத்தியாயங்களும் சேர்ந்தாற்போல் உருவேற்றித் தியானம் செய்யத் தக்கவை. இதனல் அனுஸக்தி யோகம் (பற்றற்ற தொண்டு) என்பது யாதென ஸ்பஷ்டமாகத் தெரியும். இந்த அனுஸக்தி - நிஷ்காம கர்மம் — எவ்வாறு கைகூடும் என்பதை இம்மூன்று அத்தியாயங்களும் போதிக்கின்றன. இவற்றை ஐயந்திரிபறப் படித்துத் தெரிந்துகொண்டால், மற்ற அத்தியாயங்களை அறிந்து கொள்வதில் கஷ்டமே இருக்காது. இனி வரும் அத்தியாயங்கள், அனுஸக்தியை அடையும் சாதனங்களை அநேக விதமாக விளக்குகின்றன. அந்த ஸாதனங்களையும் அறிந்துகொள்ள வேண்டுமென்ற நோக்கத்துடன் நாம் தினமும் கீதையைப் படித்தல் வேண்டும்.

இனி, கீதையைப் பாடம் செய்வதால் என்ன பிரயோஜனம் ஏற்படுகிறதென்று கூர்ந்து கவனிப்போம். கோபம் பொங்கி வரும்பொழுது அதனல் ஏற்படும் பிரதிகூலங்களைப் பற்றிக் கூறும் சுலோகங்களை நினைவுபடுத்திக்

கொண்டு, அதை யடக்கலாம். யார் பேரிலாவது துவேஷம் ஏற்படும் பொழுதும், நமக்குத் தைரியம் குறையும் பொழுதும், 'என்ன செய்யவேண்டும்?' என்ன செய்யக் கூடாது? என்ற தர்ம சங்கடம் நேரும்பொழுதும், (சிரத்தையுடன் கீதையை மனப் பாடம் செய்திருப்போமானால்) கீதையின் மூலம் நமக்கு மார்க்கம் தெளிவுபடு மன்றோ? அத்தகைய பழக்கம் ஏற்படுவதற்காகவே கீதையைத் தினந்தோறும் பாராயணம் செய்வோமாக.

## 5. உண்மையறியும் வழி

அர்ஜுனன் கேட்கிறான் :—"பகவானே! ஞானத்தைப்பற்றி அதிகம் கூறினை. அதைக் கேட்ட எனக்குக் கர்மம் செய்யவே தேவையில்லை யென்றும், ஸந்யாசமே மேலான மார்க்கமென்றும் தோன்றுகிறது. ஆனால் கூடவே தொழிலின் பெருமையைப் பற்றியும் கூறினை. அதைக் கேட்டபின் யோகமே (ஸேவா கர்மம்) ஞானத்திலும் சிறந்ததென்று தோன்றுகிறது. இவ்விரண்டில் எது அதிகம் சிறந்தது?—என்று நிச்சயப்படுத்திக் கூறுவாயானால், எனக்குச் சற்று நிம்மதி யேற்படும்" என்றான்.

அர்ஜுனன் இவ்வாறு உரைத்தல் கேட்டு, பகவான் சொல்லுகிறார்:—"ஸந்யாச மென்பதற்கு ஞானமென்றும், கர்மயோக மென்பதற்கு நிஷ்காம கர்மம் என்றும் பொருள். இவ்விரண்டும் உத்தமமானவைகளே. ஆனால் யோகம் அல்லது பற்றற்ற கர்மமே ஸர்வ சிரேஷ்டமானதென்று கூறுவேன். எவனொருவன் எவரிடமும் துவேஷம் பாராட்டாமலும், விருப்பு வெறுப்புக் கொள்ளாமலும், சுகம் துக்கம், சீதம் உஷ்ணம் முதலிய இரட்டைகளிலிருந்து விலகி நிற்கிறானோ, அவனே ஸந்யாசி. கர்மங்களை அவன் செய்தாலும் சரி, செய்யாவிட்டாலும் சரி, அவன் விரைவில் பந்தங்களிலிருந்து விடுபடுகிறான். அஞ்ஞானிகளே ஞானத்தையும் கர்மத்தையும் வெவ்வேறெனக் கருதுகிறார்கள். ஞானி அவ்வாறு கருதான். அவனுக்கு அவை இரண்டும் ஒன்றே. ஏனெனில் அவை இரண்டின் பலனும் ஒரே விதமானது. ஆகையினால் அவ்விரண்டையும் ஒரே ரூபமானதென்று கருதுவோனே உண்மையறிந்தோனாகிறான். ஏனெனில் சுத்த ஞான முடையோன் தனது சங்கற்பத்தாலேயே காரியசித்தி யடைகிறான்.

"அதாவது, அவனுக்குத் தன் கைகளினாலேயே கர்மம் செய்யவேண்டிய நிமித்தமில்லை. ஓர் உதாரணம்:

ஜனகபுரி தீப்பற்றி எரிந்தபொழுது, அவ்வக்கினியைத் தணிப்பதே எல்லாருடைய கடமையாகவும் இருந்தது. ஜனகருடைய சங்கற்பத்தாலேயே நெருப்பை அணைக்க உதவி கிடைத்தது. ஏனெனில் இந்தக் காரியத்தை முடிப்பதற்குப் பணியாளரே அவருக்கு உற்ற சாதனமாக இருந்தனர். அதற்கு மாருக, அவர் தாமே தம் கையில் நீர்க்குடத்தை எடுத்துக்கொண்டு புறப்பட்டிருப்பாரேயாளுல், மிக்க சேதம் ஏற்பட்டிருக்கும். எவ்வாறென்றுல், அனைவரும் அவர் (ஜனகர்) முகத்தையே நோக்கிக்கொண்டிருப்பார்கள், தங்கள் கடமையை மறந்திருப்பார்கள்; தவிர அவர்களில் சிலர் தமது வேலையை அரைகுறையாக விட்டுவிட்டு, ஜனகரைத் தீ சூழாமல் செய்யவும், அவரைப் பாதுகாக்கவும் முற்படுவார்கள். ஆனுல் அனைவரும் ஜனகரைப் போல் ஆக முடியாது. ஜனகருடைய ஸ்திதி அதிக துர்லபமானது. கோடியில் ஒருவருக்கு, அநேக ஜன்மங்களாகச் சேவைசெய்த பின், அந்த ஸ்திதி பிராப்தியாகும். அந்த ஸ்திதியை அடைந்தபின் ஏதேனும் விசேஷ சாந்தியாவது சித்திக்கிறதா வென்றுல் அதுவுமில்லை. கொஞ்சங் கொஞ்சமாக நிஷ்காம கர்மம் செய்து வருவதனுல், மனிதனுடைய சங்கற்பமும் விருத்தி யாகிக்கொண்டே வரும். அதற்கேற்றுற்போல் கை கால்களினுல் செய்யவேண்டிய கர்மங்கள் குறைந்துகொண்டே வரும். ஆனுல் உண்மையைக் கூறுமிடத்து, அவனுக்குத் தன் நிலைமை மாறுபடுவதென்ற தகவலே தெரியாது. அதற்காக (சங்கற்ப சக்தி) அவன் பிரயத்தனமும் செய்வதில்லை. அவன் சதா ஸேவா கார்யங்களிலேயே மெய்ம்மறந்திருப்பான். ஸேவை செய்வதில் அவனுக்குக் களைப்புத் தோன்றுவதில்லை. முடிவில் அவன் கேவலம் தன் சங்கற்பத்திளுலேயே தொண்டு செய்யும் நிலைமை அடைந்து விடுகிறுன். விரைவில் சுழன்று கொண்டிருக்கும் பம்பரம் சலனமற்று நிற்பதாகத் தோன்றுவதேபோல, முதிர்ந்த பக்குவமடைந்த ஸேவா யோகி சதா தொழில் செய்யாதவனைப் போலவே காணப்படுவான். ஆகவே அவனை ஒரு தொழிலும் செய்யாதவன் என்று கூறுவது தவறு. சாதாரணமாக அத்தகைய நிலைமையைக் கற்பனை செய்து கொள்ளக் கூடுமேயன்றி அனுபவத்துடன் வர்ணனை செய்ய முடியாது. இக்காரணம் பற்றியே நான் கர்ம யோகத்தை விசேஷப்படுத்திக் கூறினேன். கோடிக் கணக்கானவர்கள் நிஷ்காம கர்மத்திளுலேயே ஸந்யாசத்தின் பலனை எய்துகிருர்கள். அவர்கள் ஸன்யாசிகளாக மாறியிருப்பின், இரண்டும் கெட்டவர்களாவது திண்ணம். ஸந்யாசிகளாகப் பிரயத்தனப் படு

வோரில் பெரும்பான்மையோர்கள் பொய்யாசார புருஷர்க ளாகத் தம் கடமையிலிருந்து வழுவி விடுகின்றனர்; சர்வ நாசமடைகின்றனர். ஆனல் எவனெருவன் பற்றற்ற தொண்டு செய்து பரிசுத்தமடைகிருனே, தன் புலன்களை வசப்படுத்திக் கொள்ளுகிருனே, தன் மனத்தை வென்று விடுகிருனே, சகல ஜீவர்களிடத்தும் ஐக்கியப்படுகிருனே அவனே அனைவரையும் தனக்குச் சமமாக கருதுகிருன். அவன் தொழில் புரிந்துகொண்டே அவற்றினின்றும் பிரிந்து நிற்கிருன். அதாவது, பந்தங்களிலிருந்து விடுபடு கிருன். அத்தகையோன் பேசுதல், நடத்தல் போன்ற கிரியைகளைச் செய்துகொண்டே யிருப்பினும், அவனது கிரியைகளும் இந்திரியங்களும் தத்தம் தர்மத்தை அனு சரித்தே நடந்து கொள்ளும். அவன் தானுகவே ஒன்றும் செய்வதில்லை. வியாதியற்ற ஒருவனுடைய சரீரக் கிரியைகள் சுவபாவமாகவே நடைபெறுகின்றன. அவனது அவயவங்களும் தாமே தமது கடமைகளைச் செய்து விடுகின்றன. மனிதன் அவற்றின்பால் கவனம் செலுத்தத் தேவையில்லை. இவ்விதமே எவனுடைய ஆத்மா ஆரோக்கியமாக இருக்கிறதோ, அது சரீரத்தில் சம்பந்தப் பட்டிருப்பினும் சம்பந்தப்படாததைப்போலவே காணப் படும். அது யாதொன்றையும் செய்வதில்லையென்றே தோன்றும். ஆகையினுல் மனிதன் தன் சகல கர்மங் களையும் பிரம்மார்ப்பணம் செய்துவிடவேண்டும். பிரம் மாவின் பொருட்டே சகல காரியங்களையும் செய்து கொண்டு போகவேண்டும். இவ்விதம் செய்வதனுல், அவன் கர்மத்தைச் செய்துகொண்டே யிருப்பினும், அதன் பாப புண்ணியம் அவனைத் தொடரா. நீரில் வாழும் தாமரையைப்போல அவன் வாழ்க்கை பட்டும் படாமலும் இருந்துவரும்.

* * * *

''அதாவது அனுஸக்தியை அறிந்தோனுகிய யோகி, மனே புத்தி காயத்தினுல் காரியத்தைச் செய்துகொண்டே யிருப்பினும், அவன் அவற்றில் பற்றற்று, அகம்பாவ மற்று நடந்துகொள்ளுகிருன்; சுத்த மடைகிருன், சாந்தி யடைகிருன். யோகமற்றோன் பற்றுதலற்று இருக்கக் கூடாதவனுகையால், கைதியைப் போல் தன் இச்சை களினுல் கட்டுப்படுகிருன். இந்த நவத் துவாரங்களுடைய தேக வடிவான நரகத்தில், யோகியானவன் எல்லாக் கர்மங் களையும் மனத்தால் துறந்து, எதனையும் செய்வதுமின்றி, செய்விப்பதுமின்றிச் சுகமாக இருப்பான். நற்காரியம் செய்வோன், பரிசுத்தமடைந்தோன், பாவமும் செய்வ

தில்லை, புண்ணியமும் செய்வதில்லை. கர்மத்திலிருந்து பற்றைக் களைந்தோன், அகம்பாவத்தை அழித்தோன், பலன்களைத் துறந்தோன், நிலைபெற்று நிற்கிறான். அவன் கர்மங்களை அவை செய்யப்பட வேண்டியதற்காகவே செய்கிறான். அதாவது, தன்னை அக்காரியங்களைச் செய்ய ஒரு கருவியாக மட்டும் கருதுகிறான். அத்தகையோனைப் பாப புண்ணியங்கள் எங்ஙனம் தீண்டும்? இதற்கு மாறாக எவன் அஞ்ஞானத்தில் மூழ்கிக் கிடக்கிறானோ, அவன் தினமும் 'நான் இவ்வளவு புண்ணியம் செய்தேன்; இவ்வளவு பாவம் புரிந்தேன்' என்று எண்ணிக்கொண்டேயிருப்பான். அவ்வாறு எண்ணிக் கொண்டே அவன் தினந்தோறும் படுகுழியில் விழுந்துகொண்டே போகிறான். முடிவில் அவன் கணக்கில் பாவங்களே அதிகமாக நிற்கும். ஆனால் எவன் ஞானத்தின் மூலம் தினந்தோறும் தன் அஞ்ஞானத்தை அழித்து வருகிறானோ, அவனுடைய காரியங்கள் தினந்தோறும் நிர்மலமடைந்து கொண்டே வரும். உலகம் அவன் காரியங்களில் பரிபூரணத்வத்தையும், புனிதத் தன்மையையுமே காணும். அத்தகைய மனிதனுடைய சகல காரியங்களும் சுபாவமாகவே நடைபெறும். அவன் ஸமதர்சி (ஸமத்வ பாவத்துடன் காண்போன்) ஆகிறான். அவனுக்கு, வித்தையும் விநயமும் கற்றுப் பிரம்மாவை அறிவோராகிய பிராமணர்களும், பசுவும், யானையும். நாயும், விவேகமற்ற விலங்குகளைக் காட்டிலும் கீழ்ப்பட்ட விதமாக நடந்து கொள்ளும் மனிதனும் சமமே, இவை யனைத்திற்கும் அவன் ஒரே விதமான ஸேவை செய்வான். ஒன்றைப் பெரிதென மதித்து அதற்கு மரியாதையும் மற்றொன்றைத் துச்சமாகக் கருதி அதற்கு அவமானத்தையும் செய்யான். பற்றற்றோன், தான் எல்லாருக்கும் கடமைப்பட்டோனாக எண்ணுகிறான்; அனைவரின் கடன்களையும் தீர்த்துப் பூர்ண நியாயம் காட்டுவான். அவனே உலகை வென்றவன்; பிரம்ம மயமானவன். அவனுக்கு யாரேனுமொரு நன்மை செய்தால், அதன் பொருட்டு அவன் மகிழ்ச்சியுறான். அவனை யாரேனும் திட்டினாலும், அதன் பொருட்டு வருத்தமுறான். பற்றுடையோன் வெளியிலிருந்து தனக்காகச் சுகந் தேடுவான். பற்றற்றோனுக்கு அவன் உள்ளத்திலேயே நிரந்தரமான சாந்தி நிரம்பி யிருக்கிறபடியால், அவன் வெளிச் சுகத்தைத் தேடான். அவன் வெளி வாழ்க்கையை முற்றுந் துறந்தவன். இந்திரியங்களால் ஏற்படும் சுகம் பின்னால் துக்கத்திற்குக் காரணமாகிறது. காமக் குரோதாதிகளால்

ஏற்படும் உபத்திரவங்களைச் சகித்துக் கொள்ளுவதே மனிதனுக்கு உசிதமானது. பற்றற்ற யோகி சமஸ்த பிராணிகளின் நன்மையிலேயே சதா ஈடுபட்டிருப்பான். அவன் சந்தேகங்களால் பீடிக்கப் படுவதில்லை. அவனுக்கு வெளி உலக சம்பந்தமே கிடையாது. அவன் பிராணுயாமம் முதலிய பயிற்சிகளினுல் தன்னைக் கட்டுப் படுத்தி, ஆசை, பயம், குரோதம் முதலியவற்றினின்றும் தூர விலகி நிற்கிருன். அவன் என்னையே எல்லோருக்கும் மகேச்வரன் என்றும், வேள்வியும் தவமும் கொள்வோன் என்றும் அறிந்திருக்கிருன். ஆகவே பரம சாந்தியடைகிருன்.''

## 6. முயற்சியுடையோர் இகழ்ச்சி அடையார்

ஸ்ரீ பகவான் கூறுகிருர் :—''கர்மங்களின் பலனைத் துறந்து எவன் தன் கடமையாகிய கர்மத்தைச் செய்கிருனே, அவனை ஸங்யாசி யென்றும், யோகி என்றும் அழைக்கலாம். எவன் கிரியைகளையே துறந்து விடுகிருனே அவன் சோம்பேறி. மனம் போன போக்கெல்லாம் காரியம் செய்யாமலிருப்பதே ஸமத்வ சாதனைகளை விரும்புவோனுக்குச் சிறந்தது. கர்மம் செய்யாமல் அவன் தொழில்கள் நடைபெறு. ஸமத்வத்தை யடைந்தோன் சாந்தி யடைகிருன். அதாவது, அவன் நினைத்த மாத்திரத்திலேயே செயல் - திறம் அவனுக்குக் கூடி விடுகிறது. எப்பொழுது மனிதன் இந்திரிய விஷயங்களிலும் தன் கர்மங்களிலும் பற்றற்றவனுகி விடுகிருனே, தன் மனம் நாடும் விஷயங்கள் அனைத்தையும் துறந்து விடுகிருனே, அப்பொழுது அவனுக்கு யோகம் ஸித்தித்து விட்டது என்று கூறலாம். அப்பொழுது அவன் 'யோகாரூடன்' என்றழைக்கப் படுகிருன்.

''ஆத்மாவின் உத்தாரணம் (ஈடேற்றம்) - ஆத்மாவிலேயே ஏற்படுகிறது. ஆனது பற்றியே அது தனக்குத் தானே சத்துரு வென்றும் கூறலாம். எவன் தன் மனத்தை வென்றுள்ளானே, அவனுடைய ஆத்மா சீதோஷ்ணம் சுக துக்கம், மான அவமானம் இவைகளில் ஒரே விதமாக இருக்கும். ஞான முடையோன், அனுபவ மடைந்தோன், உறுதி யுள்ளோன், புலன்களைத் தன் வசப்படுத்திக் கொண்டோன், மண் கல் தங்கம் இவைகளை ஒரே விதமாக நோக்குவோன் எவனே, அவனே யோகி. அத்தகைய யோகி சத்துருவையும் மித்திரனையும், சாதுக்

களையும் பாவிகளையும் சமானமாகவே பாவிப்பான். இந்த ஸ்திதியை அடைவதற்குச் சித்தத்தைக் கட்டுப் படுத்த வேண்டும். விஷய வாசனைகளைத் துறந்து விட வேண்டும். ஏகாந்தத்தில் அமர்ந்து பிரமாத்மாவைத் தியானிக்க வேண்டும். கேவலம் ஆஸனுதிகளைப் பயிலுதல் மட்டும் போதாது. ஸமத்வ பாவத்தை யடைய ஆசைப் படுவோர் பிரம்மசரியம் முதலிய மகா விரதங்களைத் தவருமல் அனுஷ்டிக்க வேண்டும். இவ்விதம் ஆஸனத் தமர்ந்து, யம நியமங்களைக் கடைப்பிடித்தோனுகித் தன் மனத்தைப் பரமாத்மாவிடம் ஸ்திரமாகப் பொருத்து வோனுக்குப் பரம சாந்தி யேற்படுகிறது. குண்டோ தரனைப் போல் மிதமிஞ்சி உண்பவனுக்கும், உபவாஸ மிருப்பவனுக்கும் இந்த யோக நிலை கிட்டாது. அவ் விதமே அதிகம் தூங்குபவனுக்கும், அதிகம் விழித்திருப் பவனுக்கும் இது கைகூடாது. ஸமத்வ பாவத்தை யடைய விரும்புவோன் தன் உணவிலும் தூக்கத்திலும் விழிப்பிலும் — எல்லாவற்றிலும் — நியமமாக நடந்து கொள்ள வேண்டும். ஒரு நாள் வயிறு வெடிக்க உண்டு மறுநாள் உபவாச மிருப்பதும், ஒரு நாள் நன்ருகத் தூங்கிவிட்டு மறுநாள் முழுவதும் விழித்திருப்பதும், ஒருநாள் நன்ருக உழைத்து வேலை செய்துவிட்டு மறுநாளைச் சோம்பலாகக் கழிப்பதும், யோகத்தின் லக்ஷணங்களல்ல. யோகிக்குச் சதா ஸ்திர சித்தம் இருத்தல் வேண்டும். ஆசைகளை வென்ருல், அவற்றை அவன் சுபாவமாகவே துறந்தவனுக இருத்தல் வேண்டும். வாயு குறைவாக உள்ள இடத்தில் வைக்கப் பட்ட தீபமானது எவ்வாறு சலனமற்று ஸ்திரமாக எரி கிறதோ, அதேபோல் உலகம் என்னும் இந்த மாயா விநோத அரங்கத்தில் நடைபெறும் விளையாட்டுகளும், மனத்தில் சக்கரவட்ட மிட்டுக் கொண்டிருக்கும் விசார அலைகளும் (எண்ணங்களும்) யோகியை இங்குமங்கும் அலைய விடுவதில்லை, சலன மடைய விடுவதில்லை. இந்த யோகம் மெதுவாக, ஆனுல் திடபூர்வமாக, பிரயத்தனம் செய்வதால் கைகூடும். மனம் சஞ்சல முள்ளது; ஆகையி னுல் அது கண்ட இடமெல்லாம் ஓடும். அதைக் கொஞ்சங் கொஞ்சமாக அடக்குவது உசிதமானது. மனம் நிலை பெற்றுவிடின் சாந்தி ஏற்படும். மனத்தை ஸ்திரப் படுத்து வதற்கு ஆத்ம சிந்தனை செய்தல் அவசியம். அத்தகைய மனிதன் சகல ஜீவன்களிலும் தன்னைக் காண்கிருன்; உயிர்களனைத்தையும் தன்னிடத்திலும், இப் பிரபஞ்ச முழுவதையும் என்னிடத்திலும் காண்கிருன். அவன்,

"நான், எனது" என்ற அகங்காரத்தைத் துறந்து விடுகிறான்; சதா என்னையே சார்ந்திருக்கிறான். அத்தகைய யோகியால் ஆகாத காரியம் ஒன்றுமில்லை."

அர்ஜுனனுக்கு இந்த யோகம் சிரமமானதாகக் காணப்பட்டது. அவன் கேட்கிறான்:—"ஹே மதுசூதனா! இந்த மனத்தை நிலைப்பெறச் செய்வது எங்ஙனம் பிராப்தியாகும்? மனமோ குரங்கிற்குச் சமானமானது. காற்றை அடக்குவது எவ்வளவு அசாத்தியமோ, அவ்வளவு அசாத்தியமானது மனத்தை அடக்குவதும். இந்த மனமானது எவ்விதம் எப்பொழுது வசப்படும்? இவற்றையும் சற்று விளக்குவீரா?" என்றான்.

பகவான் பதிலளிக்கிறார்:—"நண்பா! நீ கூறுவது முற்றிலும் உண்மையானதே. ஆனால் விருப்பு வெறுப்புக்களை ஜயித்து, தளராமல் பிரயத்தனம் செய்வதனால் எத்தகைய கஷ்டமான காரியங்களும் சுலபமாகி விடுகின்றன. மனத்தை வெல்லாதவரை யோகம் சித்திக்காது என்றுணர்வாய். இதில் சந்தேகமேயில்லை."

இதைக் கேட்ட அர்ஜுனன் மீண்டும் கேட்கிறான்:— "ஹே கிருஷ்ண! ஒருவனிடம் சிரத்தை யிருக்கிறது, ஆனால் அவனுடைய பிரயத்தனங்கள் மந்தமானவை என்று வைத்துக் கொள்வோம். அதன் காரணமாக அவன் பலனடைவதில்லை. அத்தகையோனுக்கு என்ன கதி யேற்படுகிறது? சிதறி யடிக்கப்பட்ட மேக ராசிகளைப்போல் அவனுக்கு நாசமேற்படுவதில்லையே?" பகவான் கூறுகிறார்:—"பார்த்தா! அவ்விதம் சிரத்தை யுடையோர் அழிவதில்லை. ஸன்மார்க்கத்தில் நடக்கும் எவனுக்கும் அவகதி ஏற்படாது. அத்தகைய மனிதர்கள் தங்கள் கர்மானுசாரம் சிறிது காலம் புண்ய லோகத்தில் வசித்திருந்த பின், மீண்டும் இம்மண்மீது புனிதமான குடும்பங்களிலே ஜனிக்கின்றனர். (ஆனால் இந்த உலகத்தில் அத்தகைய ஜன்மங்கள் கிடைப்பது துர்லபமானது.) ஜனனமடைந்தபின் அவர்களுக்குப் பூர்வ ஜன்மத்தில் செய்த நற்காரியங்களின் நினைவு உதிக்கிறது. அதன் பலனாக இம்முறை அவர்களது பிரயத்தனங்கள் அதி தீவிரமானவைகளாக இருக்கும். முடிவில் அவர்கள் ஈடேற்றமடைகிறார்கள். இவ்விதம் பிரயத்தனம் செய்துகொண்டே சிலர் விரைவிலும், சிலர் அநேக ஜன்மங்களுக்குப் பிறகும், தத்தம் சிரத்தை, பிரயத்தனம் இவற்றின் பலத்தை அனுசரித்து ஸமத்வமடைகிறார்கள். தவம், ஞானம், கர்ம

காண்டத்தின் கிரியைகள் — இவ்வனைத்திலும் ஸமத்வ நிலை மேலானது. ஏனெனில் தவம் முதலியவற்றின் தன்மையும் கடைசியாக ஸமத்வமாகவே முடிதல் வேண்டும். ஆகவே நீ ஸமத்வ நிலையை அடைந்து யோகியாவாய். இதிலும் தன்னலம் துறந்து என்னையே ஆராதிப்போனே சிரேஷ்டனென்றறிவாய்.''

இந்த அத்தியாயத்தில் ஆஸனம், பிராணாயாமம், முதலிய அனுஷ்டானங்கள் புகழப் பட்டுள்ளன. ஆனால் கூடவே பிரம்மச்சரியத்தின்—அதாவது பிரம்மப் பிராப்தியின் பொருட்டு இயம நியமங்களைக் கொள்ளவேண்டிய தன் அவசியத்தைப் பற்றியும் பகவான் கூறி யிருப்பதைக் குறிப்பிட வேண்டியதே. ஆஸனாதி கிரியைகளினால் ஸமத்வ பாவம் ஏற்படுவதில்லை. ஆனால் ஆஸனங்கள், பிராணாயாமம் முதலிய அப்பியாசங்கள் மனத்தை ஸ்திரப் படுத்துவதற்கு ஒரு சிறிது உதவி புரிகின்றன. அதுவும், அந்த உத்தேசத்துடன் அவை செய்யப் பட்டால்தான். அல்லது அவற்றை ஒரு விதமான தேகப்பயிற்சி யென்று கருதி, ஏனைய சரீரப் பயிற்சிகளுடன் சேர்க்கவேண்டியதே. தேகாப்பியாசம் என்ற இனத்தில் பிராணாயாமாதிகள் மிக்க உபயோக முள்ளவையே. மேலும் தேகாப்பியாசங்களில் ஸாத்விகமானது இது ஒன்றுதான் என்று நான் கருதுகிறேன். சரீரப் பயிற்சி யென்ற நோக்குடன் இவை அப்பியஸிக்கத் தக்கவையே யானாலும், பலர் இவற்றின் மூலம் ஸித்தி யடையவும், பிரகாசத்தைக் காணவும் விரும்புகின்றனர். அவ்விதம் செய்வதால் லாபத்திற்குப் பதிலாக ஹானியே ஏற்படும். இந்த அத்தியாயம், மூன்றாவது, நான்காவது, ஐந்தாவது அத்யாயங்களின் அநுபந்தமாகக் கருதப்படுவது நல்லது. முயற்சி யுடையோருக்குத் தேறுதலளித்து, ''நாம் பலமுறை தவறிவிடினும் ஸமத்வத்தை யடையும் முயற்சியைக் கைவிடலாகாது'' என்று இது போதிக்கிறது.

★

# நீதி தர்மம்

## பூர்வ பீடிகை

பாசாங்கும் வஞ்சனையும் நம்முடைய காலத்தில் வல்லமை அடைந்துவிட்டன. எந்த மதத்தைச் சேர்ந்தவர்களாயிருப்பினும், ஜனங்கள் தங்கள் தங்களுடைய மத சம்பந்தமான வெளிக் காரியங்களிலேயே சிரத்தையுள்ளவர்களாக இருக்கிறார்கள்; தங்களுடைய மதத்திற்கு அடிப்படையான மூல தத்துவங்களைக் காலைவாரி விட்டுவிடுகிறார்கள். பொருள் சேர்த்துக் குவிக்கவேண்டுமென்ற பேராசையில் அவர்கள் ஈடுபட்டுப் போய்விடுவதால், தாங்கள் பிறருக்குத் தீங்கு செய்வதையாவது அல்லது செய்யக் கூடுமென்பதையாவது மறந்து விடுகிறார்கள். அமெரிக்காவில் ராக்பெல்லர் என்ற பெயருடைய ஒருவர் இருந்தார். அவர் மண் எண்ணெய் வியாபாரம் செய்து பெருந் திரவியம் குவித்தார். அவரைவிடப் பணக்காரன் உலகிலேயே இல்லை யென்று பெயர் வாங்கினார். ஆனால் பணம் சம்பாதிப்பதில் தர்மம் அதர்மம் என்பதை அவர் பாராட்டினதேயில்லை என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். மதத்திற்குப் பகிரங்க விரோதிகளாக அநேகர் ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் இருக்கிறார்கள். உலகில் பொல்லாத்தனமும் பாவமும் மிகுதியாக இருப்பதிலிருந்தே மதம் பொய் யென்பது பிரத்தியட்ச உண்மை யென்று அவர்கள் கட்சி பேசுகிறார்கள். இது முற்றிலும் தப்பெண்ணம். 'ஆடத் தெரியாதவள் முற்றம் கோணல்' என்பதுபோல், தங்களுடைய தீய செயல்களுக்கு மதம் ஜவாப்தாரி யென்று அவர்கள் நினைத்துக்கொண்டு, தங்களுடைய செயல்களுக்குத் தாங்கள் ஒரு காலத்தில் ஜவாப் சொல்லவேண்டியிருக்கு மென்பதை நினையாமலே வாழ்நாளைக் கழிக்கிறார்கள்.

இவ்வாறு பொறுப்பற்றவர்களாக ஜனங்கள் வாழ்வது மேன்மேலும் அதிகப்படுவதைக் கண்டு பலர் பயந்து அதைப் பகிரங்கமாக எதிர்க்க முன் வந்திருக்கிறார்கள். மதப்பற்று ஜனங்களுக்கு இராமற் போய்விடின், உலகமே நாசமாகிவிடுமென்று அவர்கள் நினைக்கிறார்கள்; அப்படி அவர்கள் நினைப்பது சரியே. ஜனங்களை ஸன்மார்க்க வழியிலே நடக்கும்படி செய்ய அவர்கள் மிகவும் பாடுபடுகிறதுடன் ஒரு சபையையும் ஏற்படுத்தி யிருக்

கிருர்கள். அந்தச் சபையார் எல்லா மதங்களின் மூல தத்துவங்களையும் ஆராய்ந்து பார்த்து, நித்தியமான ஸன்மார்க்கத்தையே அவை யெல்லாம் அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன என்பதை நிரூபணம் செய்திருக்கிருர்கள். ஒரு மனிதன் எந்த மதத்தைச் சேர்ந்தவனுக இருப்பினும் ஸன்மார்க்கத்திற்கு விரோதமாக நடப்பானுயின், அதனுல் அவனுக்குத் தீங்குண்டாகுமென்பது நிச்சயம். இக்காலத்தில் அநியாயமாக எல்லா மதங்களிடத்திலும் அதைச் சேர்ந்தவர்களுக் குண்டாகி விட்ட அலட்சிய புத்தியை ஒழிக்கவேண்டியது மேற்சொன்ன சபையின் லட்சியமாக இருக்கிறது. எல்லா மதங்களுக்கும் அஸ்திவாரமாக வுள்ள மூல தத்துவங்களை அச்சபையில் சேர்ந்திருக்கிறவர்கள் ஆராய்ச்சி செய்து வருவதன் பலஞ்க "நீதி தர்மம்" என்ற புது மதம் ஒன்றை அவர்கள் ஏற்படுத்தி யிருக்கிருர்கள்; உலகிலுள்ள சகல ஸ்திரீ புருஷர்களையும் கட்டுப்படுத்தும் ஸன்மார்க்க சட்டங்களே இந்தப் புது மதமாகும். அந்தச் சட்டங்கள் என்ன வென்பதைக் கூடுமானவரையில் இங்கு விளக்கிச் சொல்ல முன் வந்திருக்கிறேன். ஏனெனில், அச்சட்டங்களின்படி ஜனங்கள் நடந்தால்தான், மனுஷ்ய ஜாதி நல்ல ஸ்திதியில் இருக்கக்கூடும்.

இதைப் படிக்கிறவர்கள், நான் சொல்லப்போகும் தத்துவங்களில் எவற்றை ஒப்புக்கொள்ளுகிருர்களோ அவற்றை அனுஷ்டிக்குமாறு நான் கேட்டுக்கொள்ளுகிறேன். அப்படி அவர்கள் செய்வதைத்தான் என்னுடைய சிரமத்திற்குத் தகுந்த வெகுமதியாக நான் கருதுவேன்.

## 2. ஸன்மார்க்கியாக இருக்கவேண்டிய கடமை

ஒவ்வொரு மனிதனுடைய மனத்திலும் இரண்டு ஜன்னல்கள் யிருக்கின்றன; ஒன்று அவன் எப்படி யிருக்கிருனே அதைக் காட்டுகிறது; மற்ருென்று அவன் எப்படி யிருக்கவேண்டுமோ அதைக் காட்டுகிறது. ஆகையால் சாதாரண வித்தைகள் உலகம் எப்படி யிருக்கிறதோ அதைப் பொறுத்தவைகளாகவும், நீதி தர்மத்தைப்பற்றிய வித்தையானது உலகம் எப்படி யிருக்கவேண்டுமோ அதைப் பொறுத்ததாகவு மிருக்கின்றன.

மனுஷ்யனுகப் பிறந்த ஒவ்வொருவனும் ஜாக்கிரதையுடன் தன்னைச் சோதித்துப் பார்த்துக்கொண்டு, தான்

இருக்கிற நிலையை நன்கு அறிந்து கொள்ளவேண்டும்; பிறகு தன்னுடைய சரீரத்தையும் மனத்தையும் ஆத்மாவையும் சிரேஷ்டமாகச் செய்யத் தன்னால் கூடியதையெல்லாம் செய்ய வேண்டும். அநியாயம், துஷ்டத்தனம், டம்பம் முதலியவைகளால் விளையும் தீங்குகளை அவன் அறிந்துகொண்டு அவைகளை ஒழிக்கத் தன்னால் கூடியதைச் செய்யவேண்டும். இன்னின்ன மாதிரி வீடு கட்டவேண்டுமென்று ஒரு படம் எழுதிக்கொள்ளுகிறோம்; வீட்டை எப்படிக் கட்டவேண்டுவென்பதைக் காட்டும் உபயோகந் தான் அதனிடம் இருக்கிறது. அதுபோல் தர்ம சாஸ்திரமானது நம்முடைய வாழ்வை ஒழுங்காக்கும் வரையில்தான் உபயோகமுள்ளது. அனுஷ்டானத்தில் கொண்டுவரப்படாத நீதி தர்மங்களால் ஒரு பிரயோஜனமு முண்டாவதில்லை. தர்மங்களை யெல்லாம் அநேகர் நெட்டுருச் செய்து அவைகளைப் பற்றிக் கூச்சல் போடுகிறார்கள்! ஆனால் அவைகளை அனுஷ்டிக்கிற உத்தேசம் அவர்களுக்குச் சிறிதுமில்லை, அப்படிப்பட்ட மனிதர்கள் பலரை நாம் கண்டிருக்கிறோம். மறு லோகத்தில் அனுஷ்டிப்பதற்குத்தான் தர்ம சாஸ்திரங்கள் ஏற்பட்டிருப்பதாகச் சிலர் நினைக்கிறார்கள். ஆனால் எவனொருவன் ஸன்மார்க்க விதிகளுக்குக் கட்டுப்பட்டு நடக்கவில்லையோ அவன் மனிதனே யல்லவென்று நாம் சந்தேகமின்றிச் சொல்லவேண்டும். ஸன்மார்க்க வழியில் போவதாலும், ஸத்தியத்தையே பேசுவதாலும் என்ன துன்பங்கள் நேருமாயினும், அவற்றில்தான் நாம் சந்தோஷத்தைக் காணவேண்டும்.

பகவான் ஸர்வ வல்லமை யுள்ளவர். பரிபூர்ணமென்பது அவர் தான். அவருடைய நீதிக்கும் அவருடைய கிருபைக்கும் நாம் எல்லை ஏற்படுத்த முடியாது. அப்படியிருக்கையில், அவருடைய பக்தர்கள் என்று சொல்லிக் கொள்ளும் நாம் எப்படி ஸன்மார்க்கப் பற்றற்றவர்களாக வாழத் துணிகிறோம்! பிரதி பிரயோஜனத்தை எதிர்பார்த்து ஸன்மார்க்க வாழ்வு வாழவேண்டுமென்று விதியேற்பட்டிருக்கிறது. அப்படி வாழ்வதால் நமக்கு இனி நன்மை யுண்டாகுமென்பதை உத்தேசித்து அது சொல்லப்பட்டதல்ல. ஆனால் பகவத் சிருஷ்டியில் அது நித்தியமான விதி; அதை மாற்ற எவருக்கும் அதிகாரமாவது சக்தியாவது இல்லை. நமக்கு உணவும் உடையும் அவசியமாக இருப்பதை விட நற்காரியங்கள் அதிக அவசியமானவை. நம்முடைய பசி நேரத்தில் நமக்கு ஆகாரம்

போட்டவனிடத்தில் நாம் நன்றி யறிதலுள்ளவர்களா யிருக்க வேண்டியதை விட, நற்காரிய மொன்றைச் செய்ய நமக்குச் சந்தர்ப்பம் அளித்தவரிடத்தில் அதிக நன்றி யுள்ளவர்களாக இருக்கவேண்டும்.

டம்பத்தினிடத்தில் ஈடுபட்டவனோ, அல்லது உலகத் தாரால் மதிக்கப்பட வேண்டுமென்று ஆசை கொண்ட வனோ உண்மையில் ஸன்மார்க்கியாக இருக்கமுடியாது. சுத்தமோ, அறிவோ, பிரயாசையோ ஸன்மார்க்கமாகி விடாது. இவையெல்லாம் ஸன்மார்க்கத்தின் அம்சங்களா யினும், இவையே ஸன்மார்க்கமல்ல. உண்மையில் ஸன் மார்க்கியாகவுள்ள மனிதன் புண்ணியமான வாழ்க்கை வாழ்வான். அதனால் தனக்கு நன்மை உண்டாகுமென்று எதிர்பார்த்து அப்படி அவன் வாழ்பவனல்லன்; ஆனால் அப்படி வாழ்வதானது அவனுடன் பிறந்த குணமாக இருக்கிறது. அதுவே அவனுடைய ஜீவன்; புண்ணியத் திற்கு வெகுமதி புண்ணியமே என்று ஒரு வார்த்தையாகச் சொல்லிவிடுவோம்.

## 3. அதி உத்தம ஸன்மார்க்கம்

ஸன்மார்க்கம் என்பது என்னவென்று இக்காலத்து ஜனங்கள் கொண்டிருக்கும் அபிப்பிராயங்கள் சரியல்ல. அவை ஆழ்ந்த சிந்தனையின்மேல் ஏற்பட்டவை யல்ல. மனிதன் ஸன்மார்க்கியாக இருக்க அவசியமே யில்லை யென்று சிலர் கருதுகிறார்கள்; மதத்திற்கும் ஸன்மார்க்கத் திற்கும் சம்பந்தமே யில்லை யென்று வேறு சிலர் கருது கிறார்கள். ஆனால் ஸன்மார்க்கமின்றி எந்த மதமும் நிலைத் திருக்க முடியாது. ஸன்மார்க்கமே பெரிதென்று நினைத்து ஸன்மார்க்கியாக இருக்கிறவர்கள் மதானுஷ்டமான முள்ளவர்கள் என்று கருதப்படவேண்டும். தங்களுடைய தேசத்தின் பொருட்டு, தங்களுடைய உயிரையும் தியாகம் செய்யத் தயாராக இருக்கிறவர்கள் உத்தம ஸன்மார்க்கி களே யாவர். ஜேர்மி பெந்தாம் என்ற பெய ருடையவர் ஒருவர் இருந்தார். கல்வியறிவை ஜனங் களுக்குள் பரவச் செய்யவும், சிறைகளிலிருக்கும் கைதி களுடைய வாழ்வைத் திருத்தவும், அவர் சலிக்காமல் உழைத்துத், தம்முடைய தேச ஜனங்களின் நன்மையின் பொருட்டுப் பல சட்டங்கள் செய்வதற்குப் பாடு பட்டார். அவரை நாம் 'மகா ஸன்மார்க்கி' என்று சொல்ல வேண்டும்.

பலர் போனவழியில் போய்க்கொண்டிருப்பது ஸன் மார்க்க மாகிவிடாது. ஆனால் சரியான வழி எது என்பதை நாம் கண்டுபிடித்து அதில் போகவேண்டும். ஸத்தியத் தைப் பின் பற்றாமல் உண்மையான அபிவிருத்தி யடைய் முடியாது; அதாவது அபிவிருத்தியும் சீர்திருத்தமும் ஸன்மார்க்கத்துடன் பிணைக்கப் பட்டவைகளா யிருக் கின்றன.

நம்முடைய ஆசைகளையும் உத்தேசங்களையும் இரண்டு வகுப்புகளாகப் பிரித்து விடலாம். ஒருவகை நம்முடைய நன்மையை உத்தேசித்தவை. மற்றொரு வகை நம்முடைய நன்மையை உத்தேசிக்காதவை. நம்முடைய நன்மையை உத்தேசித்த ஆசைகள் எல்லாம் துன்மார்க்கமானவை; ஆயினும் பிறருக்கு நன்மை செய்யும் பொருட்டு நம்மை விருத்தி செய்து கொள்ள வேண்டுமென்ற ஆசையானது ஸன்மார்க்கமாகும். ஆனால் பிறருக்கு நாம் செய்த உபகாரங்களைப் பற்றித் தற் புகழ்ச்சி செய்துகொள்ள ஆரம்பித்தாலும், அவைகளைப் பற்றி உள்ளூரப் பெருமையாக நினைத்துக் கொண்டாலும், ஸன்மார்க்கத்திலிருந்து உடனே நழுவி விடுகிறோம். பிறருக்கு உபகாரம் செய்யவேண்டும் என்பதற்காக மாத் திரம் உபகாரம் செய்வதுதான் ஸன்மார்க்கமாகும்.

கோபம், பொய், மனஸ்தாபம் முதலியவைகள் துன் மார்க்கத்திற்கு விதைகளாக இருக்கின்றன. அவை ஒரு குடும்பத்தில் நிற்கும்படி அக்குடும்பத்தார் விட்டு விடு வார்களாயின், அக்குடும்பம் நாசமாகி விடும். பிறருக்கு உபகாரம் செய்வதற்கான சக்தி வெளியிலிருந்து வருகிற தல்ல. அது நம்மிடத்தில் எப்பொழுதும் இருந்து கொண்டு தானிருக்கிறது; சரியான வழிகளில் அதை விருத்தி செய்ய வேண்டியதே நாம் செய்ய வேண்டிய காரியம். மனுஷ்ய ஜாதியின் க்ஷேமத்தின் பொருட்டு ஓயாமல் நாம் வேலை செய்ய வேண்டியதே அதி உத்தமமான ஸன் மார்க்கம். இந்த உண்மையை நாம் தெரிந்துகொண்டு விட்டால், ஸன்மார்க்கத்தைப் பற்றிய மற்ற விதிகள் எல்லாம் தாமாக நமக்கு விளங்கும்.

## 4. ஸன்மார்க்கச் செய்கை என்பது என்ன?

சாதாரணமாகப் பல காரியங்களை நாம் செய்கையில் தர்மம் அதர்மம் என்பதைக் கவனிக்கிறதேயில்லை; ஏனெனில் நாம் சம்பிரதாயங்களினால் கட்டுப்பட்டவர்

களாக இருக்கிறோம். பல விஷயங்களில் சம்பிரதாயங்களை நாம் அனுஷ்டிக்க வேண்டியது அவசியமே. ஒவ்வொருவனும் தன்னுடைய இஷ்டப்படி நடப்பதென்றால், உலகில் குழப்பம் தவிர வேறொன்று மிராது; ஆயினும் வழக்கம் அல்லது சம்பிரதாயத்தைக் கண்ணை மூடிக்கொண்டு அனுஷ்டிப்பதானது பல சமயங்களில் தர்மத்திற்கு விரோதமாக இருக்கிறது.

தானாகச் செய்யாத எந்தக் காரியமும் தர்மமாகாது. தர்மமானதென்று ஒரு காரியத்தை நாம் சொல்ல வேண்டுமென்றால், அதை அறிவுடன் செய்திருக்கவேண்டியதுடன், அதைச் செய்யவேண்டியது கடமை என்ற எண்ணத்துடனும் செய்திருக்க வேண்டும். புத்தி யில்லாமல் ஒரு காரியத்தை இயந்திரம்போல் செய்வதற்கும், புத்தியுடன் செய்வதற்கும் வித்தியாசமுண்டு. குற்றம் செய்த ஒருவனை அரசன் மன்னித்து விடும்பொழுது, அவன் ஒரு நற்காரியத்தைச் செய்கிறான். ஆனால் அந்த மன்னிப்பு உத்தரவைச் சுமந்து கொண்டு போகும் சேவகன் அரசனுடைய கருவியே யல்லாமல் அவனுக்கு ஒரு பெருமையும் உண்டாகவில்லை; ஆனால் அந்த உத்தரவைக் கொண்டுபோக வேண்டியது தனது கடமை என்ற எண்ணத்துடன் அந்தச் சேவகன் அதைக் கொண்டு போவானாயின், அவனுடைய செய்கையும் நற்காரியமாகி விடுகிறது.

தான் செய்வது சரியா பிசகா என்பதை யோசிக்காமல் பிறர் போகும் வழியில் போகிறவன் ஸன்மார்க்கம் அல்லது தர்மம் என்னவென்று ஒருநாளும் அறிந்து கொள்ள முடியாது. உலகத்தில் சூரர்கள் என்று பெயர் வாங்கி யிருக்கிறவர்கள் எல்லோரும் உலகத்தின் நன்மையின் பொருட்டு ஸம்பிரதாயத்தை மீறி நடந்து புது வழியைக் காட்டினவர்களாக இருக்கிறார்கள். ஒரு விஷயத்தைப்பற்றி ஒரு அபிப்பிராயத்துக்கு வருவதிலும், அதை வெளியிட்டுச் சொல்லுவதிலும், தன்னுடைய புத்தியில் சரியென்று பட்டவிதம் நடப்பதிலும் எவன் பயப்படாதவனாக இல்லையோ, அவனை ஸன்மார்க்கி என்று சொல்ல முடியாது. தன்னுடைய மனம் எதைச் சொல்லுகிறதோ அதுதான் கடவுள் சொல்லுகிறதென்றும், தன்னுடைய ஒவ்வொரு செய்கையும் ஒவ்வொரு எண்ணமும் சரியா, தப்பா என்பதை முடிவு செய்யவேண்டியது தன்னுடைய மனமே என்றும், ஒருவன் உணர்ந்துகொள்ளும் வரையில் தன் மனத்தில் சரியென்று பட்டதைத் தைரிய

மாகச் சொல்லுவதும் அதைச் செய்வதும் அவனுக்கு அசாத்தியமாக இருக்கும்.

மேலும், ஒரு செய்கை தர்மமானதா அல்லவா என்று முடிவு செய்கையில் அதைச் செய்தவனுடைய எண்ணத்தையும் நாம் கவனிக்க வேண்டும். எந்த எண்ணத்தின் மேல் ஒரு காரியம் செய்யப்பட்டதோ, அதைப் பொறுத்து அது தர்மமாக இருக்கலாம். அல்லது அதர்மமாக இருக்கலாம். ஏழைகளுக்கு அன்னம் போடுகிற வழக்கமுடையவர்கள் இருவர் இருப்பதாக வைத்துக்கொள்வோம்: அவர்களில் ஒருவன் கருணையினால் தர்மம் செய்கிறான்; மற்றவன் கீர்த்திபெற வேண்டுமென்றோ, அல்லது தனது அந்தஸ்து குறையாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்றோ, அல்லது வேறு சுய காரியத்தையோ எண்ணி செய்கிறான். இவ்விருவரும் செய்யும் காரியம் ஒன்றேயாயினும், ஒருவன் விஷயத்தில் அது ஸன்மார்க்கமாகவும் மற்றவன் விஷயத்தில் துன்மார்கமாகவு மிருக்கிறது. ஆகையால் நல்லெண்ணத்தின்மேல் ஒரு காரியம் செய்யப்பட்டாலன்றி அது ஸன்மார்க்கக் காரியமாகாது.

ஒரு ஸன்மார்க்கக் காரியத்தின் பிரயோஜனம் நமக்குத் தெரியாமலிருக்கலாம்; அல்லது அது பிசகென்று நமக்குப்படலாம், ஆயினும் நம்முடைய செய்கையின் பிரயோஜனத்தைப் பற்றி நாம் கவனிக்க வேண்டியதில்லை. நம்முடைய எண்ணம் பரிசுத்தமானதென்பதையும், அது நற்காரியமென்பதையுமே நாம் நிச்சயம் செய்துகொள்ள வேண்டும்; பாக்கி கடவுளுடைய பொறுப்பென்று விட்டுவிடவேண்டும். பூர்வத்தில் மாஸிடோனியா என்ற தேசத்தின் அரசனாக இருந்து பல ராஜ்யங்களை ஜயித்த அலெக்ஸாண்டரை ‘மகா அலெக்ஸாண்டர்’ என்று சரித்திரக்காரர்கள் சொல்லி யிருக்கிறார்கள். அவர் காலடி வைத்த இடங்களிலெல்லாம் கிரேக்க ஜாதியாருடைய கல்வி, சிற்பம், சாஸ்திரம், நடை உடை முதலியவைகளைக் கற்பிக்கச் செய்தார். அப்படிச் செய்ததால், நல்ல பலனே உண்டாயிற்று. ஆனால் கீர்த்திபெற வேண்டியே அவர் அப்படி யெல்லாம் செய்தார். அப்படி யிருக்கையில் அவருடைய செய்கை ஸன்மார்க்கமானதென்று நாம் எப்படிச் சொல்லக்கூடும்? அவர் பெரிய போர்வீரனாக இருந்திருக்கலாம். ஆனால் அவரை மகானென்றாவது தர்மவானென்றாவது சொல்லுவதற்கில்லை.

ஒரு காரியம் நற்காரியமாக இருப்பினும், நல்லெண்ணத்தின்மேல் அது செய்யப்பட்டிருப்பினும், ஒருவனால்

தாகைவே செய்யப்பட்டிருந்தாலொழிய அதை ஸன் மார்க்கக் காரியமென்று சொல்ல முடியாதென்பதுபோல் நான் சொல்லியுள்ள வாதங்களிலிருந்து விளங்குகிறது. கச்சேரிக்குப்போக நாழியாகிவிடு மென்றும் அதனுல் என் னுடைய உத்தியோகம் போய்விடுமென்றும் பயந்து கொண்டு நான் காலையில் எழுந்திருப்பேனுயின், அது ஒரு நற்காரியமாக மாட்டாது. டாம்பீகமாக இருக்கும் ஒருவன் பணமிராத நிலைமையில் எளிய வாழ்வு வாழ்வானுயின், அது நற்காரியமாக மாட்டாது. ஆனுல் நான் பணக்கார ளுக இருப்பதாக வைத்துக்கொள்வோம். என்னுடைய அண்டை அயலாருக் கில்லாத போகங்களை அனுபவிப்பது பாவமென்ற எண்ணத்தின்மேல் நான் எளிய வாழ்வு வாழ்வேனுயின், என்னுடைய செய்கை நற்காரியமாகும். என்னுடைய வேலைக்காரர்கள் போய்விடுவார்கள் என்று பயந்துகொண்டு அவர்களுடைய சம்பளத்தை உயர்த்திக் கொடுப்பேனுயின், என்னைத் தருமவான் என்று சொல்ல முடியாது.

ஆனுல் என்னை அண்டி யிருக்கிறவர்களுடன் என் னுடைய சம்பாத்தியத்தைப் பங்கு போட்டுக்கொள்ள வேண்டுமென்ற எண்ணத்துடன் நான் அப்படிச் செய் தால், என்னுடைய செய்கை நற்காரியமாகி விடுகிறது. எனவே, பயத்திஞலோ நிர்ப்பந்தத்திஞலோ செய்யப்படும் காரியமானது ஸன்மார்க்க காரியமாகிறதில்லை.

சுயநலத் தோஷ மேற்பட்டுவிடின், அதி சிரேஷ்ட மான காரியங்களும் ஸன்மார்க்க குணத்தை இழந்து விடு கின்றன. சுய நலத்தை உத்தேசித்த எல்லாக் காரியங் களும் தீங்கானவைகள்தான் என்பதில்லை; ஆனுல் ஸன் மார்க்க காரியங்கள் என்று அவைகளைச் சொல்லுவ தானது ஸன்மார்க்கத்தைப் பழிப்பதாக விருக்கும். யோக்கியமாக இருப்பது நல்ல உபாயந்தான்; ஆனுல் அது நல்ல ‘உபாயம்’ என்பதை உத்தேசித்து யோக்கியமாக நடக்கிறவனை யோக்கியன் என்று சொல்லக்கூடாது. அப் படியே பிறரை நேசித்தல் தெய்விகத்தன்மை பொருந்திய காரியம். ஆனுல் சுய நன்மையை உத்தேசித்து ஒருவன் நேசிப்பானுயின், அது உத்தமச் செய்கையாக மாட்டாது.

மறுமையில் நன்மையை உத்தேசித்துச் செய்யப்படும் காரியங்களும் ஸன்மார்க்க காரியங்கள் ஆகமாட்டா. சரி யானதைச் செய்யவேண்டியதுதான் சரி யென்ற எண் ணத்தின்மேல் சரியானதைச் செய்கிறவன்தான் ஸன் மார்க்கி யாவான். தான் செய்யும் பக்திக்குப் பிரதிப் பிர

யோஜனத்தை எதிர் பாராமல் பக்தி செய்கிறவன்தான் உண்மையான பக்தனுவான். தன்னுடைய சிநேகிதர்களிடத்தில் யோக்கியமாகவும் தன்னுடைய விரோதிகளிடத்தில் அயோக்கியமாகவும் நடந்து கொள்ளுகிறவன் யோக்கியனல்ல, பயங்கொள்ளித் தனத்திலேயே அவன் அவ்வாறு நடப்பவனுக இருக்கிருன்.

ஆகையால், ஒரு காரியம் ஸன்மார்க்கமானதா அல்லது துன்மார்க்கமானதா? என்பது எந்த எண்ணத்தின்மேல் அது செய்யப்பட்டதோ அதைப் பொறுத்ததாக இருக்கிறது. ஒருவனுடைய மனத்திற்குள் புகுந்து அவனுடைய எண்ணங்களை நாம் கண்டறியக்கூடா தாகையால், அவனுடைய செய்கைகள் இன்ன தன்மையானவை என்று முடிவு செய்வது கஷ்டமான வேலையாக இருக்கும். ஆயினும் எண்ணத்தைக் கொண்டுதான் செய்கையின் தன்மையை நாம் மதிப்பிட வேண்டும்.

## 5. சட்டங்களுக்கெல்லாம் மேலான சட்டம்

ஒரு செய்கை நற்காரியமா, அன்ரு என்று நாம் மதிப்பிடும்பொழுது, இன்னது நல்லது இன்னது கெடுதல் என்று நாம் அறியாமலே ஒரு எண்ணம் நமது மனத்தில் தோன்றும். ஒரு செய்கை நல்லதா அன்ரு என்று சொல்லுகையில், அது நன்மையை உண்டுபண்ணுவதா அல்லது தீங்கை உண்டுபண்ணுவதா என்று நாம் சிந்தனை செய்வதில்லை. நல்லது அல்லது கெடுதல் என்பதைப் பற்றி நாம் அறியாமலே சில எண்ணங்கள் நமக்கு ஏற்படும். ஒருவன் இன்னொருவனுக்கு ஏதேனும் கெடுதி செய்தால், அதனுல் நமக்குப் பாதக மேற்படவில்லையாயினும், அதை நாம் கண்டிக்கிருேம். சில சமயங்களில் கெடுதல் செய்தவனிடத்தில் நமக்கு அன்பிருக்கலாம். ஆயினும் அவன் செய்துவிட்ட காரியத்தை நாம் கண்டிக்காமலிருப்பதில்லை. என்ன எண்ணத்தின்மேல் செய்யப்பட்டதென்று எல்லாக் காரியங்களுக்கும் நாம் காரணத்தைக் கண்டுபிடிக்கக் கூடவில்லையாகையால், நாம் பல சமயங்களில் கண்டனம் செய்வது பிசகாக இருக்கிறது. ஒரு காரியத்தினுல் நமக்கு நன்மை உண்டாகிறதாயினும், அது சரியானது அல்லது பிசகானது என்று நாம் சொல்லாம லிருப்பதில்லை.

ஆகையால் ஒரு காரியம் ஸன்மார்க்கமானது, அல்லது ஸன்மார்க்க மல்லாதது என்பது நம்முடைய விருப்பு

வெறுப்பைப் பொறுத்ததல்ல. பல சந்தர்ப்பங்களில் நம்முடைய அபிமானமானது ஸன்மார்க்கத்திற்கு விரோதமாக இருக்கிறது. நம்முடைய அன்பினால் குழந்தைக்கு நாம் ஒன்றைக் கொடுக்கும்படி நேரலாம். ஆனால் அது குழந்தைக்குக் கெடுதி செய்யுமானால், அதைக் கொடுத்தது ஸன்மார்க்கப்படி குற்றமேயாகும். ஸன்மார்க்க எண்ணங்களால் கட்டுப்பட்டிருந்தாலொழிய அபிமானமே விஷமாகிவிடும்.

ஸன்மார்க்க விதியிடத்தில் இன்னொரு விசேஷமிருக்கிறது; அது என்னவெனில் அந்த விதியானது நித்தியமானது, மாறுவதல்ல. ஒரு ஊருக்கொரு மாதிரியாகவும் ஒரு ஜாதிக்கொரு மாதிரியாகவும் அது இருக்கவில்லை. நாம் கண்ணைத் திறந்து கொண்டிருக்கையில் சூரியனைப் பார்க்கிறோம். கண்ணை மூடிக்கொண்டதும் சூரியனைப் பார்க்கிறதில்லை. அதுபோல் அறிவின்மையால் நாம் கண் இழந்தவர்களாக இருக்கிற வரையில், ஸன்மார்க்க விதியை அறியக்கூடவில்லை; ஆனால் நம்முடைய திருஷ்டி தெளிவாகி விட்டதும், ஸன்மார்க்க விதியைத் தெரிந்து கொள்வதில் ஒரு சிரமமுமிருக்கிறதில்லை. அநேகருடைய புத்தி சுய நன்மையினால் மூடிக்கிடப்பதால், துன்மார்க்கத்தை ஸன்மார்க்கமாகவும், பிசகைச் சரியாகவும், பாவத்தைப் புண்ணியமாகவும் அவர்கள் தப்பாகக் கருதுகிறார்கள். ஆனால், சுய நன்மையை அப்பால் கட்டி வைத்துவிட்டு ஸன்மார்க்க விதியை ஜனங்கள் கவனிக்கக்கூடிய காலம் சீக்கிரம் வரும். நீதி தர்மத்தைச் சொல்லும் சாஸ்திரமானது இப்பொழுதுதான் முளைத்திருக்கிறது. ஸ்தூல உலகத்தில் காணப்படும் விஷயங்களையே ஜனங்கள் ஆராய்ச்சி செய்து வருகிறார்கள். சூட்சுமமாகிய ஸன்மார்க்க உலகத்தில் தைரியமாகப் புகுந்து பார்க்க இன்னும் எவரும் முன் வரவில்லை. பிரத்தியட்சப் பலன்களைத் தரும் சாஸ்திரங்களைச் சுயப் பிரயோஜனத்தை உத்தேசிக்காமல் ஆராய்ச்சி செய்வதுபோல், ஸன்மார்க்க சாஸ்திரத்தை ஆராய்ந்தறிய ஆரம்பித்தால்தான், உண்மையான ஸன்மார்க்க விதிகள் எவை என்று கண்டு பிடிக்க முடியும்.

ஸன்மார்க்க உலகத்தை ஆளும் விதிகள் நம்முடைய அபிப்பிராயங்களையும், நம்முடைய உணர்ச்சிகளையும் மீறியவை. மனிதன் செய்துள்ள சட்டங்களைப்போல் அவை சிறிது காலத்திற்குச் செல்லுவனவல்ல; ஆனால் எப்பொழுதும் செல்லுபவை; ஆகையால் அரசாங்கச்

சட்டங்களைவிட அவைகளுக்குக் கீழ்ப்படிந்து நடக்க நாம் அதிகமாய்க் கடமைப் பட்டிருக்கிறோம். அரசாங்கச் சட்டங்களை மீறி நடந்து அதன் கோபத்துக்கு ஆளானால் பாதகமேற்படாமல் போகலாம்; ஆனால் ஸன்மார்க்க விதியை மீறி நடந்தால் பகவானின் கோபத்துக்கு ஆளாகாமல் தப்பிக்கொள்ள முடியாது. ஈச்வரனுடைய சட்டத்திற்கு விரோதமாக அரசாங்கச் சட்ட மிருக்குமானால், அதை மீறி நடக்கவேண்டியது நமது கடமையாகி விடுகிறது.

அரசாங்கச் சட்டத்திற்கும் ஸன்மார்க்கச் சட்டத்திற்கும் வித்தியாசமென்னவெனில், ஸன்மார்க்கச் சட்டமானது ஒவ்வொரு மனிதனுடையவும் ஆத்மாவின் இடத்தில் முளைத்திருக்கிறது. ஸத்தியம் நம்மிடத்தில்தான் வாஸம் செய்கிறது. நம்மில் ஒவ்வொருவரிடமும் ஒரு கர்ப்பக் கிரகம் இருக்கிறது. அதில் ஸத்தியம் வசிக்கிறது. பிசகு செய்யும் ஒவ்வொருவனுக்கும் தான் செய்வது பிசகென்பது தெரியும்; ஏனெனில் பொய்யை மெய்யென்று ஒருபொழுதும் நினைக்க முடியாது. மகா துன்மார்க்கிகள் கூடத் தாங்கள் ஸன்மார்க்கிகள் என்று சொல்லிக் கொள்வதிலிருந்து ஸன்மார்க்கத்தின் உயர்வை அவர்களும் ஒப்புக் கொள்ளுகிறார்கள் என்பது நிதர்சனமாகிறது. ஸன்மார்க்கத்தின் சிறப்பு இதுதான். வழக்கம் அல்லது ஸம்பிரதாயம் அல்லது ஜனங்களின் அபிப்பிராயம் முதலியவைகளில் எதையும் அது லட்சியம் செய்கிறதில்லை. பல சந்தர்ப்பங்களில் ஸம்பிரதாயமானது ஸன்மார்க்கச் சட்டத்திற்கு ஒவ்வாததாக இருக்கிறது. ஸாக்ரடீஸ் என்ற பண்டிதர் ஸத்தியத்திற்காகத் தமது பிராணனைக் கொடுத்தார். ஏனெனில் அவர் எது ஸத்தியமென்று நினைத்தாரோ, அது பொது ஜனங்கள் ஸத்தியமென்று நினைத்தற்கு விரோதமாக இருந்தது. ஆனால் அவர் எந்த ஸத்தியத்திற்காகத் தமது பிராணனைத் தத்தம் செய்தாரோ, அதுதான் இப்பொழுதும் ஸத்தியமாக இருக்கிறது; இனியும் ஸத்தியமாக இருக்கும். ஸத்தியமும் தர்மமுந்தான் கடவுள் படைத்த உலகில் எப்பொழுதும் மாறாத சட்டங்களாக இருக்கும்.

எந்த மனிதனும் அல்லது ஜாதியும் ஸன்மார்க்கத்திற்கு விரோதமாக நடந்து தப்பிக் கொள்ள முடியாது. "திருடன் திருடும்பொழுது தன்னுடைய சொத்தைத்தான் திருடிக்கொள்ளுகிறான்; மோசக்காரன் மோசம் செய்யும்பொழுது தன்னைத்தான் மோசஞ் செய்து

கொள்ளுகிறான். அதர்மம் சிறிது நேரம் ஜயித்தாற் போலிருக்கலாம். ஆனால் பயங்கரமான நாசம் காத்துக் கொண்டிருக்கும். அஸ்ஸீரியா, பாபிலோன் என்ற ராஜ்யங்கள் அதர்மத்தினால்தான் நாசமடைந்தன. கிரீஸ் ராஜ்யமும் ரோம ராஜ்யமும் தர்ம வழியிலிருந்து மாறினது. அத்தேசங்களிருந்த மகா மேதாவிகளால் கூட அவைகளைக் காப்பாற்றக்கூடவில்லை. பிரெஞ்சு ராஜ்யப் புரட்சி ஏற்பட்டு அரசனின் முடியரசை ஒழித்து மக்களின் குடியரசை ஏற்படுத்திற்று. வெகு காலமாக ஜனங்கள் அனுபவித்து வந்த கொடுங்கோன்மையையும் அதர்மத்தையும் எதிர்த்தே அந்த ராஜ்யப் புரட்சி ஏற் பட்டது. அதர்மம் இவ்வாறு சிட்சை அடைகிறதுபோல், தர்மம் பெருமை அடைகிறது. தர்மவான் மேன்மை பெறு கிறான்; எந்தக் குடும்பம் அல்லது சமூகம் அதைக் கடைப் பிடித்து ஒழுகுகிறதோ அது க்ஷேமமடைகிறது; ஆகை யால் ஒரு ஜாதியானது தர்மப்படி நடக்குமானால் அது அமைதியுள்ளதாகவும் சுதந்திரமுள்ளதாகவும் க்ஷேமம் பொருந்தியதாகவும் ஆகாமற் போகாது.

## 6. மதமும் ஸன்மார்க்கமும்

மதம் வேறு, ஸன்மார்க்கம் வேறு என்பது பொது வாகவுள்ள அபிப்பிராயமென்று தோன்றுகிறது. ஆனால் அவ்வித வேற்றுமையை இந்த நூலில் ஒப்புக்கொள்ள வில்லை. அப்படி நான் ஒப்புக்கொள்ளாததற்காக மதமே பெரிதென்று கொண்டாடுகிறவர்களும், சன்மார்க்கமே பெரிதென்று கொண்டாடுகிறவர்களும் என்மேல் குறை கூறலாம். மதமானது ஸன்மார்க்கத்தின் ஒரு அம்சமல்ல வென்று முந்தினவர்களும், ஸன்மார்க்கமானது மதமின்றி இருக்க முடியுமென்று பிந்தினவர்களும் சொல்லலாம். ஆயினும் இரண்டும் ஒன்றுக்கொன்று பிராண நிலைபோல் இருக்கின்றன என்றே நான் அழுத்தந் திருத்தமாகச் சொல்லுவேன். ஜனங்களுக்குப் பொதுவாகவுள்ள அபிப் பிராயப்படி பார்த்தால், மதமானது ஸன்மார்க்கத்தி லிருந்து முற்றிலும் வேறானதென்று நினைக்க வேண்டி யிருக்கும். பல துஷ்டர்கள் துன்மார்க்கமான காரியங் களைச் செய்துகொண்டே தாங்கள் மிகவும் மதப்பற் றுள்ளவர்கள் என்று பெருமை பாராட்டிக் கொள்ளு கிறார்கள்; காலஞ் சென்ற ஸ்ரீ பிராட்லா போன்ற சிலர் அதி உத்தமர்களாகவும் ஸன்மார்க்கிகளாகவும்

இருந்தும், தாங்கள் நாஸ்திகர்கள் என்று பெருமை பாராட்டிக் கொண்டார்கள். இந்த இரண்டு அபிப்பிராயங்களும் பிசகுதான்; ஆனால், முந்திச் சொன்ன பேர் வழிகள் மத வேஷத்தில் தங்களுடைய துஷ்டத்தனத்தை மறைத்துவிடுகிறார்கள். ஆகையால், ஜன சமூகத்திற்கு அவர்கள் பெரிய அபாயம் பொருந்தியவர்களாக இருக்கிறார்கள். மதமும் ஸன்மார்க்கமும் எப்பொழுதும் கை கோத்துக் கொண்டுதான் போகவேண்டும்.

ஆதிகாலத்தில் சமூகக் கட்டுகளினாலேயே ஜனங்கள் கட்டுப்பட்டவர்களாக இருந்தார்கள். அதாவது, அனைவரும் சேர்ந்து ஒரு சமூகமாக வாழ்வதற்கு எது அவசியமோ அதையே பின்பற்றினவர்களாக இருந்தார்கள். நாளடைவில் பாவத்தை மிதித்துப் போட்டு புண்ணியமே முடிவில் ஜயமடையு மென்பதையும், கெடுதல் செய்கிறவன் முடிவில் தனக்கே நாசத்தைத் தேடிக் கொள்ளுகிறான் என்பதையும் கண்டு கொண்டார்கள். ஆகையால்தான் நாசமுறாமல் காப்பாற்றிக் கொள்ளவேண்டு மென்ற ஆசையின் பலனாக ஸன்மார்க்கத்தின்மீது நானறியாமலே ஒரு பற்று உண்டாயிற்று. ஆனால் மத சம்பந்தமான எண்ணங்கள் நமது ஹிருதயத்தின் வெளிப்புறத்தில்தான் இருக்கின்றன. நமக்கு ஏதேனும் தீங்கு நேர்ந்த பொழுதுதான் மதத்தைப்பற்றி நாம் சிந்தனை செய்கிறோம். ஆனால் பயத்தின் பலனாக உண்டாகும் பக்தியானது, பக்தியே ஆகமாட்டாது. ஆயினும் ஒன்று ஸத்தியத்தைக் கடைப்பிடித்து ஒழுக வேண்டும், அல்லது அஸத்தியத்தைக் கடைப்பிடித் தொழுகவேண்டும் என்று, இரண்டில் ஒன்றைக் கடைப் பிடிக்கவேண்டிய அவசியம் ஒவ்வொரு மனிதனுக்கும் ஒரு காலத்தில் ஏற்படலாம்; அப்பொழுது, என்ன நேர்ந்த போதிலும் தர்ம வழியில் போகவே அவன் தீர்மானிக்கலாம். அப்பொழுதுதான் ஸன்மார்க்கம் என்பது என்ன வென்று அவன் உணர்ந்து கொண்டவனாவான். அப்படிப் பட்ட ஸன்மார்க்கமும் மத சம்பந்தமற்றதாயின், வேஷமே தானாகும்.

பிறருக்குத் தீங்கு செய்வதால், நம்முடைய காரியம் எதையேனும் சாதித்துக் கொள்ளலாமாயினும், அதை நாம் செய்யக்கூடாது; ஏனெனில் தீங்கிழைப்பதால் நமக்கு வரக்கூடிய நன்மையானது வெளிக்கு மாத்திரம் நன்மையாகத் தோன்றுமே யல்லாமல் உண்மையில் நன்மை

யாக மாட்டாது. "ஒருவன் தன்னுடைய ஆத்மாவை (அதாவது ஆத்மா அடைய வேண்டிய மோக்ஷத்தை) இழந்து விட்டு உலகம் முழுமையையும் சம்பாதித்துக் கொள்வானுயினும். அதனுல் அவனுக்கு என்ன நன்மை உண்டாகும்?" என்று யேசு கிறிஸ்து சொல்லி யிருக்கிருர். லௌகிக வழிகளில் ஜெர்மனி தேசம் பெருமையடையும்படி செய்ய பிஸ்மார்க் என்பவர் பல துஷ்டச் செயல்களைச் செய்தார். சிறுவர் முன் அவர் பிரசங்கம் செய்த சமயங்களி லெல்லாம் தர்மங்களைப் பற்றிப் பிரமாதமாகப் பேசுவது வழக்கம். இந்தத் தர்மங்களை யெல்லாம் தம்முடைய வாழ்வில் அவர் எப்படி மறந்தார்? தாம் பிறருக்குச் செய்த உபதேசங்களின்படி அவர் ஏன் நடக்கவில்லை? அவருடைய ஸன்மார்கமானது மத சம்பந்த மற்றதாக இருந்ததால், உண்மையான ஸன்மார்க்கமல்ல என்பதுதான் இதற்குச் சமாதானம்.

பூமியில் போட்ட விதைக்கு நீர் எப்படி அவசியமோ, அப்படியே ஸன்மார்க்கத்திற்கு மதம் அவசியம். சரியானபடி தண்ணீர் விடப்படாத பொழுது விதையானது பூமியில் வீணுய்ப் போய் விடுவதுபோல், மத சம்பந்த மற்ற ஸன்மார்க்கமானது இளைத்துக் காய்ந்து நாசமாகிவிடுகிறது. ஆகையால் உண்மையான மதமும் ஸன்மார்க்கமும் பிரிக்கக் கூடாத சம்பந்த முடையனவாக இருக்கின்றன; அதாவது மத சம்பந்தமற்ற ஸன்மார்க்கமானது நிஷ்பிரயோஜனமாகும்.

உலகிலுள்ள பெரிய மதங்கள் சொல்லும் ஸன்மார்க்க விதிகள் எல்லாம் ஒரே தன்மையனவாகவே இருக்கின்றன. மதங்களைப் போதித்துள்ள பெரியோர்க ளெல்லோரும், மதமானது ஸன்மார்க்க அஸ்திவாரத்தின்மேல் ஏற்பட்டிருப்பதாகவே சொல்லி யிருக்கிருர்கள். அஸ்திவாரம் கலகலத்துப் போய்விட்டால் அதன்மேலுள்ள கட்டடம் விழுந்து விடுமென்பது போல், ஸன்மார்க்கம் கெட்டுப் போய்விடின் மதம் நாசமாகி விடும்.

எனவே, உண்மையான மதந்தான் ஸன்மார்க்க மென்று ஏற்படுகிறது. ஸத்தியத்தையும் தர்மத்தையும் விடப் பெரிய மதம் எதுவுமில்லை. பகவானுடைய திருநாமத்தைச் சொல்லிக் கொண்டே நாம் பாவத்தைச் செய்வோமாயின், அவருடைய கிருபைக்குப் பாத்திரராக முடியுமா? ஒருவன் பகவான் இருப்பதாக ஒப்புக்கொண்டு பொய்யும் துன்மார்க்கமும் நிறைந்த வாழ்வை வாழ்கிருன்; மற்

ெருருவன் அவருடைய பெயரைக்கூடக் கேட்டவனல்ல வாயினும், ஸத்தியமூம் ஸன்மார்க்கமும் நிறைந்த வாழ்வை வாழ்கிருன் என்று வைத்துக் கொள்வோம். இவ் விருவரில் எவன் மதப்பற்றும் ஸன்மார்க்கமும் நிறைந்தவன் என் பதில் சந்தேகமுண்டோ? ஈச்வரனுக்கு வாக்கினல் மாத்திரம் கைங்கரியம் செய்கிறவன் நாஸ்திகனிலும் கேடானவன்; மற்றவன் ஈச்வரனுடைய கட்டளை களின்படி நடக்கிறவனுகையால், அவனே பரம பக்தனுகக் கருதப்பட வேண்டும். ஆகையால் மதம் என்பதும் ஸன் மார்க்கம் என்பதும் ஒன்றுதான்.

## 7. டார்வினும் ஸன்மார்க்கமும்

எது சரியோ அதைத் தானுகவும் மனப் பூர்த்தி யுடனும் செய்வதுதான் ஸன்மார்க்கமாகும். அப்போ தைக்கப்போது உண்டாகும் உணர்ச்சியாலும், கோப தாபங்களினுலும் எவனெருவன் அசைக்கப்படாமலும், சரியான வழி என்று தனக்குப் படுவதைச் சாதிப்பதில் சக்தி யுடையவனுகவும் இருக்கிருனே அவனேத்தான் மனிதன் என்று சொல்லக்கூடும். எல்லா விஷயங்களிலும் நாமே நம்முடைய எஜமானர்களல்லவென்பது நமக்குத் தெரியும். நம்முடைய சுற்று வட்டத்தை அனுசரித்துப் போகவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது, சுற்று வட்டத்தை அனுசரித்துக்கொண்டு, ஸன்மார்க்க விதிப் படியும் நடக்கவேண்டுமா என்பது கேள்வி; அல்லது சுற்று வட்டத்திற்கு நாம் அடிமைப் பட்டவர்களா?

இந்தச் சந்தர்ப்பத்தில் டார்வின் என்பவருடைய சித் தாந்தத்தை நாம் பரிசீலனை செய்யவேண்டும். அவருடைய சித்தாந்தப்படி, "எது அதிக தகுதியுடையதோ அதுதான் மிஞ்சி நிற்கும்." அதாவது, மனிதனும் பிராணிகளும் தங்கள் தங்களைக் காப்பாற்றிக் கொள்ளும் போராட் டத்தில் அமர்ந்திருக்கின்றன. அதன் பலனுக, மிகுந்த தகுதி யுடையவைதான் எஞ்சி நிற்கின்றன. தகுதி யற்றவை தாட்சிண்யமின்றி அழிக்கப்படுகின்றன. இந்தத் தகுதியானது சரீரத்தையும் புத்தியையும் பற்றிய தாக மாத்திர மிருந்தால், மனிதர்கள் தங்களுடைய வாழ்வில் ஸன்மார்க்க மென்பதைக் கவனிக்கவே வேண்டியதில்லை. வெளி உலகத்திற்கும் ஸன்மார்க்கத் திற்கும் பிராணனுக்குச் சமமான சம்பந்தமிருப்பதாக டார்வினே ஒப்புக்கொண்டிருக்கிருர்.

கரடி, எருமை முதலிய மிருகங்களைவிட மனிதன் தேகபலத்தில் குறைந்தவன்; அவைகளுடன் அவன் தேக பலத்தைக்கொண்டு மாத்திரம் சண்டை செய்வதாயிருந்தால், நிச்சயம் தோற்றுப் போய்விடுவான். ஆனால் தன்னுடைய புத்தியின் பலத்தினால், அவன் அவைகளை ஜயித்து விட்டான். அதுபோல், மனிதர்களுக்குள் சண்டை நேரும் பொழுது, கேவலம் ஆள்-பலத்தினால் மாத்திரம் வெற்றி உண்டாகி விடுவதில்லை. எந்தக் கட்சி யாரிடம் அதிக புத்தி பலமிருக்கிறதோ அந்தக் கட்சி அசௌகரியமான நிலைமையில்கூட வென்றுவிடும். ஆகையால் சரீர பலத்தைவிட, புத்திபலம் மேலானதென்பதை மறுக்க முடியாது.

ஆனால் டார்வின் ஒப்புக்கொண்டிருப்பதுபோல், புத்திபலத்தைவிட ஸன்மார்க்க பலம் பெரியது. ஸன்மார்க்கத் தகுதி யுடையவர்கள்தான் முடிவில் எஞ்சி நிற்பார்கள். சரீர பலத்தின் மேன்மையையே டார்வின் போதித்தாரென்றும், உலகில் ஸன்மார்க்கச் சட்டம் வேண்டியதில்லையென்றும் சிலர் தப்பாக எண்ணுகிறார்கள். இவ்வுலக சரித்திரத்தை நாம் கவனித்தால், ஸன்மார்க்கச் சட்டம் நித்தியமாகவுள்ளது என்பது விளங்கும். ''ஸத்தியமும் நீதியும்தான் நிற்கும். பொய்யும் அநீதியும் சில காலம் வாழலாமாயினும், பிரெஞ்சு ராஜ்யப் புரட்சி போன்ற பயங்கரமான காரியங்கள் ஏற்பட்டுப் பொய்யும் அநீதியும் ஜவாப் சொல்ல வேண்டிய நாள் வரும்.

ஸன்மார்க்கச் சட்டத்தின் மேன்மையைக் காட்ட, சாதாரண வாழ்விலிருந்து உதாரணம் கூறலாம். பணிவுடனிருத்தல் என்பது முக்கியமான ஸன்மார்க்க குணங்களில் ஒன்று. கர்வமும் அகந்தையுமுள்ளவன் சிறிது காலம் ஜயபேரிகை அடிக்கலாம்; ஆனால் முடிவில் அவன் கஷ்டப்படத்தான் வேண்டும். அநாவசியமான போகங்களையும் துன்மார்க்கத்தையும் துறந்திருப்பது ஒரு சற்குணம். இங்கிலாந்தில் 30, 35 வயதில் குடிக்க ஆரம்பிக்கிறவன், பிறகு சுமார் 13, 14 வருஷங்கள்தான் உயிருடன் இருப்பதாகவும், அத்தோஷமற்றவர்கள் 70 வயது வரையில் உயிருடன் இருப்பதாகவும் கணக்குகளிலிருந்து தெரிகிறது. வியபசாரம் பெரிய துன்மார்க்கச் செய்கை; அந்தக் குற்றத்தைச் செய்வோர் அகால மரணமடைவதாகத் தெரிகிறது. அவர்களுக்குச் சந்ததி யிருந்தால், அவர்கள் சோனிகளாகவும் ஆண்மை யற்றவர்களாகவுமே

இருக்கிறார்கள். வியபசாரம் செய்வோருக்கு வயதாக ஆக அவர்கள் பித்துப் பிடித்தவர்களாகி விடுகிறார்கள்.

ஸன்மார்க்கச் சட்டம் தன்னுடைய வேலையில் தளர்கிறதில்லை என்பதைப் பல ஜாதிகளின் இருப்பிலிருந்தும் நாம் தெரிந்து கொள்ளலாம். அந்தமான் தீவுகளில் வாழும் சுதேச ஜனங்கள் குழந்தை பிறந்த பிறகு அந்த ஸ்திரீகளைக் கைவிட்டு விடுகிறார்கள். சுய நன்மையில் ஈடுபட்டு ஸன்மார்க்கத்தைத் துறந்துவிடுகிறார்கள். அதன் பலனாக அந்த ஜாதியே வெகு துரிதமாக க்ஷீணித்து வருகிறது. டார்வின் சொல்லுகிறபடி அற்பப் பிராணிகளிடங்கூட ஸன்மார்க்க உணர்ச்சி இருக்கிறது. அவைகளில் மிகவும் பயந்த பிராணிகள்கூடத் தங்களுடைய குஞ்சுகளைக் காப்பாற்றத் தைரியமாக எதிரிகளை எதிர்த்துத் தங்களுடைய உயிரைக் கொடுத்தும் அவைகளைக் காப்பாற்றுகின்றன. எல்லாப் பிராணிகளிடத்திலும் ஸன்மார்க்க உணர்ச்சி இல்லாமலிருந்தால் உயிர்ப் பிராணிகளே இல்லாமற்போய் உலகம் திடராகிவிடும். மனிதனுடைய உயர்வு என்னவெனில், அவனுடைய ஸன்மார்க்க உணர்ச்சி பிராணிகளுக் கிருப்பதைவிட அதிகமாகவும், அபிவிருத்தி அடைந்ததாகவு மிருக்கிறது. அதனுடன் அவன் தன்னுடைய குடும்பத்திற்காகவும் சமூகத்திற்காகவும் தேசத்திற்காகவும் பிராணத் தியாகம் செய்யக் கூடியவனாகவு மிருக்கிறான். ஆகையால் டார்வினுடைய சித்தாந்தப்படியும், அதாவது, "எது மிகுந்த தகுதியுள்ளதோ அதுதான் மிஞ்சி நிற்கும்" என்ற சித்தாந்தப் படியும், மனிதன் தான் செய்யும் காரியங்களை யெல்லாம் ஸன்மார்க்கத்தைக் கருதிச் செய்யக் கடமைப்பட்டிருக்கிறான். மனிதனுடைய பெருமையானது அவன் சேர்த்து வைத்திருக்கும் சொத்தையாவது ஆயுதங்களையாவது பொறுத்ததல்ல ; ஆனால் அவனுடைய ஸன்மார்க்கத்தையும் ஸத்தியத்தையும் பொறுத்ததாகவே இருக்கிறது.

## 8. ஸன்மார்க்கமும் ஸர்வ ஜகத்க்ஷேமமும்

மனுஷ்ய ஜாதியின் க்ஷேமமானது ஸன்மார்க்கத்தை அனுஷ்டிப்பதைப் பொறுத்திருக்கிறதென்பது இதுவரையில் சொல்லியுள்ள விஷயங்களிலிருந்து விளங்கும். அன்பு, அறம், நன்றியறிவு, தேசாபிமானம் முதலிய நற்குணங்கள் மனுஷ்ய ஜாதிக்கு க்ஷேமத்தை உண்டு பண்ணுகிறவை. எந்த நற்குணமும் அதை உடையவனுடைய நன்மையை மாத்திரம் லட்சியமாகக் கொண்டதல்ல. அது

போல் எந்தத் துன்மார்க்கமும் அதைச் செய்கிறவன் தவிர வேறு பலரையும் பாதிக்காமலிருக்கவில்லை; ஆகையால் ஒருவன் நல்லவனாகவும் கெட்டவனாகவுமிருப்பது அவனை மாத்திரம் பொறுத்த காரியமல்ல; ஆனால் சமூகம் முழுமையும் அல்லது உலகம் முழுமையும் பொறுத்த காரியமாக இருக்கிறது.

ஒரு சமூகத்தைக் கட்டுப்படுத்தும் சட்டம் அல்லது சம்பிரதாயத்திலிருந்து ஒருவன் கத்தரித்துக்கொண்டு அந்த சமூகத்திற்கு வெளியில் வாழ்வானாயினும், அவனுடைய செல்வாக்கு, மற்றவர்களிடத்தில் பிரதிபலிக்கிறது; ஏனெனில் சிந்தையானது எல்லைகளால் கட்டுப்பட்டதல்ல. ஒரு வழக்கம் பிசகானதென்று ஒருவனுக்கு நிச்சய புத்தி ஏற்பட்டுவிடுமாயின், அதிலிருந்து கத்தரித்துக்கொண்டுவிட அவன் கட்டுப்பட்டிருக்கிறான்; அவனுடைய அபிப்பிராயத்தைப் பிறர் அங்கீகரிக்கிறார்களா, இல்லையா என்று அவன் கவனிக்கவேண்டியதில்லை. எது கெடுதியானதோ அதனிடத்தில் சம்பந்தமிராமல் செய்துகொள்ளவேண்டியது அவனது முதற் கடமை. உலகத்தில் கீர்த்தி வாங்கியிருக்கிற சூரர்கள், ரிஷிகள், நபிகள் முதலியவர்கள் இம்மாதிரி நடந்தவர்களே. அவர்களுடைய அந்தரங்க சுத்தியாலும் ஸத்தியத்தை விடாத நடத்தையாலும் மனிதர்களுடைய எண்ணங்களில் எத்தனையோ மாறுதல்களை உண்டு பண்ணிவிட்டார்கள்.

மனிதன் சுயநலத்தைக் கருதியவனாகவும், பிறருடைய நன்மையில் அசிரத்தை யுள்ளவனாகவு மிருக்கிறவரையில், மிருகத்திலும் கேடானவன். தன்னுடைய குடும்பத்தின் க்ஷேமத்திற்காக அவன் வேலை செய்ய ஆரம்பிக்கையில், மிருகத்தைவிட உயர்ந்தபடியில் ஏறுகிறான். தன்னுடைய சமூகம் அல்லது ஜாதியைத் தன்னுடைய குடும்பமாக அவன் கருதும்பொழுது, அதனினும் உயர்ந்தபடியில் ஏறுகிறான். அநாகரிக ஜாதியர்களையும் தன்னுடைய குடும்பமாக அவன் பாவிக்கும்பொழுது, அதைவிட ஒருபடி ஏறுகிறான். ஆகையால் மற்ற மனிதர்களின் நலத்துக்காக அவன் எவ்வளவு வேலை செய்கிறானோ அவ்வளவு பதவியும் உயர்கிறான்.

மனிதர்கள் ஒவ்வொருவரிடத்திலும் நமக்கு அனுதாபமும் அன்பும் உண்டாகாதவரையில், ஸன்மார்க்கத்தை நாம் தெரிந்து கொண்டவர்களல்ல; ஸர்வ ஜகத்தையும் உத்தேசித்ததுதான் உத்தமமான ஸன்மார்க்கம்.

மனிதர்களாகிய நம்முடைய சகோதரர்களில் ஒவ்வொருவருக்கும் நம்மிடத்தில் பாத்தியமிருக்கிறதை நினைப்பில் வைத்துக்கொண்டு, உலகத்திற்கு நாம் திரிகரண சுத்தியுடன் ஊழியம் செய்யவேண்டும். தங்களுக்குத்தான் தாங்கள் ஜவாப்தாரியென்று கருதுகிறவர்கள் மேலான குணமுடையவர்களாக மாட்டார்கள். தன்னுடைய நன்மையைப் பாதுகாத்துக்கொள்ளாத மனிதன் வாழ்வாகிய போராட்டத்தில் தோற்றுப் போய்விடுவான் என்று நினைப்பது மூடத்தனம். மனத் தூய்மையுடனும் ஏகாக்ர சிந்தையுடனும் பிறருக்காக ஊழியம் செய்கிறவர்களைக் கடவுள் கைவிடமாட்டார்.

எல்லா மனிதர்களும் ஸன்மார்க்கச் சட்டத்திற்குக் கட்டுப்பட்டவர்களாகையால், மனுஷ்ய ஜாதி ஓர் உருவம்போலிருக்கிறது. கடவுளுக்கு எல்லோரும் சமமே. ஜாதி வித்தியாசம், அந்தஸ்து-வித்தியாசம் முதலிய வித்தியாசங்கள் இருப்பது உண்மையே. ஒருவனுடைய அந்தஸ்து எவ்வளவு உயர்ந்ததாக இருக்கிறதோ அவ்வளவு அவனுடைய பொறுப்பும் அதிகமாக இருக்கிறது. நாம் பெரிய பதவியிலிருந்தால், நம்முடைய மேன்மையைப் பற்றிப் பெருமையாகக் சொல்லிக்கொள்ளக் கூடாது, பிறரை இகழவுங்கூடாது. நம்முடைய வேலையை நாம் செய்கிறோம், அவர்களுடைய வேலையை அவர்கள் செய்கிறார்கள். எல்லோரும் மனுஷ்ய ஜாதியின் க்ஷேமத்திற்காகவே உழைப்பவர்கள். வேறு விதமாக நாம் நினைக்கும் வரையில், நாம் ஸன்மார்க்கிகளாக மாட்டோம்.

ஆகையால் தன்னுடைய சுயநலத்தைக் கருதி ஒரு ஜாதி இன்னொரு ஜாதியை அடக்கி ஆளுவது ஸன்மார்க்கப்படி பிசகென்று ஏற்படுகிறது. அதிக அபிவிருத்தி அடைந்துள்ள ஒரு ஜாதிக்கு உட்பட்டு அவ்வளவு அபிவிருத்தி அடையாத ஒரு ஜாதி இருக்குமானால், பிந்தின இனமும் தன்னுடைய படிக்கு வரும்படி செய்யத் தன்னால் கூடியதையெல்லாம் செய்யவேண்டியது முந்தின ஜாதியின் கடமையாக இருக்கிறது. தன்னுடைய பிரஜைகளைவிடத் தான் உயர்ந்தவன் என்று ஒரு அரசன் நினைத்துக் கொள்ளக்கூடாது; ஏனெனில் அவன் ஜனங்களுடைய ஊழியக்காரன்தான். அதிகாரத்தை மற்றவர்களின் நன்மையின் பொருட்டே உபயோகப்படுத்தவேண்டும். ஒரு குடியரசானது ஸன்மார்க்கத்தை அஸ்திவாரமாகக் கொண்டிராவிடின், சுயநலமற்ற ஸ்திரீ புருஷர்களைக் கொண்டிராவிடின், எதேச்சாதிகாரத்தைவிடக் கேடானதாகும்.

ஒரு சமூகம் அல்லது ஒரு ஜாதியிலுள்ள வல்லவர்கள் சோனிகளையும் ஹிம்ஸிக்கப் படுவோரையும் பாதுகாக்க ஸன்மார்க்கத்தினால் கடமைப்பட்டிருக்கிறார்கள். பிறருக்கு ஊழியம் செய்யவேண்டிய கடமையை எல்லா மனிதர்களும் உணர்ந்து கொண்டு விட்டால், பணம் குவிப்பது பெரிய பாவமென்று பாவிப்பார்கள்; அப்பொழுது பணக்காரன் ஏழை என்ற வித்தியாச மிராது, பஞ்ச மிராது, பட்டினியிராது. உலகத்தில் நற்குணம் அருமையாக இருப்பதாகவும், தாங்கள் தொகையில் குறைந்தவர்களென்றும், ஸன்மார்க்கிகள் அதைரியமடைய மாட்டார்கள். எது சரியானதோ அதைச் செய்துவிட்டுப் பாக்கியைக் கடவுள் பார்த்துக் கொள்வார் என்று விட்டுவிட வேண்டியதே அவர்களுடைய கடமை. தங்களுடைய செய்கையின் பலனை அவர்கள் நினைக்கவே கூடாது. செய்வதை நன்றாகச் செய்வதுதான் அதற்கு வெகுமதி.

## 9. முடிவுரை

ஒவ்வொரு மனிதனுக்கும் கடமைகளும் பொறுப்புகளுமிருக்கின்றன. "இது உன்னுடைய வேலை, உன்னுடைய கடமை, நீ வெற்றி அடைவதும் தோல்வி அடைவதும் உன்னையே பொறுத்த காரியம். உன்னைப்போல் நீதான் இருக்கிறாய். ஒன்றுபோல் ஒத்திருக்கும் இரண்டு வஸ்துக்கள் சிருஷ்டியில் இல்லை. ஆகையால் உன்னுடைய கடமையை நீ செய்யாவிடில் வேறு எவரும் அதைச் செய்ய முடியாது; அது செய்யப்படாமலே நின்றுவிடும்" என்று எப்பொழுதும் மனச்சாட்சி என்பது காதிற்குள் ஓதிக் கொண்டே யிருக்கிறது.

சுயநலமற்ற ஊழியத்தைப் பிறருக்குச் செய்வது மனிதனுடைய கடமை என்பதை ஏற்கெனவே தெரிந்து கொண்டு விட்டோம். அப்படி ஊழியம் செய்வதால் பிறருக்கு நன்மை உண்டாகு மென்பதற்காகக்கூட ஊழியம் செய்ய வேண்டியதில்லை; ஆனால் பரோபகாரமே தனக்குப் பிராணாதாரமாக இருக்கிறதை உத்தேசித்தே பரோபகாரம் செய்யவேண்டும். நம்மைப் பற்றிய விஷயங்களை நமது இஷ்டப்படி செய்யலாமென்று சிலர் நினைக்கிறார்கள். ஆனால் நேராகவோ மறைவாகவோ, மற்ற மனிதர்களுக்குச் சாதகத்தையோ பாதகத்தையோ விளைவிக்காத காரியம் எதுவுமில்லை.

ஒரு மனிதன் பரம ரகஸ்யமாகச் செய்யும் சிந்தனைகளும் அவனுக்கும் பிறருக்கும் சாதகத்தையோ பாதகத்தையோ உண்டுபண்ணுகின்றன என்பதை ஒவ்வொருவரும் நினைப்பில் வைத்துக்கொள்ளவேண்டும். ஆகையால் கெட்ட நினைப்புகள் மனத்தில் புகாமல் ஒவ்வொருவரும் மனத்தைக் கட்டுப்படுத்திக் கொள்ளவேண்டும். மனத்தைப்போல் சரீரத்தையும் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும். ஒருவன் என்ன நினைக்கிறானோ அதுவாகி விடுகிறான். ஆகையால் கெடுதியினிடம் ஆசை போகாமல் கண்டிப்பாகத் தடுத்துக்கொள்ள வேண்டும். எவனொருவன் தன்னுடைய இந்திரியங்களையும் காமக் குரோதங்களையும் அடக்கிவிடவில்லையோ, அவன் ஒரு நன்மையும் அடையமாட்டான்.

மனம் தூய்மையாக இருக்கப் பழகினவன் பிறவியின் லட்சியமென்னவென்பதையும் நன்கு அறிந்து கொள்ள வேண்டும். லட்சிய மொன்றில்லாமல் வாழ்வைப் பின் தொடருகிறவன் தன்னுடைய வல்லமைகளை வீணாக்கி முடிவில் படுகுழியில் விழுந்துவிடுவான். சுக்கான் இல்லாத படகு கடலில் இங்குமங்கும் அலைந்து முடிவில் முழுகிப் போய்விடுவதை உதாரணமாகப் பார்த்துக்கொள்ளலாம். பகவானை வழிபடுவதுதான் லட்சியங்களி லெல்லாம் உத்தமமானது. ஸன்மார்க்க விதிகளின்படி வாழ்ந்து, பிரதிப் பிரயோஜனத்தைத் தனக்கு எதிர்பாராமல் பரோபகாரம் செய்வதுதான் கடவுளை வழிபட மேலான வழி. துஷ்டர்களாகவும் அயோக்கியர்களாகவு மிருக்கிற அநேகர் கடவுளுடைய பெயரை வீணாகச் சொல்லித் திரிகிறார்கள். கடவுளுடைய திரு நாமத்தைச் சொல்லும்படிக் கிளிப்பிள்ளைகளுக்குக் கற்பித்து விடலாம். அதிலிருந்து கிளிப்பிள்ளை பகவத் பக்தியுடையதென்று சொல்லிவிட முடியுமா? எல்லா நிலைமைகளிலும் பரோபகாரம் செய்ய முடியும். பரோபகாரமே பிறவியின் லட்சியமென்று கருதுகிற மனிதன் ஸன்மார்க்கியாக இராமலிருக்க முடியாது. உலகத்தின் க்ஷேமமானது ஸன்மார்க்கத்தைக் கடைப்பிடித்து ஒழுகுவதைப் பொறுத்ததாகவே யிருக்கிறது.

மனிதர்களுடைய காரியங்கள் நல்லவையா கெட்டவையா என்று நான் நிதானிக்கையில், உலகத்தின் க்ஷேமத்திற்கு அந்தக் காரியம் ஏற்றதா அல்லவா என்பதையே கவனிக்கவேண்டும். தன்னுடைய வாடிக்கைக்காரர்களை நஷ்டப்படுத்தி வியாபாரி லாபமடையக் கூடாது. வக்கீல்

களும், வைத்தியர்களும் தங்களுடைய உதவியை நாடுகிற வர்களுடைய நன்மையைக் கவனிக்கவேண்டுமே யல்லாமல், தங்களுடைய நன்மையையே கவனிக்கக்கூடாது. தாயார் செல்லங் கொடுத்துக் குழந்தையைக் கெடுத்துவிடக் கூடாது. தகாத வழியில் பணம் சம்பாதித்துவிட்ட வியா பாரி, வக்கில், வைத்தியன் முதலியவர்களைவிட, எழுதப் படிக்கத் தெரியாத கூலிக்காரன் மேலானவன். நம்மில் எவ்வளவு தாழ்வாகவுள்ளவர்களும் இந்தச் சித்தாந்தப் படி வாழ முடியும். ஒருவனுடைய பெருமையானது அவனுடைய பணத்தையும் அந்தஸ்தையும் பொறுத்த தல்ல; ஆனல் அவனுடைய குணத்தையும் நடத்தை யையுமே பொறுத்திருக்கிறது. ஒருவனுடைய குணத்தை நாம் தராசில் போட்டு நிறுப்பதற்கு முன், அவனுடைய மனத்தின் அந்தரங்கத்தைத் தெரிந்துகொள்ள வேண்டும். ஒரு பிச்சைக்காரனைத் தன்னுடைய கண்ணில் படாதபடி செய்ய, ஒருவன் அவனுக்கு ஒரு ரூபாய் கொடுத்து அனுப்பி விடலாம். மற்றொருவன் இரக்கத்தினுல் கால்ரூபாய் கொடுக்கலாம். இவ்விருவரில் பிந்தினவன் கொடுத்தது குறைந்த தொகையே யாயினும், இவன் தான் மேலானவன்.

ஆகையால், துவேஷம் அல்லது சுயநலம் முதலியவை களால் எவனுடைய மனமானது தோஷமடைய வில்லையோ, எவனொருவன் தூய்மையாக வாழ்வதுடன் பரோபகாரம் செய்கிருனே, அவன் தான் ஸன்மார்க்கி; அவன் தான் செல்வன்; அவன் தான் ஸுகி. அப்படி யுள்ளவர்கள் தான் மனுஷ்ய ஜாதிக்கு நன்மை செய்ய முடியும். எல்லா நன்மைக்கும் மேன்மைக்கும் அஸ்தி வாரமாக வுள்ளது ஸத்தியம். பரோபகார காரியங்களில் எது சிறந்ததென்று உண்மையான பரோபகாரிக்குச் சந்தேகமே ஏற்படாது. ஸன்மார்க்கத்தின் மேன்மையை நாம் அறிந்துகொண்டு விட்டோமாயின் நம்முடைய சந்தோஷமானது நம்முடைய ஜயத்தையும் தேக திடத் தையும் கீர்த்தியையும் பொறுத்ததல்ல வென்பது தானுக விளங்கும். எமெர்ஸன் என்ற பண்டிதர் சொல்லி யிருப்பதுபோல், நல்லவர்களுக்கு நேரும் கஷ்டங்களுங் கூட அவர்களுக்குச் சந்தோஷத்தைக் கொடுக்கும். ஆனல் கெட்டவர்களுடைய செல்வமும் கீர்த்தியுங்கூட அவர் களுக்கும் பிறருக்கும் துக்கத்தை உண்டுபண்ணும்.

"பகவானுடைய ராஜ்யத்தையும் அவரது தர்மத் தையும் நாடுங்கள். மற்றவை தாமாக வந்து சேரும்."

# ‘நடமாடுங் கோயில்’

குஜராத் மாகாணத்தில் மிகவும் செழிப்பு வாய்ந்த தாகக் கருதப்படும் பர்தோலி தாலுகாவின் சில பாகங்களில் சுற்றுப் பிரயாணம் செய்த ஒருவர், தாம் ஏழைமையைப் பற்றி நேரில் கண்டவைகளை ‘நவஜீவனில்’ அழகாக எழுதியுள்ளார். அதை மகாதேவ தேசாய் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்திருக்கிறார். இக்கட்டுரை ஒரு கதை-ரூபமாக எழுதப்பட்டுள்ளது. இதன் ஆசிரியர் பாமர ஜனங்களின் உன்னத கவிஞரைச் சீக்கிரம் வரக்கூடியவர். இதில் உண்மையும் கலையழகும் ஒருங்கே விளங்குகின்றன. சம்சயக்காரர்கள் இதைக் கட்டாயம் படித்துப் பார்க்க வேண்டும்.

**எம். கே. காந்தி.**

## I

ஏழைமையின் வடிவத்தில் காட்சி அளிக்கும் இறைவனை—தரித்திர நாராயணனை—நேருக்கு நேராகப் பார்த்து விட வேண்டுமென்று நாங்கள் புறப்பட்டோம். முதலில் வேத்சீ ஆச்ரமத்திற்குப் போனோம்; அங்கு சுனிலால் மேதா என்பவர் சூரத் பழங் குடிகளான ஏழைக் கறுப்பு மக்களுக்கு மனமாரச் சேவை செய்து வருகிறார். ஸ்ரீமதி சுனிலால் எங்களைப் பிரியத்தோடு வரவேற்று, “நீங்கள் ஏழைமைத் தெய்வத்தை வணங்குவதற்காக வந்திருக்கிறீர்கள்; உங்களுக்கு அவர் தரிசனத்தைக் காட்டுகிறோம்” எனக் கூறினார். ஸ்ரீமான் சுனிலால் ‘நூற்போர் பதிவுப் புத்தக’த்திலிருந்து “வேத்சியில் 279, மவேரியாவில் 242, பேதாவில் 213, ரூப்வாதாவில் 103, பவுண்டுகள்” என்றவாறே சுமார் 53 கிராமங்களில் 320 குடிசைகள், 2736, பவுண்டுகள் நூல் நூற்றிருப்பதாகவும், இவ்வளவு தூரம் ஜனங்கள் விடாப் பிடியாகச் சர்க்காவைச் சுழற்றுவதே இப்பாகங்களில் தரித்திர நாராயணன் குடி யிருப்பதற்கு அத்தாட்சி யென்றும் எடுத்துக் காட்டினார். நாங்களோ நேருக்கு நேராக அக் கடவுளைக் காண விரும்பினோம்; வெறும் புள்ளி விவரங்களிலிருந்து அவருடைய இருப்பை அனுமானித்துக்கொண்டு திருப்தியடையத் தயாராயில்லை. பிராம்மணர்களின் காயத்ரியை (சூரிய வணக்கம்) எவ்வளவு முறைதான் ஜபித்தாலும், அதனால் மட்டும் திருப்தியடையாமல் நாம் சூரியனைக் கண்ணாரக் காண விரும்புகிறோமல்லவா?

சுனிலாலும் எங்கள் யாத்திரையில் கலந்து கொண்டார். தங்கமயமான மஞ்சள்நிறப் பருத்தி மலர்கள் ஒளி வீசும் வயல்களூடும், சோளக் கதிர்கள் தங்கள் பசுமையான தலைகளைச் சாய்க்கும் புஞ்சை வெளிகளூடும், சிற்சில இடங்களில் கொத்துக் கொத்தாய் மாம்பூக்களும் கனிகளும் நிறைந்து பாதையைத் தொடும்படி தாழ்ந்துள்ள கிளைகளூடும், எங்களது ஒற்றையடிப் பாதை அமைந்து கிடந்தது. சில குடியானவச் சிறுவர்கள் பரண்களிலிருந்து கவண்கல் எறிந்தும், கூச்சலிட்டும் பறவைகளை ஓட்டிக் கொண்டிருந்தனர். சிலர் வயல்களில் பசுமையான தானியக் கதிர்களைச் சுட்டுக் காலைச் சிற்றுண்டியாக உபயோகித்தனர். "அமோகமான செல்வத்தால் சிரித்துக் கொண்டிருக்கும் இப்பாகங்களில் தரித்திர நாராயணனுக்கு இடமேது ?" என்று நாங்கள் யோசிக்காலானோம்.

அதே சமயத்தில் ஒரு மோட்டார்க்கார் அக்கிராமத்தின் வழியே எங்களையும் தாண்டிச் சென்றது. அதில் உட்கார்ந்திருந்தவர் மிதமிஞ்சிய போகத்தால் தொந்தி தொப்பையோடு பருத்து விளங்கும் சேட் கனவானைப்போல் தோன்றினர். எங்கள் சந்தேகம் முன்னைக் காட்டிலும் அதிகமாய் உறுதிப்பட்டது. பின்னர் ஓர் இளைஞர் குதிரை சவாரி செய்துகொண்டு போனர்; அவருடைய முகத்தில் கலைமகளின் கடாட்சம் லவலேசமும் கிடையாது; பணத்தின் செருக்கு மட்டும் பூர்ணமாய் விளங்கியது. ஆடம்பரமான அயல் நாட்டு ஆடை ஆபரணங்கள், ஏதோ ஒரு பெரிய பண்ணையரின் மகன் என்று அவனுக்குக் கட்டியம் கூறின. எங்கள் சந்தேகம் உச்ச நிலையை அடைந்தது. உண்மையில் இவ்விடங்கள் தரித்திர நாராயணர்களின் வாசஸ்தானமாய் இருக்கவே முடியாது.

ஆனல், அதே விநாடி மற்றொரு வண்டியும் எங்களைத் தாண்டிச் சென்றது; அடுத்தடுத்து ஏழெட்டுப் பார வண்டிகள் அரசமரக் கட்டைகளை ஏற்றிக்கொண்டு போயின. அவ்வண்டிகளை இழுக்கும் மாடுகள் ஓய்வடைந்து தள்ளாடிக் கண்கள் பிதுங்கின. வண்டிக்காரனே அவைகளின் ஓய்வைக் கண்டு கோபமுற்றவனாய்த் தாற்றுக் கோலால் குத்திக் குத்தித் துன்புறுத்தி ஓட்டலானன். அவனது மேனியிலும் எலும்புகள் புடைத்து நெட்டிக்கொண்டிருந்தன. அவ்வண்டிகளும், அவ்வெருதுகளையும் வண்டிக்காரனையும் போலவே கடமுடா வென்று ஆட்டங் கொடுத்துத் தடுமாறின.

வண்டிச் சக்கரங்களின் ஆரக்கால்கள் யாவும் தளர்ந்திருந்தன; அவைகளுள் சிலவற்றைக் கல்முளையிட்டுச் சரியான இடங்களில் பொருத்தி யிருந்தனர்.

ஒரு முகத்திலேனும் நம்பிக்கையின் சிறு கிரணம் கூடக் கிடையாது. பெரிய பெரிய மரங்களை வெட்டி வீழ்த்தி, அவற்றைத் துண்டு துண்டாய்ப் பிளந்து, வண்டிகளில் வரிசை வரிசையாக அடுக்கி—ஆ! அவர்கள் எவ்வளவு கஷ்டப்பட்டிருப்பார்கள்! எனினும் இவைகளை மார்க்கெட்டுகளில் விற்று, அதனால் கிடைக்கும் பளபளவென்று மின்னும் வெள்ளிக் காசுகளைக் கொண்டு, குழந்தை குட்டிகளுக்கும் குடும்பத்திற்கும் எருதுகளுக்குமாகத் தானியம் வாங்குவோம் என்ற ஆசைகூட இங்கு இல்லை. அக்கண்கள் நிராசையால் வெளிறிப் போய் வெறுமையாய்ப் பேந்தப் பேந்த விழித்தன. ஏனெனில் இவ்விறகுக் கட்டைகள் விற்பனைக்காக அல்ல; எந்த ஸாவ்காருக்காகவோ, அல்லது ஏழைகளை நசுக்கும் ஒரு சர்க்கார் உத்தியோகஸ்தருக்காகவோ கொண்டுபோகப் படுபவை. மத்தியானச் சாப்பாட்டிற்குச் சல்லிக்காசைக் கூட அவர்கள் எதிர்பார்க்கவில்லை. தங்களுக்குக் கடினமான சோளரொட்டியும், எருதுகளுக்குப் புல்லும், வீட்டிலிருந்தே கொண்டுவந்திருந்தனர். நம்பிக்கைக்குப் பதில் ஏமாற்றமும் பயமும் அம்முகங்களில் பூர்ணமாய் விளங்கின. "இக்கட்டைகள் போதா என்றால் என்ன செய்வது?" என்று ஒருவன் பயந்தான். மற்றொருவன் சீக்கிரமாகக் கட்டைகளை இறக்கிவிட்டு வீட்டுக்குப் போய்விடவேண்டும்; இல்லையென்றால் இவற்றை அடுக்கச் சொல்லுவர்; ஓய்ந்துள்ள எருதுகளுக்கும் திரும்பவும் வேலை கிடைத்தாலும் கிடைக்கும்!" என்று பலவகையான தந்திரங்களை ஆலோசித்திருக்கக் கூடும்.

அடடா! இது மட்டுமா? இந்த வாழ்க்கைச் சித்திரத்தில் இன்னும் மிகுந்த ஆழமான துக்க வர்ணம் பூசப்பட்டுள்ளது. வண்டிக்காரர்களில் சிலரிடம் சாராயம், அல்லது கள்ளின் கவிச்சு வீசியது. ஒருவன் உயிரற்ற சவம்போல் வண்டியிலேயே குப்புற விழுந்துகிடந்தான். ஒருவன் வெறிமிகுந்து கண்டபடி பிதற்றிக்கொண்டிருந்தான். அந்தோ பாவம்! முன்னமேயே மென்னியைப் பிடிக்கும் கஷ்டம் போதாதென்று குடியையும் வேறு சேர்த்துக்கொண்டனர் போலும்.

இவ்வண்டிகள் எங்களைத் தாண்டிச் சென்றன. வழி நெடுகச் சுனிபாபு ஒன்றுமே பேசவில்லை. அவை

போய்ச் சிறிது நேரமான பிறகுதான், "ஓ! இவை மர வெட்டிகளின் வண்டிக ளல்லவே; தரித்திர நாரா யணரின் ரதங்களல்லவா?" என்று ஞாபகம் வந்தது. ராமரும் லக்ஷ்மணரும் தம் பக்கத்தில் போகும்போது கவனியாதிருந்து, போனபின் அதற்காக வருந்தியதாகத் துளசிதாஸைப் பற்றி ஒரு கதை சொல்லுவர். மகத்தான விஷயங்களோடு சிறிய விஷயங்களை ஒப்பிட முடியு மானால், நாங்களும் அன்று துளசிதாஸ் அடைந்த அதே விசனத்தை இன்று அடைந்தோம்.

இதுமட்டுமல்ல; இன்னும் தரித்திர நாராயணனின் பல வடிவங்களைப் பார்க்கவேண்டி யிருந்தது. நாங்கள் ஜங்கரி என்னும் சிற்றூற்றங் கரையை அடைந்தோம். அங்கு ஒரு சிறு குடிசையின் வாசலில் ஒரு சிறு கூட்டம் உட்கார்ந்திருந்தது—ஒரு கிழவன், கிழவி, சில இளைஞர்கள், பல சிறுவர்கள், சிறுமிகள். அவர்கள் யாவரும் அழுக்குப் படிந்து அசுத்தமாயிருந்தனர். அவ்விடமும் அப்படியே. குடிசையின் கதவு பிளப்புண்டு உடைந்திருந்தது; மண் சுவரில் சிறுவர்கள் செய்த துவாரங்கள். குழந்தைக ளெல்லாம் பூர்ணமான அம்மணங்கள், இளம்பெண் களும் தாய்மார்களும் தங்கள் மானத்தை ஒருவாறு கந்தைகளால் காப்பாற்றி வந்தனர். ஆண்கள் ஒரே ஒரு கோவணமும், கந்தைகளைச் சுருட்டிய தலைப்பாகையும் கொண்டு விளங்கினர். இவைதாம் அவர்களது ஆடையாபரணங்கள். "இப்பெரிய கூட்டம் அச்சிறிய குடிசையில் எப்படி வாழ முடியும்? அவர்கள் ஆகாரம் என்னவோ?"—என்று நாங்கள் ஆச்சரியப்பட்டோம். "அவர்கள் மூங்கில் - கூடை முடைபவர்கள்" எனச் சுனிபாய் கூறினர்.

"அந்தத் தொழிலால் அவர்களுக்கு எவ்வளவு கூலி கிடைக்கும்? இப்போது ஒரு வேலையும் செய்யாமல் இங்கிருக்கிறார்களே? அவர்கள் யாவரும் நதிக் கரையில் இருந்துகொண்டும், இவ்வளவு அழுக்காயிருக்கக் காரணம் என்ன?" என்று எங்களில் ஒருவர் கேட்டார்.

"அதுதான் அவர்களது தரித்திரம்! இங்கு மூங்கிலை ஊறவைப்பதற்காகத்தான் உட்கார்ந்திருக்க வேண்டும்" எனப் பாண்டியாஜி கூறினர்.

"அவர்கள் தீண்டாதார்களிலும் தீண்டாதார்கள்! ஆகவே கிராமத்திற்கு அதிகத் தொலையில்தான் அவர்கள் வசிக்கவேண்டி யிருக்கிறது" எனச் சுனிபாய் விளக்கினர்.

தரித்திர நாராயணனை நெருங்கிப் பார்க்கத் தக்க சமயம் இதுதான் என்று ஒருவர் முடிவு கட்டிவிட்டார். உடனே அக் குடிசைக்குள் போகவேண்டுமென்று அவர் ஆசைப்பட்டார். அவர்கள் தீண்டாதவர்கள் என்ற விஷயம் அவ்வாசையை இன்னும் கூர்மையாகச் செய்தது. "நாம் உள்ளே போய் அவர்களோடு பேசுவோமே!" என்று அவர் சொன்னார்.

சிறுவர்களெல்லாம் தாறுமாருய்க் குடிசைக்குள் ஓடினர். அக்கிழவர் ஒரு கணம் வரை எங்களை அவ நம்பிக்கையோடு உற்றுப் பார்த்தார். நாங்கள் யாவரும் 'ராம நாம'த்தைக் கூறி அவர்களை ஒருவாறு சமாதானப் படுத்தினோம். பாண்டியாஜி தம் கரங்களை நீட்டி அவர் களைத் தழுவிக்கொள்ளத் தயாராயிருந்தார். கிழவன் ஆச்சரியத்தால் திகைத்துப் போனான். ஒரு விநாடி, பாண்டியாஜியின் கண்களை அவனது கண்கள் ஊடுருவின; அக்கண்களில் விளங்கிய அன்பைக் கண்டு, தன்னுடைய மூங்கில்கள் செதுக்கி முரடாயிருக்கும் கரத்தால் அவரது கையைப் பற்றினான். அவனது வாழ்நாளில், அதுதான் முதல் முறையாக அவன் ஒரு பிராம்மணரின் ஸ்பரிசத்தைப் பெறுவது. அந்த ஸ்பரிசத்தின் புனிதத் தன்மையை அவன் உணர்ந்தான்; பிராம்மணனும் தனது முறையில் புனிதம் பெற்றான்!

நாங்கள் பேச ஆரம்பித்தோம். இதற்கு முன் னெல்லாம் அவர்கள் கைக்கும் வாய்க்கும் போதுமான அளவு சம்பாதித்துக் கொண்டிருந்தனர். அப்போது மூங்கில் வெட்டிக்கொள்ள வரி கிடையாது. இப்போதோ வரி கொடுத்தாக வேண்டும். இதுவே அவர்களது மிகக் கொஞ்சமான வரும்படியில் பாதியை விழுங்கி விடுகிறது. தங்கள் கூடைகளோடு கிராமத்திற்கு விற்பனைக்காகப் போகிறார்கள்; அநேகமாக விலையாகாமல் திருப்பிக் கொண்டு வருவதும் உண்டு.

குடிசைச் சுவர்கள் எல்லாம் உளுத்துப்போயிருந்தன. சுவரெழுப்பவேண்டிய கயிறு, புல், நாணல் முதலியவை காசில்லாமலா கிடைக்கின்றன? பின்னர் நாங்கள் உடை களைப் பற்றிப் பேச ஆரம்பித்தோம். வெகு சுலபமாகக் காசில்லாமல் உடைகள் செய்துகொள்ளும் வகையைக் கூறினோம்.

சுனிபாய் சொன்னார்:—"நீங்கள் விலை கொடுத்து வாங்கமுடியாத ஏழைகளாயிருப்பதால் உங்களுக்குச்

சர்க்காவும் பஞ்சும் இலவசமாகத் தருகிறோம்.'' மறுநாள் அக்கிழவன் தனது மூன்று புத்திரர்களோடு வேத்சீ ஆசிரமத்திற்கு வந்தான். நாலு பாக்கிய சக்கரங் களான ராட்டைகள், ஆளுக்கொன்றாக, அக்குடிசையின் நிராசையை நீக்கப் போய்ச் சேர்ந்தன.

ஸ்ரீமதி சுனிலாவும் அவரது பெண்களும் சமைய லறையிலிருந்து ஓடிவந்து வேண்டிய உதவி செய்வதாகக் கிழவனை உத்ஸாகப் படுத்தினர். "கவலைப்பட வேண்டாம்; நானும் என் புத்திரிகளும் நாளையதினம் அங்கு வந்து உனக்கு நூல் நூற்கக் கற்றுத் தருகிறோம். ஆகவே நாளை மாலை எங்களை எதிர்பார்த்திருங்கள்'' என்று கூறினார்கள்.

''நாளையதினம் மார்க்கெட் நாள், நாங்கள் கூடை விற்கப் போகவேண்டும். தாங்கள் நாளைநின்று வாருங்கள்'' என்றான் கிழவன்.

''சரி, நாளை மறுநாள் வருகிறோம்.''

ராட்டை சுழலுவதின் ஆனந்தத்தை அனுபவித் துள்ள ஜீவன் காக என்னும் ஒரு கிழவர் (நதியின் அக் கரையிலிருப்பவர்), "நானும் வந்து உதவி செய்கிறேன். இன்று முதல் பாக்கிய லக்ஷ்மி உங்கள் வீட்டில் குடி புகுந்து விட்டாள்! வந்தனம்'' எனக் கூறினார்.

## II

அடுத்தாற்போல் நாங்கள் வேறு திசையில் யாத்திரை புறப்பட்டோம்.

வேத்சீயிலிருந்து இருபதாவது மைலில், பாரட்டு, ராணி பராஜ் கிராமங்கள் இருக்கின்றன. சில ஓட்டு வில்லை வீடுகளும் (அதாவது போதுமான செல்வத்தின் அறிகுறிகள்), மிச்சமுள்ள பல ஓலை வேய்ந்த மண் வீடு களும் கூடியது அந்தக் கிராமம்.

எங்களைப் போன்றவர்கள், சர்க்காவின் புனிதமான செய்தியைக் கொண்டு செல்பவர்கள், முதல் முதலாக ஓட்டு வில்லை வீடுகளுக்குத்தான் போவது வழக்கம். ஏனெனில் அவ்விடங்களில் வரவேற்பு உண்டு; ஒருவகை யாகச் சர்க்காவின் செய்தியும் அவர்களுக்குத் தெரியும்.

ஆனால் எங்களில் அடக்க முடியாத ஆர்வமுடைய ஒருவர் பார்த்தவர்களை யெல்லாம், "உங்களில் ஏழையி லும் ஏழை யார்?'' என்று கேட்டுக்கொண்டே யிருப்பார்.

ஆதலால், ஸ்ரீ ரான்சாத் தூலிபா எங்களை ஒரு பரம ஏழையிடம் கூட்டிக்கொண்டு போனார். அந்தியின் செவ்வானம் சிறிது சிறிதாக மறைந்துகொண்டிருக்கிறது, இருள் எட்டிப் பார்க்கிறது. எங்களில் சிலருக்குச் செருப் பில்லை. வழியிலுள்ள முட்கள் சிலரைப் பயமுறுத்தின. கடைசியில் ஒரு குடிசைமுன் நின்றோம்; உள்ளே ஒரே இருட்டு.

"யார் உள்ளே?"

இப்போதுதான் ஏதோ ஒரு சிறு விளக்குத் தென் படுகிறது. ஒரு நோயாளி கிழிந்த கந்தலான ஒரு பாயின்மேல், தனது போர்வையற்ற வெற்றுடலோடு அங்கங்களைக் குறுக்கிக்கொண்டு படுத்துக் கிடந்தான். அவனுக்குப் பக்கத்திலிருந்த மண் - அடுப்பில் நெருப்பு எரிந்து கொண்டிருந்தது; அவன் உடலிலும் அப்படியே! அவனது கால் - பக்கம் மனைவி கோமதி உட்கார்ந் திருந்தாள். அவர்களது இரு குழந்தைகளும் அடுப்பைச் சுற்றி அமர்ந்திருந்தன.

நாங்கள் நோயாளியைப் பரிசோதித்து, உபதேசிக்க லானோம்:—"அவனுக்குச் சாப்பிட இன்றிரவு ஒன்றும் தரவேண்டாம். பட்டினி, வயிற்றின் கனத்தையும், காய்ச்சலின் கனத்தையும் ஒருங்கே குறைத்து உடம்பைச் சொஸ்தமாக்கிவிடும்!" அந்தோ! அவள் ஏதாவது கொடுக்க எண்ணியிருந்தாலும், சாப்பாடே வீட்டில் இல்லாமையால் அது முடிந்திருக்காதே!—என்ற விஷயம் எங்களுக்குத் தெரியாது. கோமதி அந்த அடுப்பு நெருப் பைத் தூண்டிக் கொண்டே யிருந்தாள். உலர்ந்த சருகு களால் அடிக்கடி தூண்டப்பட்டு எரிந்த அடுப்பின் ஒளி அக்குடிசை முழுதும் நிரம்பியது. அவளது முகத்தி லும் ஒரு புன்னகை தவழ்ந்தது; அதன் ஒளியில் அக் குடிசை மேன்மையாய்த் தோன்றியது.

"விளக்கில்லையா?"

"எண்ணெய்க்கு என்ன செய்வது?"

"இன்று வேலைக்குப் போனாயா?"

"எனக்கென்று வேலை யென்ன, காத்துக் கிடக் கிறதா?"

"இன்று காலைச் சாப்பாட்டுக்கு என்ன செய்தாய்?"

"எப்படியோ சாப்பிட்டோம்; எதிரிலிருக்கும் அடைப்பில் விளையும் சில தானியங்களைப் பொறுக்கிக் கஞ்சி காய்ச்சிக் குடித்தோம்."

"நாளையதினம் சாப்பாடு எது?"

"இன்றைக்குப் போலத்தான் நாளையும். வயலில் இன்னும் சில கதிர்கள் விடப்பட்டுள்ளன; அவைகளால் இன்னும் கொஞ்ச நாள் தாட்டலாம்."

அந்த அடைப்பென்பது சரியாக உழுது விதைக்கப் பட்டவை யல்ல! அங்கு மிங்குமாக மழைக்காலத்தில் தெளித்திருந்த சிற்சில விதைகளிலிருந்து விளைந்த சோளக்கதிர்கள் தானுண்டு. அவள் சொல்வதை யெல்லாம் நாங்கள் கவனமாய்க் கேட்டோம்; எனினும் எங்களுடைய ஹிருதயங்கள் உருகவில்லை. அவளது புன் சிரிப்பில் துயரம் மறைந்திருந்தது. ஆகவே எங்கள் கருணையற்ற ஆராய்ச்சியை நாங்கள் பின்னும் தொடங்கினோம்.

"உங்கள் பகல்-சாப்பாட்டுக்கு என்ன செய்தாய்?"

"ஏதோ கிடைத்ததை உண்டு காலம் கழித்தோம்!"

அவள் தன்னுடைய துன்பச் சரிதையைக் கடவுளிடமன்றி மற்றவரிடம் முறையிட விரும்பவில்லை. அவளது தன்மதிப்பை அறியத் தகுந்த கூர்மையான உணர்ச்சி எங்களிடமில்லை. ஆகவே, "அது சரி! என்னதான் சாப்பிட்டீர்கள்? சொல்லக்கூடாதா?" என்றோம்.

"பகல்-சாப்பாட்டுக்கென்று நாங்கள் எங்கே போவது? காலையில் வடித்த பழங் கஞ்சியின் மிச்சத்தைக் குழந்தைகளுக்கு வார்த்தோம்."

"அப்படியானால் உங்கள் வீட்டில் ஆகாரமே யில்லையா? நீங்களெல்லாம் பட்டினியா?"

அவளது தன்மதிப்புக் கரைந்து விட்டது! நாங்கள் 'காந்தி மனிதர்கள்' என்பதால் எங்களிடம் அவளுக்கு நம்பிக்கை பிறந்தது. உடனே அம் மண்-அடுப்பில் எரிந்துகொண்டிருந்த ஒரு சுள்ளியைப் பந்தமாகப் பிடித்துக்கொண்டு, "வாருங்கள், வீடு முழுவதும் 'ஆகாரம் இருக்கிறதா?' என்று சோதித்துப் பாருங்கள்" என்று கூறி முன் நடந்தாள்.

எங்களுடைய அரவத்தால் பயந்த ஒரு சேவல் ஒரு மூலையில் பதுங்கியது. எங்களில் ஒருவர் கேட்டார்: "ஓ! நீங்கள் முட்டை விற்றுப் பிழைக்கிறீர்களோ?"

தளராத மனோ திடத்துடன் அவளும், "ஓஹோ! சேவல்தான் முட்டையிடுமா?" என்று கூறி, ஒருவேளை இவ்வார்த்தைகளைத் துடுக்கானவை என்று நினைக்கா

திருக்க வேண்டுமே என்று பயந்தவள் போல், "அநேகர் வீட்டில் கிளி வளர்த்துவருகிறார்கள்; நாங்கள் கோழி வளர்த்துவருகிறோம். குழந்தைகளுக்கு இது ஒரு விளையாட்டாய் இருக்கிறது: வீட்டுக்கும் அழகு!" என்றாள்.

அக்குடிசையின் மூலை முடுக்கிலெல்லாம் தேடிப் பார்த்தோம். வீண்; அங்கு ஆகாரமே கிடையாது. இப்போதுதான் எங்களுக்கு அவளது வறுமையின் ஆழம் விளங்கியது. "உன்னால் மட்டுமே இப்பெருந் துயரை முணுமுணுக்காது பொறுத்துக்கொள்ளமுடியும். கடவுள்தான் உனக்குக் கதி! ஏன்? ராட்டையும் உன்னுடைய கதிதான்!"

* * *

இவ்வாறே தரித்திர நாராயணனைச் சேவை செய்துவிட்டு நாங்கள் வீடு திரும்பினோம். வழியில் ஒரு துபலாவின் குடிசை இருந்தது. அவ்வீட்டுத் தலைவி தன்னுடைய குழந்தைக் கூட்டத்துடன் முற்றத்தில் ஒரு கணப்பைச் சுற்றி உட்கார்ந்திருந்தாள். எங்களைப் பார்த்ததும் குழந்தைகள் குடிசைக்குள் புகுந்துகொண்டன; தாய் வரவேற்க எழுந்து நின்றாள்.

"காலைச் சாப்பாட்டுக்கு என்ன செய்தாய்?" என்று நாங்கள் கேட்டோம். அவளும் சந்தோஷத்தோடு "பருப்பும் சோறும்" என்றாள். "கோமதியைக் காட்டிலும் இவள் பரவா இல்லை" என்று நாங்கள் நினைக்கும்போதே மேலே ஒருவர் பல கேள்விகளைத் தொடுத்துவிட்டார்.

"காலைச் சாப்பாட்டுக்கு என்ன செய்தாய்?"

"சோறும் பருப்பும்."

"மத்தியானத்திற்கும் அதேதானா?"

"ஆம், காலை ஆகாரத்தில் கொஞ்சம் பாக்கியிருந்தது."

"காலையில் எவ்வளவு ஆக்கினாய்?"

"இரண்டு பவுண்டு."

ஆகவே இரண்டு பவுண்டு சாதத்தில்தான், தன் ஏழு குழந்தைகளுடன் எல்லோரும் காலை ஆகாரம் உண்டு மத்யானத்திற்கும் மிச்சம் பண்ணிச் சாப்பிட்டிருக்கிறார்கள்!

"உன் புருஷன் எங்கே?"

"எஜமான் கூப்பிட்டாராம், போயிருக்கிறார்."

அந்த எஜமானனை எங்களில் ஒருவருக்குத் தெரியும். இவ்வேழைக் குடும்பம் அந்த எஜமானனுக்கு அடிமையானது அவருடைய கொடுமைக்கு ஆற்ருது இவ்வீட்டுத் தலைவன் ஓடிப்போனுன். அப்படியும் அவனைத் தேடிப் பிடித்து விட்டனர். பின்னர் அவனுக்கு என்ன நேர்ந்ததென்பது சொல்லித் தெரியவேண்டிய விஷயமல்ல.

இத்துன்பங்கள் போதா என்று நாங்கள் மற்ெருரு கேள்வி கேட்கலானேம்.

“இன்று நீ வேலைக்குப் போகவில்லையா?”

“நான் எப்படிப் போகமுடியும்? போய்விட்டால் குழந்தைகளைக் கவனித்துக் கொள்வது யார்?”

எங்களால் மேலே பேச வாயெழவில்லை. எனினும் ஒருவாறு தேறி, “ஒரு ராட்டையிருந்தால் உன் குழந்தைகள் விளையாட்டாய் அதில் நூற்கலாம்; உனக்கும் கொஞ்சம் செப்புக் காசுகள் வரும்படி கிடைக்குமே” எனக் கூறினேம்.

## III

ராணி பராஜ் பிரதேசத்தில் நாலு நாள் சுற்றியடித்த பின் நாங்கள் எங்கள் மாணவன் ஒருவனது கிராமத்திற்குப் போனேம். தன் கிராமத்தில் தங்கிப்போக வேண்டுமென்று அவன் மன்ருடினுன். அவன் எங்கள் மாணவர்களுள் மிகச் சிறந்தவன்; சிக்கலான விஷயங்களையும் அறியும் திறமை வாய்ந்தவன். அவனுடைய வீட்டாரின் நிலைமை இங்கு ஒருவருக்கும் தெரியாது. அக் கிராமத்தில் தங்கிய பிறகுதான் அவனது தந்தை குடிப் பழக்கத்தால் மோசமான நிலையிலிருப்பதாக எங்களுக்குத் தெரியும்.

ஆகவே நாங்கள் அவன் வீட்டுக்குப் போனேம். அவனும் அவனது சகோதரர்களும் தகப்பனது குடிப் பழக்கத்தைக் கண்டித்ததால், தாயும் தகப்பனும் தனியே குடியிருந்தனர்.

எங்கள் நேசச் சிறுவன் தனக்கென்று ஒரு குடிசை கட்டிக்கொண்டு அதில் வாழ்ந்து வந்தான். கலையழகில் அக் குடிசை ஓர் அரண்மனையையும் வெட்கமடையச் செய்யும்; ஈச்ச மடல்களால் மிக அழகாய்ப் பின்னிக் கூரை வேய்ந்திருந்தான். அக்குடிசை முழுவதும் கட்டி முடியும் தருணத்தில் பர்தோலி ஆச்ரமத்தில் துணி நெய்யும் வகுப்பு ஆரம்பித்திருப்பதாய்க் கேள்வியுற்று உடனே அங்கு வந்து

விட்டான். இம்மாணவனின் உபாத்தியாயரான எங்களில் ஒருவர் அவனது தகப்பனுரைக் கேட்டார்:

"உன் பையன் எங்கள் பள்ளிக்கூடத்தில் சேர்ந் திருப்பது உனக்குத் திருப்தி தானே?"

"கிடைத்ததைக் கொண்டுதானே திருப்தி யடைய வேண்டும். அவனுக்கென்ன, எங்களைப்பற்றிய கவலை தான் கிடையாதே! அவனுடைய வேலை எப்படி எங்க ளுக்கு உதவ முடியும்? எனக்கோ கடன் அதிகம்; இன் னும் எவ்வளவு நாள் இக்கடன் சுமையைத் தனியாக நான் சுமப்பதோ?"

அதில் ஆச்சரியமென்ன?

பிறகு, எப்படி யெப்படித் தனக்குக் கடன் ஏற்பட்ட தென்று முழுவதையும் கூறினுன் அவன். தன்மேல் குற்ற மில்லாமலே ஒரு குடியானவனுக்குக் கடனேறிப்போகும் வகை இன்னதென்று நான் சொல்லவேண்டிய அவசிய மில்லை.

"இப்போது பையனுல் உனக்கு எவ்வாறு உதவி செய்யமுடியும்? அவன் ஏதாவது தொழில் கற்றுக் கொண்டு அதனுல் சம்பாதிக்க ஆரம்பித்தால் கடனைச் சீக்கிரம் ஒழித்துவிடலா மல்லவா?" என்று எங்களில் ஒருவர் கிழவனைக் கேட்டார்.

ஆனுல், எங்களுக்கு அக்கிழவனது எண்ணம் தெரிய வில்லை. கடனைப் பொறுத்தவரையில் அதைக் கொஞ்சங் கொஞ்சமாய்த் தானே ஒழித்துக்கொண்டு வருகிருன். ஆனுல் அடிக்கடி கடன்காரர்களின் தொந்தர வையும் வசவுகளையும் அவனுல் பொறுக்கமுடியவில்லை. பையன் தனக்காக அவைகளை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதுதான் அவனது ஆசை. அக்கிழவனைச் சாந்தப் படுத்த ஒரு வழியும் தெரியவில்லை. பையனே பிடி வாதமாய் வீட்டுப் பக்கமே கால் வைக்க மாட்டேனென்கி ருன்! அப்படித்தான் வீட்டுக்குத் திரும்பினுலும் அவனுல் தகப்பனுக்கு என்ன உதவி செய்ய முடியும்?

அவனது கஷ்டத்தை நீக்க ஒரு வழியும் தெரியா திருக்கும்போது, புண்பட்டு நொந்து கிடக்கும் அவனுடன் நாங்கள் பேச விரும்பவில்லை. எனினும் நாங்கள் கேள்வி கேட்டோம்; அவனேடு வாதம் பண்ணினேம். எல்லா வற்றிற்கும் அவன், 'ஆம், ஆம்' என்றே தலையாட்டி வந்தான். ஆகவே கடைசியில்,

"சரி, அப்படியானால் இதுமுதல் குடியை விட்டுவிடு வாயா, இல்லையா?" என்று கேட்டோம்.

கிழவன் சற்றுத் தயங்கினான். நாங்கள் திரும்பவும் அதே கேள்வியைக் கேட்டோம். பிறகு சற்று ஆலோசித்து, "முடியாது!" என்றான்.

"ஏன்? முடியாதென்றா கூறுகிறாய்?"

"ஆம், அது முடியாது!"

"உன் புத்திரனுக்காகவாவது நீ அதை விட்டுவிடக் கூடாதா?"

"புத்திரனுக்கும் என்மேல் வாஞ்சையிருக்க வேணும்; இங்கு வந்து, என்னோடு குடியிருந்துகொண்டு என் கஷ்டத்தில் பங்கெடுத்துக் கொண்டால் நான் குடியை விட்டு விடுகிறேன்."

கொஞ்ச காலத்திற்குப் பையன் வீட்டுப் பொறுப்பையெல்லாம் ஏற்றுக் கொண்டிருந்தான்; அப்போதும் தகப்பன் குடியை விடவில்லை; ஆகவே தகப்பனை மகன் 'நம்ப முடியாது!' என்றான்.

கிழவன் குடியை விட்டுவிடத் தயங்குவதின் காரணம் பின்னால்தான் எங்களுக்கு விளங்கியது. அவனைச் சுற்றிக் குடியர்கள். அக்கிராமத்தின் மூலை முடுக்குகளில் எல்லாம் கள்ளுக் கடைகள்! அவன் பூர்ணமாக மதுவிலக்குச் செய்துவிட்டால், குடியர்கள் பாஷையில் 'பக்த'னாகி விட்டால், அவர்களெல்லோருடைய கோபத்திற்கும் ஆளாவான்; அவனுக்கு வேலை கிடைக்காது. திட்டு, கேலி முதலியவைதான் அவன் பங்குக்குக் கிடைக்கும். அவன் குடியனாயிருக்கும் வரையில், உள்ள வேலைக்கு ஆபத்து வராது!

பையன் தகப்பனைச் சாந்தமாய்க் கேட்கலானான்:

"ஆமாம், அப்பா! கள்ளுக் கடைக்காரர்கள் நம்மைக் குடிக்கச் சொல்லுகிறார்களே, அவர்கள் தாங்களே குடிக்கிறார்களா?"

"வாஸ்தவம், குடிப்பதில்லை; எனினும் அவர்களது கோபம் பொல்லாது!" என்று பின்னும் கிழவன் சொன்னான்: "மேலும் குடிக்காக நாம் பணம் செலவு செய்வதில்லையே! நாம் அவர்களுக்குச் செய்யும் வேலைக்குக் கூலியாக அல்லவா அது கொடுக்கப்படுகிறது?"

பையனுடைய தாங்கமுடியாத கவலையையும், அதனிடையிலும் பையன் அமைதி தவருதிருப்பதையும் பார்த்து நாங்கள் ஆச்சரியமுற்ருேம். எங்கள் ஆசிரமத்திலேயே முதல்தரமான மாணவன் அவன் தான்.

கிழவனைச் சீர்திருத்துவது அசாத்தியமெனத் தோன்றியது. கப்பல் கவிழ்ந்து கடலில் விழுபவனுக்கு ஒரு சிறு கட்டுமரத்தை உதவிக்குத் தருவது போலத்தான் அவனுக்கு ராட்டையைக் கொடுப்பதும். எனினும் நாங்கள் தயங்கவில்லை, எங்கள் கடமையைச் செய்து விட்டோம்.

கள்ளுக்கடைகளை மூடிவிட்டால்,—ஆ! இந்த ஜனங்கள் எவ்வளவு சுபிட்சமாக வாழ்வர்!

'தரித்திர நாராயண'னை நேருக்கு நேர் பார்த்து விட்டோம்; எனினும் திருப்தி யில்லை! எத்தனை வகையான துயரங்களில் தெய்வம் 'தரித்திர நாராயணர்' களாகக் காட்சி யளிக்கிறது! அவைகளை யெல்லாம் பார்க்க முடியுமா? எனினும் பார்த்த இரண்டொரு காட்சிகளே மனத்தை உருக்கிப் பரிசுத்தப்படுத்தப் போதுமானவை. "இத்தகைய அனுபவங்களின்மீதுதான் காந்திஜி சர்க்காவைக் கண்டு பிடித்திருக்க வேண்டும்" என்று எங்களில் ஒருவர் சொன்னுர்.

மற்றொருவர் சொன்னுர்: "வாஸ்தவம். அவருடைய அனுபவம் நமக்குப் போதவில்லை. நாமே நேரில் பார்த்த பிறகுதான் நமது ஹிருதயம் சர்க்காவை ஒப்புக் கொள்ளுகிறது."

3591

★

The Indian Express Branch Press, Mt. Rd., Madras.

## தினமணி வெளியீடு

### இலக்கிய ஆலோசனையாளர்கள்

ஸ்ரீமதி. எஸ். அம்புஜம்மாள்,
ஆழ்வார்பேட்டை, சென்னை

திரு. கி. சந்திரசேகரன்,
மயிலாப்பூர், சென்னை

,, ஏ. என். சிவராமன்,
"தினமணி" ஆசிரியர்

,, கே. சுவாமிநாதன்,
ஆங்கிலப் பேராசிரியா,
ப்ரெஸிடென்ஸி காலேஜ், சென்னை

,, டாக்டர் டி. எஸ். திருமூர்த்தி,
நுங்கம்பாக்கம், சென்னை

,, கே. ஏ. நீலகண்ட சாஸ்திரியார்,
சரித்திரப் பேராசிரியர்,
சென்னை யூனிவெர்ஸிடி

,, ஸி. என். முத்துரங்க முதலியார்,
பேட்டை, செங்கற்பட்டு ஜில்லா

,, ஏ. வி. மெய்யப்ப செட்டியார்,
ஸரஸ்வதி ஸ்டோர்ஸ்,
பிரகதி பிக்சர்ஸ், சென்னை

,, எஸ். வையாபுரிப் பிள்ளை,
தமிழ் ஆராய்ச்சித் தலைவர்,
சென்னை யூனிவெர்ஸிடி

# தினமணி வெளியீடு 3591

பதிப்பாசிரியர்: பி. ஸ்ரீ.

| | | | ரூ. | அ. |
|---|---|---|---|---|
| 1. | மகாத்மா காந்தி—நினைவு மாலை [2-ம் பதிப்பு] | ... | 0 | 12 |
| 2. | ரவீந்திரநாத டாகூர் | ... | 0 | 8 |
| 3. | கைலாஸம்-மானஸஸரோவர் (பிரதிகள் கைவசமில்லை) | | 0 | 8 |
| 4. | போலந்து—பின்லந்து | ... | 0 | 12 |
| 5. | சிறு கதை மஞ்சரி | ... | 1 | 0 |
| 6. | ஹாஸ்ய நாடகங்கள், கட்டுரைகள் | ... | 2 | 0 |
| 7. | தில்லைக் கோவிந்தன் | ... | 1 | 0 |
| 8. | அன்னை கஸ்தூரிபா | ... | 0 | 12 |
| 9. | முன்னிலா | ... | 0 | 12 |
| 10. | தளவாய்த் தாத்தா (அரியநாயக முதலியார்) | ... | 0 | 12 |
| 11. | மௌலானா ஆஜாத் | ... | 1 | 0 |
| 12. | கதை வனம் | ... | 1 | 0 |
| 13. | நவ ரஸங்கள் | ... | 0 | 12 |
| 14. | வீர ரஷ்யா (பாகம் I) | ... | 0 | 12 |
| 15. | காந்தியத் திட்டம் | ... | 1 | 8 |
| 16. | தற்காலப் போர்க் கருவிகள் | ... | 1 | 0 |
| 17. | கதா நாடக மஞ்சரி | ... | 0 | 8 |
| 18. | வீர ரஷ்யா (பாகம் II) | ... | 0 | 8 |
| 19. | கபீர்தாஸர் | ... | 0 | 8 |
| 20. | ஐசுவரிய அமெரிக்கா | ... | 0 | 8 |
| 21. | தஞ்சை நாயக்கர் | ... | 0 | 8 |
| 22. | ஜீவ கலை | ... | 0 | 8 |
| 23. | அமிர்த சந்திரன் | ... | 1 | 0 |

(ஒவ்வொன்றுக்கும் தபால் செலவு பிரத்தியேகம்)

| | | |
|---|---|---|
| சீனு | ... | அச்சில் |
| ஜனநாயகப் பிரச்னைகள் | ... | அச்சில் |
| புரட்சி முரசு அல்லது இரட்டை நீதி | ... | அச்சில் |
| என் தந்தையார் | ... | அச்சில் |